“

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;

(அல்குர்ஆன் 4 : 1)

”

بسم الله الرحمن الرحيم


காஸா போர் – மீண்டும் இஸ்ரேல் வீழ்ந்தது எப்படி? - 4
இஸ்ரேலை ஹமாஸ் வென்றது எப்படி? - 17
இஸ்ரேல் காஸா போருக்குப் பின்னாலான நிகழ்வுகள் - 24
சாதனைப் பெண் – முஜாஹிதா சமீரா முஹையித்தீன் - 25
உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 29
நூல் அரங்கம் - 34
இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) - 42
புனித தீன் கவியரங்கில் புகழுடன் புகுந்த கவிக்கோ - 47
நானும் இந்துதான் - 51
குர்ஆனின் வசன அமைப்புகள் (பாகம்-2) - 53
ஔரங்கசீப் ஆட்சியில் துப்பறியும் இலாகாவின் திறமை - 57
சிலுவைப்போர்கள் 2.0 - 59
முஸ்லிம்களுக்கு உதவியதால் அச்சத்தில் இந்துக்கள் - 61
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 64
தீவிரவாத முத்திரையில் இருந்து விடுதலை செய்யப்படும் முஸ்லிம்கள் - 67
மகளிர் மன்றம் - 72
மருத்துவம் - 76
தலையங்கம் - 78
பிரெஞ்சை அதிர வைத்த கடிகாரம் - 82



ஜுன், ஜுலை-2021

# வைகறை வெளிச்சம்

துல்காயிதா, துல்ஹஜ் 1442

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A., Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady, Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



## காஸா போர்

# மீண்டும் இஸ்ரேல் வீழ்ந்தது எப்படி?

### பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றம்

கி.பி. 637 ஆம் ஆண்டு. கலீஃபா உமர் (ரழி) அவர்கள் ஜெருசலத்திற்கு வந்தார்கள். அவர்கள் ஜெருசலம் வந்ததற்கு காரணம் உண்டு. முஸ்லிம்களின் படை காலித் இப்னு வலீத் மற்றும் அம்ருப்னு அல் ஆஸ் அவர்களின் தலைமையில் ஜெருசலேமை முற்றுகையிட்டது. நகரத்தின் தலைமை கிறித்தவ குருவும் பைசாந்திய அரசின் பிரதிநிதியுமான ஸோப்ரானியஸ் என்பவர் கலீஃபா உமர் (ரழி) அவர்களிடம் மட்டுமே ஜெருசலத்தை ஒப்படைப்பேன் என்று உறுதியாக கூறிவிட்டார். இந்த தகவல் உமர் (ரழி) அவர் களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை உமர் (ரழி) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் காரண மாகவே உமர்(ரழி) அவர்கள் ஜெருசலத்திற்கு வந்தார்கள். இப்போது உமர்(ரழி) அவர்களின் கரங்களின் ஜெருசலம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட பின்னர் கலீஃபாவுக்கும் ஸோப்ரானியசுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. உமரின் உடன்படிக்கை என்று வரலாற்றில் அழைக்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒப்பந்தத்தில் பல விஷயங்கள் கூறப்பட்டிருந்தன.

சென்ற மே மாத வைகறை வெளிச்சம் இதழில் “ஹமாஸ் – இஸ்ரேல் போரைப் பற்றிய கட்டுரை ஒன்றை இடம் பெறச் செய்திருந்தோம். ஆனால், மே-2021 இதழை கொரோனாவினால் அச்சுக்கு அனுப்பவில்லை. அதனை இணைய தளத்தில்தான் வெளியிட்டோம். வாசகர்கள் பலர் வேண்டுகோளுக்கிணங்க, அந்தக் கட்டுரைகளையும் இணைத்தே இந்த ஜுன் இதழை அச்சிட்டுள்ளோம். இந்த இதழில் இன்னும் பல அரிய தகவல்கள் அடங்கிய கட்டுரை ஒன்றை அபூ அஃப்ரஹ் இணைத்துள்ளார். உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும், மகளிர் மன்றம் ஆகியவற்றையும் மே மாத இதழ் கட்டுரைகளையும் இணைத்துத் தருகின்றோம்.

– ஆசிரியர்

### உமரின் ஒப்பந்தம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்..

இறைவனின் ஊழியனும் இறை நம்பிக்கை

யாளனின் தளபதியுமான உமர் ஜெருசலேம் மக்களுக்கு அளித்த பாதுகாப்பிற்கான உறுதி மொழி இது. அவர் ஜெருசலேம் நகர மக்கள், அவர்களின் சொத்துக்கள், அவர்களுடைய தேவாலயங்கள், சிலுவைகள், நகரத்தின் பலஹீன மானவர்கள், ஆரோக்கியமானவர்கள், அவர்களுடைய மதம் சார்ந்த அனைத்து சடங்குகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பிற்கான உறுதி மொழியை அளித்துள்ளார். அவர்களின் தேவாலயங்களை முஸ்லிம்கள் வசிப்பதற்காக எடுத்துக்கொள்ளவும் மாட்டார்கள். அவை அழிக்கப் படவும்மாட்டாது. அவர்களோ, அவர்கள்நிற்கும் நிலமோ, அவர்களுடைய சிலுவைகளோ, அவர்களுடைய சொத்துக்களோ சேதப்படுத்தப்பட மாட்டாது. அவர்கள் பலவந்தமாக மதமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். ஜெருசலத்தில் அவர்களுடன் சேர்ந்து எந்த யூதர்களும் வசிக்க மாட்டார்கள்.

இன்னும் சில விஷயங்களும் அந்த ஒப்பந்தத்தில் உண்டு. ஆனால் முக்கியமாக கவனிக்க வேண்டிய வரிகள் என்னவென்றால் ஜெருசலத்தில் உள்ள கிறித்தவர்களோடு யூதர்கள் வசிக்க மாட்டார்கள் என்பதே. அதாவது யூதர்கள் ஜெருசலத்தில் வசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதே அதன் அர்த்தம். அந்நேரத்தில் ஜெருசலத்தில் யூதர்கள் ஒருவரும் வசிக்க அனுமதிக்கப்படவில்லை.

## கடவுளைக் கொலை செய்தவர்கள்

யூதர்கள் ஏசுவை சிலுவையில் அறைந்து கொன்றதாக கிறித்தவர்கள் நம்பினார்கள். முதலில் பலமின்றி இருந்த கிறித்தவர்கள் கான்ஸ்டான்டைன் நோபுள் என்ற ரோம மன்னர் கிறித்தவத்தை ஏற்று ரோமாபுரியின் மதமாக கிறித்தவத்தை அறிவித்த பின்னர் கிறித்தவர்கள் பலம் பெற்றனர். தங்களின் கடவுளை கொலை செய்தவர்களை தேடித் தேடி கொலை செய்தனர். அவர்களை அடித்து விரட்டினர். இதுவே தங்களுடன் ஜெருசலத்தில் யூதர்களை வசிக்க அனுமதிக்கக்கூடாது என்ற கிறித்தவர்களின் கோரிக்கைக்கு காரணம். இதன் பின்னர் சிலுவைப்போர்களின் போதும் யூதர்கள் பெருமளவில் கிறித்தவர்களால் கொலை செய்யப்பட்டனர். இதன் பின்னர் யூதர்களை அவர்கள் அசிங்கப்படுத்தும் நோக்கில் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டனர்.

இதன் ஒரு பகுதியாக யூதர்கள் வசித்த இடங்களில் அவர்கள் புனிதமாக கருதிய இடங்களில் பைசாந்தியர்கள் மற்றும் ஜெருசலேமை சேர்ந்த கிறித்தவர்கள் தங்கள் பெண்களின் மாதவிடாய் துணிகளை கொட்டும் குப்பைக் கிடங்காக்கி வைத்திருந்தனர். இவ்வளவு அவமானப்படுத்திய கிறித்தவர்களை யூதர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர்கள் தங்கள் முந்தைய வேதங்களில் குறிப்பிடப்பட்டிருந்த ஒருவருக்காக காத்திருந்தனர். அவர்களுக்கு சொல்லப் பட்டிருந்த அடையாளம் என்னவென்றால் இஸ்மவேலர்களின் இரண்டாவது மன்னர் (உமர் (ரழி)) யூதர்களின் மேல் பிரியமானவராயிருப்பார்.

எனவே, யூதர்கள் உமர் (ரழி) அவர்களை அணுகி யூத குடும்பத்தினர் 200 பேர் ஜெருசலத்தில் வசிக்க அனுமதி கோரினர். தாங்கள் யாருக்கும் எந்த வகையிலும் இடையூறு செய்ய மாட்டோம் என்று உறுதிமொழி அளித்தனர். ஆனால் ஏற்கனவே கிறித்தவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த காரணத்தால் உமர் (ரழி) அவர்கள் கிறித்தவர்களை அணுகி பேசினார். உமர் (ரழி) அப்போது இஸ்லாமிய ஆட்சியின் ஒரே தலைவர். கிறித்தவர்களோ அவரிடம் சரணாகதி அடைந்தவர்கள். அவருடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டவர்கள். உமர் (ரழி) அவர்கள் நினைத்திருந்தால் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி நான் சொல்வதை நீங்கள் செய்து தான் ஆக வேண்டும் என்று உத்தரவிட்டிருந்திருக்கலாம்.

ஆனால், பகைமை கொண்ட இரு வெவ்வேறு மதத்தினரை அருகருகே குடியேற்ற வேண்டுமெனில் அவர்களிடையே சமாதானத்தை உருவாக்கிய பின்னரே குடியமர்த்த வேண்டும். அப்போது தான் கால காலத்திற்கும் சண்டை சச்சரவின்றி அவர்கள் வாழ இயலும் என்பதை உமர்(ரழி) அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மேலும் கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதை இஸ்லாம் தடுத்துள்ள போது உமர் (ரழி) அவர்கள் எப்படி அதனை மீறுவார்கள். கொடுத்த வாக்கையும் உடன்படிக்கையும் மீறுவதற்கு அவர் இறைநம்பிக்கை அற்றவர் அல்லவே.

எனவே, உமர் (ரழி) அவர்கள் கிறித்தவர்

களிடம் சமாதானம் பேசினார். யூதர்களுக்காக நீண்ட நேரம் பேசினார். கிறித்தவர்கள் உமர்(ரழி) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் உத்தர வாதத்திற்கிணங்கவும் 50 யூத குடும்பங்களை குடியமர்த்த ஒப்புக்கொண்டனர். ஆனால் யூதர்கள் மீண்டும் உமர் (ரழி) அவர்களிடம் கெஞ்சினர். குறைந்தபட்சம் தங்களில் 100 குடும்பத்தையாவது தங்க வைக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். உமர் (ரழி) அவர்கள் மீண்டும் கிறிஸ்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியாக 70 குடும்பங்களுக்கு ஜெருசலத்தில் தங்க அனுமதி வழங்கப்பட்டது. இதுதான் ஜெருசலத்தில் யூத குடும்பங்களின் முதல் குடியேற்றம். அது உமர் (ரழி) அவர்களால் வழங்கப்பட்ட மனிதாபிமான அடிப்படையிலான அனுமதி. அந்த நாள் முதல் யூதர்கள் ஜெருசலத்தில் நிம்மதியாக வாழத் தொடங்கினர். யூதர்கள் பூமியில் நிம்மதியாக வாழ்ந்தார்கள் என்றால் அது இஸ்லாமிய ஆட்சியில் தான். - ஆதாரம் : மோஷே கில் என்ற யூதர் எழுதிய பாலஸ்தீன வரலாறு 634-1099. மற்றும் https://en.wikipedia.org/wiki/Antisemitism_in_Europe

12ம் நூற்றாண்டில் யூதர்கள் கிறித்தவர்களின் குழந்தைகளை பலிகொடுத்து சமைத்து சாப்பிடு வதாகக் கூறி யூதர்கள் கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டனர். யூதர்கள் அவ்வாறு பலிகொடுத்ததாகக் கூறி கொலை செய்யப்பட்டதற்கு பிளட்லிபல்(Bloodlibel )எனபெயரிடப்பட்டது. கி.பி.1348 முதல் 1350 வரை யூதர்கள் பிளாக் டெத் (கருப்பு மரணம்) எனப்படும் பிளேக் நோய்க்கு காரணம் எனக் கூறியும் கிணறுகளை விஷம் கலந்ததாகக் குற்றம் சாட்டியும் யூதர் களில் பெருங்கூட்டத்தினரை ஐரோப்பியர்கள் கொலை செய்தனர். குறிப்பாக ஸ்டார்ஸ்போர்க் (Strasbourg) என்னுமிடத்தில் 2000 யூதர்கள் ஒரே இடத்தில் வைத்து எரித்து கொல்லப்பட்டனர். மற்றவர்கள் நாடு கடத்தப்பட்டனர். ஜெர்மனி யில் மட்டும் 300 யூத கூட்டங்கள் அந்த கால கட்டத்தில் அழிக்கப்பட்டன. இதுபோல பல்வேறு நாடுகளில் பல்வேறு வகைகளில் யூதர்கள்விரட்டப்பட்டனர். அழிக்கப்பட்டனர். அவர்கள் நிம்மதியாக வாழ்ந்தது இஸ்லாமியர் களின் ஆட்சியில் தான்.

ஜெருசலத்தில் யூதர்கள் மீண்டும் வந்து குடியேற தொடங்கியது ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் தான். அப்போது ஜெர்மனியிலும் மேற்கத்திய நாடுகளில் பல பகுதிகளிலும் யூதர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வந்தனர். அப்போதும் அவர்களுக்கு தங்க இடம் கொடுத்தது பாலஸ்தீனிய முஸ்லிம்கள் தான். அச்சமயம் பாலஸ்தீனம் முஸ்லிம்களிடம் இருந்தது. யூதர்கள்தங்களுடைய பாதுகாப்பான இடம் உலகத்தில் எதுவென்று தேடி அலைந்தபோது அவர்களுக்கு மிக பாதுகாப்பானதாக தெரிந்த இடம் பாலஸ்தீனம் மட்டும்தான். இப்படி தான் யூதர்களின் குடியேற்றம் பாலஸ்தீனத்தில் நிகழ்ந்தது.

## அல் அக்ஸா பள்ளிவாசலின் மீது யூதப்படைகள் தாக்குதல்

மே,7,2021 அன்று வெள்ளிக்கிழமை தொழுகையை முடித்துக்கொண்டு அல்அக்ஸா மசூதிக்குள் இக்திகாஃப் இருந்த முஸ்லிம்கள் மீது இஸ்ரேலிய காவல்துறையினர் வெறித்த னமாக தாக்கத்தொடங்கினர். யூதர்கள் 6 நாட்கள் போரில் அரபு நாடுகளை வெற்றி கொண்டதை ஜெருசலம் நாள் என்ற பெயரில் கொண்டாடி வருகின்றனர். அது மே 9 மற்றும் 10ம் நாள். அவர்கள் ஊர்வலம் போகும் போது அவர்களுக்கு தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவர்கள் மே 7ம் நாளிலிருந்தே அல்அக்ஸா மஸ்ஜிதை காலி செய்ய தொடங்கினர். வெடி குண்டுகள், துப்பாக்கிகள் என இஸ்ரேலிய



அல்அக்ஸாவில் தொழுகை நடத்திகொண்டிருந்த முஸ்லிம்களின் மீது இஸ்ரேல் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது



ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவும் காட்சி

தீவிரவாதிகளால் தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்கள் மேல் நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 600க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அதற்கடுத்த நாள் மே 8 லைலத்துல் கத்ர் இரவு. அன்றைய தினம் 70,000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அல்அக்ஸாவில் ஒன்று கூடி இருந்தனர். அன்றைக்கும் இஸ்ரேலிய காவல்துறையினர் அல்அக்ஸாவுக்குள் நுழைந்து தாக்கத் தொடங்கினர். அப்போதும் பொதுமக்கள் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டு நாட்களிலும் சேர்த்து 28க்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் யூத காவல்துறையினரால் இந்த தாக்குதல் சம்பவங்களில் கொலை செய்யப்பட்டனர். இதில் 9 குழந்தைகளும் அடக்கம். மே 10ம் தேதியும் இஸ்ரேலிய காவல்துறை மீண்டும் அல்அக்ஸா மஸ்ஜிதுக்குள் நுழைந்து தாக்கத் தொடங்கியது. அப்போது 200க்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் படுகாயமடைந்தனர். பல முஸ்லிம்கள் இந்த தாக்குதலில் இறந்தனர். இஸ்ரேலுக்குள் இஸ்ரேலிய காவல்துறைக்கு எதிராக தொடுக்கப்பட்ட தாக்குதல்களில் கிட்டத்தட்ட 21 காவல்துறையினர் படுகாயமடைந்ததாக கார்டியன் இதழ் கூறுகிறது. இஸ்ரேலுக்கு வெளியில் இருந்து வந்த தாக்குதல்களையே சமாளிக்க முடியாமல் இருந்த இஸ்ரேலுக்கு இது புதியது. தாக்குதல்கள் ஜெருசலத்திற்கு உள்ளே இருந்து வந்தது அவர்கள் எதிர்பாராதது.

இதற்கு முன்னதாக இஸ்ரேலிய யூத அரசு ஷேக் ஜர்ராஹ் என்ற பகுதியில் தொன்றுதொட்டு வசித்து வந்த இஸ்லாமிய குடும்பங்களின் வீடுகளை இடித்துவிட்டு அதனை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து யூத குடியேற்றங்களாக மாற்றத் தொடங்கியது. இதற்கும் சேர்த்து முஸ்லிம்களின் மத்தியில் பெரும் எதிர்ப்பு எழுந்தது. பாலஸ்தீன முஸ்லிம்கள் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் இருந்து இஸ்ரேலின் இந்த அநியாய போக்கிற்கு எதிராக கண்டனங்கள் கிளம்பின. ஆனால் யூதத்தீவிரவாதிகளின் காதில் இந்த கண்டனங்கள் விழவில்லை. செவிடனின் காதில் ஊதிய சங்கை போன்றானது.

இதற்கு பிறகு ஹமாஸ் இராணுவம் அல் அக்ஸாவிலிருந்தும் ஷேக் ஜர்ராவிலிருந்தும் யூதர்களும் அவர்களின் படைகளும் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும். இல்லையென்றால் தாக்குதல் நடத்தப்படும் என்று முதலில் எச்சரித்து அறிக்கை விட்டது. ஆனால் தன்னுடைய ஆணவத்தின் காரணமாகவும் தன்னுடைய ஆயுதபலத்தை காட்டி ஆயுத விற்பனையை உலக அரங்கில் கூட்ட வேண்டும் என்று நினைத்ததன் காரணமாகவும் இஸ்ரேல் இந்த அறிவிப்பை அலட்சியமாக எடுத்துக் கொண்டது. ஆனால் அதற்கான விலையை சற்று கூடுதலாகவே இஸ்ரேல் இப்போது கொடுத்து விட்டது.

## ஆழம் தெரிந்தும் காலை விட்டு முட்டாள்தனம் செய்த இஸ்ரேல்

போர் தொடங்கியபோது இஸ்ரேல் ஹமாஸ் ராணுவத்தின் ஆயுத பலத்தை 2014ம் ஆண்டோடு மதிப்பிட்டு விட்டது. போர் தொடங்கிய சில நாட்களுக்கு எல்லாம் ஹமாஸின் ராக்கெட் கையிருப்பு குறைந்து விடும். அத்துடன் அவர்களை ஒட்டுமொத்தமாக அழித்து ஒழித்துவிடலாம் என்று தவறாக மதிப்பீடு செய்தது. இஸ்ரேல் கடந்த 2014ஆம் ஆண்டு ஹமாஸ் உடன் நடத்திய போரில் பல்வேறு அழிவுகளை சந்தித்தது. 8 ஜூலை 2014 முதல் 26,ஆகஸ்ட் 2014 வரை இடைப்பட்ட 50 நாட்களில் மொத்தம் 4564 ராக்கெட்டுகளை ஹமாஸ் ராணுவத்தினர் இஸ்ரேலை நோக்கி ஏவினார்கள். அதாவது கிட்டத்தட்ட 50 நாட்களில் 4564 ராக்கெட்டுகள் ஏவப்பட்டன. அது மட்டுமன்றி பல்வேறு இணையவழி தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இதில் இஸ்ரேல் பலத்த சேதமுற்று உலக நாடுகளின் கால்களில் விழுந்து ஹமாஸ் ராணுவத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இதனை நாம் விரிவாக வைகறை வெளிச்சம் இதழில் எழுதியுள்ளோம்.

ஆனால் இத்தனை அடிபட்ட பின்னரும் இஸ்ரேல் திருந்துவதாக இல்லை. ஆழம் தெரியாமல் அல்ல ஆழம் தெரிந்தே இந்த முறை காலை விட்டது இஸ்ரேல். தாங்கள் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு உள்ள பாலஸ்தீனத்திலிருந்து 2014ம் ஆண்டிற்கு பிறகு உலக நாடுகளின் உதவிகளை தடுத்துவிட்டதால் இப்போது அந்த அளவிற்கு பெரிய எதிர்ப்பு ஹமாஸ் இராணுவத்திடமிருந்து இருக்காது என்று இஸ்ரேல் கணக்கிட்டிருந்தது. எனவே, 5000 ராக்கெட்டுகள் வரை இஸ்ரேலை தாக்கினால் அதை எதிர்கொண்டு தடுக்கும் வகையில் தடுப்பு ஏவுகணைகளை நிறுவி விட்டு இப்போது பாலஸ்தீனத்தையும் அதன் பொதுமக்களையும் விமானப் படையை கொண்டு தாக்க ஆரம்பித்தது,



அஷ்கலான நகரில் ஹமாஸ் ராக்கெட் தாக்குதலுக்கு ஆளான கட்டிடம் (மே 11 2021)

## வீழ்ந்தது இஸ்ரேல்



ஜெருசலம் நகருக்கு வெளியில் இஸ்ரேல் ராக்கெட் வீச்சில் தாக்குதலுக்கு ஆளான வீடு (மே 10 2021)

ஆனால் இந்த முறை ஹமாஸ் ராணுவத்தினர் கொடுத்த அடி சற்று பலமான அடி. கடந்த முறை 50 நாட்களில் ஏவிய ராக்கெட்டுகளை இந்த முறை 11 நாட்களில் ஏவியது ஹமாஸ். ஆனாலும் அதன் கையிருப்பு குறையவில்லை. மே 12ம் தேதி தொடங்கி 38 மணி நேரத்தில் சுமார்1050 ராக்கெட்டுகளை இஸ்ரேலை நோக்கி ஏவியது. இந்த தாக்குதலில் மட்டும் சுமார் 200 இஸ்ரேலியர்கள் படுகாயமுற்றதாகவும் 5 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாகவும் தெற்கு இஸ்ரேலின் எஷ்கால் பகுதியில் இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும், லாட், அஷ்கலான், ரிஷான் லெஸியான் போன்ற பகுதிகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவித்ததில் இருந்தே ஹமாஸ் தாக்குதலின் தீவிரம் புரிந்திருக்கும்.

(https://www.defenseworld.net/news/29555/Israel_Defense_Forces_Say_1050__Rockets_Fired_at_the_Country)

அது மட்டுமன்றி அஷ்தாத், பீர்ஷெபா, ஜெருசலம், டெல் அவிவ் போன்ற பகுதிகளும்

ஹமாஸ் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு ஆளா கின. இதன் காரணமாக இஸ்ரேல் செயலற்றுப் போனது. முதல்நாள் தாக்குதலிலேயே இஸ்ரேல் தன்னுடைய பென்கூரியன் விமான தளத்தை மூடவேண்டியதாயிற்று. இதைத் தவிர்த்து ஆறு விமானப்படை தளங்களை தாக்கி அழித்து விட்டதாக ஹமாஸ் கூறியது. ஹேட்ஸார், ஹேட்ஜெரீம், நெவாதிம், டெல் நாஃப், பாமசிம், ரமான் (Hatzor, Hatzerim, Nevatim, Tel Nof, Palmachim and Ramon) ஆகிய ஆறு தளங்கள் தங்களின் தாக் குதலுக்கு இலக்காகியதாக ஹமாஸ் கோரியது.

(https://www.defenseworld.net/news/29602/Hamas_Claims_it_Hit_Israeli_Air_base_with_Rockets_as_Air_Strikes_Kill_200__Over_1400_Injured_in_Gaza)

இதன் பின்னர் ஹமாஸ் ராணுவத்தினர் நடத்திய ராக்கெட் தாக்குதலில் அரபு அமீரக நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த வர்த்தக எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய குழாய்கள் தாக்கப்பட்டு பற்றி எரிந்தன. இஸ்ரேல் முழுதும் சைரன் ஒலிகள் கேட்டவண்ணம் இருந்தன. இஸ்ரேல் முழுவதும் மரண ஓலங்கள். தங்கள் புறத்தில் நடந்த இழப்புகளை மறைக்க இஸ்ரேல் மருத் துவமனைகளில் அனுமதிக்கப்பட இருந்த ஆம்பு லன்ஸ்களில் திரைகளை ஏற்படுத்தி காயமுற்ற வர்களை மருத்துவமனைக்குள் கொண்டு சென்றது இஸ்ரேல். ஒரு கட்டத்தில் இஸ்ரேலின் அணுசக்திநிலையம் இருந்த இடத்திற்கு அருகே ராக்கெட்டுகள் விழுந்து வெடித்தன. இந்த தாக்குதல்களில் இஸ்ரேல் பாதுகாப்பான நாடு, அதை யாரும் தாக்க முடியாது, இஸ்ரேலை ஐயர்ன் டோம் என்ற ராக்கெட் எதிர் ஏவுகணைகளை கொண்டு பாதுகாத்து உள்ளோம் என்ற இஸ்ரேலின் வெற்று வாய் ஜாலங்கள் மறைந்து போயின.

https://www.presstv.com/Detail/2021/05/29/657780/Israeli-army-not-ready-regional-war-Ex-officer

இப்போது இஸ்ரேல் யார் காலிலாவது விழுந்து தன்னையும் அதனால் பல்வேறு நாடு களில் இருந்து அழைத்து வரப்பட்டு குடிறேற் றப்பட்ட யூதர்களையும் பாதுகாக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டது. உடனடியாக எகிப்து மற்றும் கத்தார் நாடுகளின் கால்களில் விழுந்தது இஸ்ரேல். அமெரிக்கா உள்ளிட்ட எந்த நாடுகளும் இஸ்ரேலை ஹமாசிடமிருந்து காப்பாற்ற முடியாத சூழ்நிலை. இதன் பின்னர் வேறு வழியின்றி தன்னிச்சையாக எந்தவிதமான நிபந்தனையுமின்றி போர்நிறுத்தத்தை அறிவித் தது இஸ்ரேல். இதன் மூலம் தன் தோல்வியை உலக அரங்கில் ஒப்புக்கொண்டது இஸ்ரேல்.

HTTPS://WWW.PRESSTV.COM/DETAIL / 2021/05/21/657132/PALESTINIANS-CELEBRATE-VICTORY-AGAINST-ISRAEL

HTTPS://WWW.PRESSTV.COM/DETAIL/2021/05/20/657082/PALESTINE-ISRAEL-GAZA-HAMAS-MISHAAL-AIRSTRIKES

HTTPS://WWW.PRESSTV.COM/DETAIL/2021/05/20/657080/QUDS-FORCE-COMMANDER-PRESSURES-SUPPORT-PALESTINE-



ஹமாசின் காசா பகுதி தலைவர் யஹ்யா சின்வார்

ஹமாசின் தலைவர் யஹ்யா சின்வார் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசியபோது தாங்கள் போர்நிறுத்த அறிவிப்புக்கு முன்னதாக 300 ராக்கெட்டுகளை ஒரே சமயத்தில் இஸ் ரேலை நோக்கி ஏவ தயாராக இருந்ததாகவும் அதில் 150 ராக்கெட்டுகளை டெல்அவிவ் நகரை நோக்கி ஏவ இருந்ததாகவும் ஆனால் எகிப்து மற்றும் கத்தார் நாடுகளின் கோரிக்கை யின் காரணமாக தாக்குதலை நிறுத்தி வைத்த தாகவும் அவர் தெரிவித்தார். தங்களிடம் ஒரு நிமிடத்தில் 100 முதல் 200 கி.மீ வரை சென்று தாக்கக்கூடிய நூற்றுக்கணக்கான ராக்கெட் டுகளை ஏவ இயலும் என்றும் தெரிவித்தார். தங்களுக்கு பொருளுதவி, ஆயுத உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை செய்த ஈரானுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

## இஸ்ரேல் தோற்றது ஏன்?

இஸ்ரேல் இந்தப்போரில் மிக அதிகமாக நம்பியது தன்னுடைய ஐயர்ன்டோம் எனப்படும்



இஸ்ரேலில் பெடாஹ் டிக்வா என்ற இடத்தில் ஹமாசின் ராக்கெட் தாக்குதலில் முற்றிலுமாக சேதமடைந்ததொரு கட்டிடம்

ராக்கெட்டுகளை எதிர்த்து தாக்கி அழிக்கும் ஏவு கணைகளைத் தான். உலகமெங்கும் இந்த ஐயர்ன் டோம் எதிர் ஏவுகணைகள் பாதுகாப்பானது என விளம்பரப்படுத்தி தன்னுடைய வியாபாரத்தை பெருக்கி வந்த இஸ்ரேலுக்கு இந்தப் போரில் அது எவ்வளவு பாதுகாப்பற்றது என்பதை உலகம் அறிந்து கொள்வதை தடுக்க இயலவில்லை.

டிஃபன்ஸ் வோர்ல்டு என்ற இணைய பத்திரிகை இதனை தெளிவாக எடுத்து எழுதி இருந்தது. இந்த பத்திரிகை உலக அளவிலான ஆயுதங்களை ஒப்பிட்டு ஆய்வு கட்டுரைகளை எழுதும் பத்திரிகை.

அது எழுதியிருந்த ஒரு கட்டுரையில் மிகக்குறுகிய தொலைவில் இருந்து ஏவப்படுவதால் அதனை எதிர்த்து தாக்க போதிய நேரம் கிடைக்காததால் ஹமாசின் ராக்கெட்டுகளை எதிர்த்து தாக்குவதில் இஸ்ரேலின் ஐயர்ன்டோம் தோற்றுவிட்டதாக இராணுவ உளவு ஆய்வுத் துறையின் தலைவர் யாகோவ் அமித்ரார் என்பவர் கூறியிருந்தார்.

உதாரணத்திற்கு மே 4 2019இல் ஐ.டி.எஃப் எனப்படும் இஸ்ரேலிய தடுப்புப்படையினர் வெளியிட்டிருந்த அறிக்கையில் 48 மணி நேரத்தில் 690 ராக்கெட்டுகள் ஏவப்பட்டதாகவும் அதில் 240 ராக்கெட்டுகளை மட்டுமே இஸ்ரேலின் ஐயர்ன் டோம் சிஸ்டம் தடுத்து தாக்கியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேப்போல் ஐயர்ன் டோம் கண்டறிந்து தாக்கும் வகையில் ஹமாஸ் இராணுவத்தினர் ஏவும் ராக்கெட்டுகள் ஒரே மாதிரியானதாக இல்லை. அதன் வடிவமைப்புகள் ஐயர்ன் டோம் சிஸ்டத்தை ஏமாற்றும் வகையில் மாற்றி மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

https://www.defenseworld.net/news/24733/Israeli_Iron_Dome_Failed_to_Intercept_All_Missiles_Due_To_Close_Firing_Range__Military_Expert

https://www.technologyreview.com/2014/07/15/172055/an-explanation-of-the-evidence-of-weaknesses-in-the-iron-dome-defense-system/

https://slate.com/news-and-politics/2021/05/iron-dome-missile-defense-israel.html

அது மட்டுமன்றி பல நேரங்களில் ஐயர்ன் டோம் சிஸ்டம் இஸ்ரேலின் சொந்த ஆளில்லா விமானங்களைக்கூட ராக்கெட்டிலிருந்து பிரித்து பார்த்து கண்டறிய தெரியாமல் சுட்டு வீழ்த்தியுள்ளதையும் அந்த பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கிறது.

https://www.defenseworld.net/news/29657/Israel___s_Iron_Dome_Shoots_Own_Drone__Malfunction_led_to_Hamas_Rockets_Falling_on_Ashkelon

அது வெளியிட்டிருந்த மற்றொரு கட்டுரையில் ஐயர்ன் டோம் சிஸ்டத்தில் இடைமறித்து தாக்கும் திறன் வெறும் 5 சதவீதம் மட்டுமே என்று எழுதியிருந்தது. 90 சதவீத ராக்கெட்டுகளை இடைமறித்து தாக்கி அழித்து விட்டதாக கூறிய இஸ்ரேலின் கூற்றினை அது மறுத்திருந்தது. அதனை பொய் என்று கூறியிருந்தது. 2014ம் ஆண்டிலிருந்து ஹமாஸ் ஏவிய ராக்கெட்டுகள் தாக்கப்பட்ட இடத்தில் கிடைத்த பொருட்கள் போன்றவற்றை ஆய்வு செய்து பார்த்ததில் ஐயர்ன் டோம் சிஸ்டத்தின் தரம் இன்னும் மேம்படவில்லை என்றும் எழுதியிருந்தது. மற்றொரு தாக்குதலில் 255 ராக்கெட்டுகள் பாலஸ்தீனத்திலிருந்து ஏவப்பட்டதில் 71 ராக்கெட்டுகள் மட்டுமே இடைமறித்து தாக்கப்பட்டது. மற்றொரு உள்ளூர் ஊடகம் 600 ராக்கெட்டுகள் ஏவப்பட்டதில் 150 ராக்கெட்டுகள் மட்டுமே இடைமறிக்கப்பட்டதாக செய்திகளை வெளியிட்டிருந்ததாக டிஃபன்ஸ் வேர்ல்டு பத்திரிகை எழுதியிருந்தது.

அது இன்னொரு ஆய்வையும் செய்திருந்தது. அதாவது ஹமாஸ் ஏவும் ராக்கெட்டுகள் பீரங்கி வகையிலானது. அதன் தலைப்பகுதி தான் வெடிப் பொருட்களை சுமந்து வரும். அதன் வயிற்று பகுதி வெறும் எரிபொருள். அதாவது ராக்கெட்டு பறக்க தேவையான எரிபொருள் மட்டுமே அதில் இருக்கும். அதுவும் பாலஸ்தீனத்திலிருந்து கிளம்பி அது இஸ்ரேலை வந்தடையும் போது

கிட்டத்தட்ட காலியாகவே இருக்கும். ஐயர்ன் டோம் சிஸ்டத்தில் ராக்கெட் எதிர்ப்பு ஏவுகணை இதனை வயிற்று பகுதியில் தாக்கும் போது அதன் தலைப்பகுதி வெடிப்பொருட்களுடன் தரையில் விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தும். அதனால் ராக்கெட்டின் வயிற்று பகுதியை தாக்கி அழிப்பதில் எந்த பயனும் இல்லை. ஆனால் ஐயர்ன் டோம் சிஸ்டம் வயிற்று பகுதியை தாக்கி அழிக்கும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இதன் தோல்விக்கு முக்கிய காரணம்.

https://www.defenseworld.net/news/10998/Iron_Dome_Unsuccessful__Israel_Withholding_Information__Says_Study

அது மட்டுமன்றி ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கான ராக்கெட்டுகள் இஸ்ரேலின் உள் நுழையும் போது எந்த ராக்கெட்டை இலக்காகக் கொள்வது என்பதில் ஏற்படும் குழப்பம் காரணமாக ஒரே ராக்கெட்டை நோக்கி பல்வேறு ஐயர்ன் டோம் எதிர் தாக்குதல் ராக்கெட்டுகள் செலுத்தப்படுகின்றன. மீதி ராக்கெட்டுகள் இதன் காரணமாக இலக்கை அடைந்து விடுகின்றன.

ஐயர்ன் டோம் சிஸ்டத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அஷ்கலானில் ஹமாசின் ராக்கெட்டுகள் தாக்கியதாகவும் அதில் 90க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும் இருவர் கொல்லப்பட்டதாகவும் ஹமோதியா என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.



கஸ்ஸாம் ராக்கெட் லாஞ்சர்கள்

https://hamodia.com/2021/05/11/report-iron-dome-malfunctioned-rocket-barrage/

இதற்கு பதிலாக ஈரான் உண்மையான எதிர் தாக்குதல் தடுப்பு ஏவுகணைகளை உருவாக்கியுள்ளதாக டிஃபன்ஸ் வோர்ல்டு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

https://www.defenseworld.net/news/11863/Iran_Activates_Real_Iron_Dome_Missile_Defense_System

## ஹமாஸ் வெற்றி பெற்றது ஏன்?

அவர்கள் ஒரு குறிக்கோளுடன் போரிடுகிறார்கள் என்று ஜெருசலம் போஸ்ட் என்ற பத்திரிகை தெரிவிக்கிறது. இதுவே ஹமாசின் வெற்றிக்கு காரணம். பாலஸ்தீனத்தின் நிலப்பகுதியை சென்னையோடு ஒப்பிட்டு கொள்ளலாம். அந்த அளவிற்கு சிறிய பகுதி. மக்கள் தொகை அடர்த்தியானது. தொடர்ந்து தாக்குதலுக்கும் முற்றுகைக்கும் ஆளாக்கப்பட்டுள்ள ஒரு பகுதி. உலகின்



இஸ்ரேலின் தீயணைப்பு வீரர் அஷ்கலான் நகரில் ஹமாஸ் ராக்கெட் தாக்குதலால் பற்றி எரியும் கார்களை நோக்கி ஓடும் காட்சி

திறந்ததொரு சிறைச்சாலை தான் பாலஸ்தீனம் என்று சொல்லும் அளவிற்கு அங்குள்ள மக்களின் மீதான முற்றுகை நீடிக்கிறது. அதன் எல்லைப் பகுதிகளான எகிப்தின் வழியாக அவர்களுக்கு இக்வானுல் முஸ்லிமீன் அமைப்பினர் எகிப்தில் ஆட்சியில் இருந்தவரை உதவி கிடைத்தது. ஆனால் இப்போது எந்த உதவியும் யாரிடமிருந் தும் கிடைப்பதில்லை. அல்லாஹ் ஒருவனைத் தவிர்த்து. தியாகத்திற்கென்றே தங்களை தயார் படுத்தி வைத்துக் கொண்டு தொடர்ந்து தங்கள் உயிர்களாலும் உடைமைகளாலும் தியாகம் செய்து உலக முஸ்லிம்களை பெருமிதம் கொள்ள வைக்கும் ஒரு கூட்டம் தான் அந்த பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினர்.

நூருத்தீன் ஸெங்கி, ஸலாஹுத்தீன் அய்யூபி போன்றவர்கள் தங்கள் தியாகங்களின் மூலம் ஜெருசலத்தையும் மஸ்ஜிதுல் அக்ஸாவையும் முஸ்லிம்கள் வசம் ஒப்படைத்தனர். அதன் பின்னர் பல்வேறு துரோகங்களின் காரணமாக முஸ்லிம்கள் அதனை இழந்தனர். இன்றுவரை உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் சொந்தமான மஸ்ஜிதுல் அக்ஸாவுக்காக போராடுபவர்கள் ஹமாஸ் இயக்கத்தினர் மட்டும் தான் என்றால் மிகையல்ல.

உலக வல்லரசான அமெரிக்காவின் துணையோடு மேற்கத்தைய நாடுகளின் உதவி யோடு பெரும் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்துக்கொண்டு வலம் வரும் இஸ்ரேலை சாமானியர்கள் எதிர்க்கின்றார்கள் அல்லாஹ்வின் உதவியோடு.

முதன்முதலில்இரண்டாம்இன்திஃபாதாவில் 2001ம் ஆண்டில் தான் ஹமாசின் இராணுவப் பிரிவான இஸ்ஸுத்தின் அல் கஸ்ஸாம் ராக் கெட்டுகளை தயாரிக்க தொடங்கியது. பின்னர் கஸ்ஸாம் என்ற அந்தப்பெயரே ராக்கெட்டு களுக்கு வைக்கப்பட்டது. முதலில் தயாரிக்கப் பட்ட இந்த ராக்கெட்டுகள் 3 கிலோ மீட்டரி லிருந்து 4.5 கி.மீ வரை மட்டுமே சென்று தாக் கக்கூடியது. ஆனால் இன்றோ அதன் ராக்கெட் 250 கி.மீ. தொலைவை தாண்டி சென்று தாக்கக்கூடிய வல்லமையை பெற்றுள்ளது.

https://en.wikipedia.org/wiki/Qassam_rocket

பொதுவாக இந்த ராக்கெட்டுகளின் எரி பொருளாக பயன்படுத்தப்படுவது உருக்கிய சர்க்



கஸ்ஸாம் ராக்கெட்டுகள்

கரையும் பொட்டாசியம் நைட்ரேட் உரமும் தான். அதன் தலைப்பகுதியில் உள்ள வார்ஹெட் எனப்படும் தாக்கும் பகுதியில் பயன்படுத்தப் படுவது டிரை நைட்ரோ டொலுவீன் என்ற டி.என்.டி மற்றும் யூரியா நைட்ரேட்.

3 கி.மீ ராக்கெட்டிலிருந்து 250 கி.மீ ராக்கெட் வரை தொழில் நுட்பத்தை மேம்படுத்தியதில் ஈரானுக்கு முக்கிய பங்குள்ளது. இன்னும் ஹமாசின் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும் என்று ஈரானின் தலைவர் கூறியதி லிருந்து ஈரான் இன்னும் அதிகமான தொழில் நுட்பத்தை ஹமாசிற்கு வழங்கும் என்று தெரிகிறது.

ஹமாஸ் தற்போது ஏ-120 வகை ராக்கெட்டு களை பயன்படுத்துகிறது. அது ஆர்-120 வகை ராக்கெட்டிலிருந்து மேம்படுத்தப்பட்டது. இதன் இலக்கு தூரம் 120 கி.மீ. கஸ்ஸாம் ராக்கெட் டுகள் 10 கி.மீ. வரை சென்று தாக்கும். பாலஸ் தீனத்தில் 800 மீ தொலைவிலிருந்தே இஸ்ரேலின் நகரங்கள் துவக்கம் என்பதை கவனத்தில் கொள்ளவும். குத்ஸ் 101 வகை ராக்கெட்டுகள் 16 கி.மீ தொலைவும், கிராட் சிஸ்டம் 55 கி.மீ தொலைவும், செஜில் 55 கி.மீ தொலைவும் எம்-75 (75கி.மீ) தொலைவும், பஜ்ர் 100 கி.மீ தொலைவும், ஆர்.160 (120 கி.மீ) தொலைவும் எம்-302 200 கி.மீட்டருக்கு மேலும் சென்று தாக்கும் திறன் கொண்டவை.

இதில் பஜ்ர் ராக்கெட்டுகள் குறிப்பிட்ட இலக்கை சென்று தாக்கக்கூடிய வழிகாட்டிகளை கொண்டவை. அல்ஃபஜ்ர் ராக்கெட்டுகளில் தொழில்நுட்பங்கள் ஈரான் மூலம் ஹமாசுக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்போதிலிருந்து ஹமாஸ் சுயமாக இதனை தயாரித்து வருகிறது.

இதில் எம்-75 வகை ராக்கெட்டுகளை கொண்டு டெல்அவிவை தாக்கலாம்.

எம்-302 வகை ராக்கெட்டுகள் சிரிய இராணு வத்தின் தயாரிப்புகள். இது சீனாவின் டபுள்யூ. எஸ்-1 வகை ராக்கெட்டுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை.

https://www.defenseworld.net/news/29569/New_Details_of_Hamas__Rockets_Emerge

https://www.defenseworld.net/news/29564/Hamas_Using_New_Rocket_Launchers_with_120km_Range_to_Attack_Israel

இப்படி ஹமாஸ் தன் இராணுவ பலத்தை உயர்த்தி கொண்டே போய்கொண்டு இருக் கிறது. 2001இல் 3 கி.மீ. ராக்கெட்டுகளின் தாக்குதல் களுக்கே அலறிய இஸ்ரேல் இப்போது 200 முதல் 250 கி.மீ வரை சென்று தாக்கக்கூடிய ராக்கெட்டுகளை கண்டு மிரண்டுள்ளது என்றால் மிகையல்ல. இந்த முறை இஸ்ரேலின் மீது ஏவப்பட்ட ராக்கெட்டுகளில் பல ஏ.120 வகை ராக்கெட்டுகள் தான்.

## 500 கி.மீ. சுரங்கப்பாதையும் வெற்றிக்கு காரணம்

ஹமாசிஸ் வெற்றிக்கு முக்கிய காரணம் இந்த சுரங்கப்பாதைகள். இந்த சுரங்கப் பாதைகள் பாலஸ்தீனத் தில் ஆரம்பித்து பல கட்டடங்களுக்கு கீழே சென்று இஸ்ரேலின் மறுமுனை வரை நீள்கிறது. இந்த சுரங்கப்பாதை களின் வழியே தான் ஹமாஸ் இயக் கத்தினர் திடீரென்று வெளிப்பட்டு இஸ்ரேலிய இராணுவத்தினரை தாக்கி அழிக்கின்றனர். பல இஸ்ரேலிய இராணுவத்தினரை சிறை பிடித்துள் ளனர். இதற்கிடையே ஹமாசின் சுரங்கப்பாதைகளை குண்டுவீசி அழித்துவிட்டதாக இஸ்ரேல் கூறியது. ஆனால் அவர்கள் தாக்கி யதில் 5 சதவீத சுரங்கப் பாதைகள் மட்டுமே சேத மடைந்துள்ளதாக ஹமாஸின் தலைவர் யஹ்யா சின்வார் தெரிவித்தார். தங்களுடைய சுரங்கப் பாதையின் மொத்த தூரம் 500 கி.மீ என்றும் அது தெரிவித்தது. அதாவது ஹமாசின் கூற்றின்படி அது இலண்டன் மெட்ரோ இரயிலின் தொலைவை விட 100 கி.மீ. அதிகமாக சுரங்கப் பாதை அமைத்துள்ளது.

இது சில சமயங்களில் பன்னாட்டு படை களின் அலுவலகங் களுக்கும் கீழே அவர்களுக்கு தெரியாமலேயே செல்கிறது என ஜெருசலம் போஸ்ட் என்ற பத்திரிகை தெரிவிக்கிறது. தரைக்கு 7.5 மீட்டருக்கு கீழ் இந்த சுரங்கப்பாதை செல்வதாக அந்த செய்தி தெரிவிக்கிறது. அதாவது தரையிலிருந்து 25 அடிக்கு கீழ் இந்த சுரங்கப்பாதை செல்கிறது.

500 கி.மீ. தொலைவிற்கு சுரங்கப்பாதையை 25அடிக்கு கீழ் அமைப்பது என்பது சாதாரண மான காரியம் அல்ல. சென்னையில் 50 கி.மீ தொலைவிற்கு மெட்ரோ இரயில் செல்ல சுரங்கம் அமைக்க எத்தனை ஆண்டுகள் ஓர் அரசாங்கத்திற்கு தேவைப்பட்டது என்பதை நினைவில் கொள்ளவும்.

https://www.jpost.com/arab-israeli-conflict/unrwa-finds-attack-tunnel-under-one-of-its-gaza-schools-670262

https://www.jpost.com/breaking-news/hamass-sinwar-we-have-10000-terrorists-within-israel-669265



ஹமாஸ் ராக்கெட்டால் சேதமடைந்த கட்டிடத்தை ஆய்வு செய்யும் அமைச்சர் கெபி அஷ்கனாசி

## உளவுத்தகவல்கள்


ஹமாசின் வெற்றிக்கு மற்றொரு காரணம் சரியான உளவுத்தகவல்களை பெற்றது. ஒரு கட்டத்தில் இஸ்ரேல் இராணுவம் ஒரு தந்தி ரத்தை மேற்கொண்டது. அதாவது பாலஸ்தீ னத்தில் தரைவழிப்போரை துவங்கப்போவதாக

# ஹமாஸ் தாக்குதலுக்குள்ளான இஸ்ரேல் கட்டிடங்கள்



இஸ்ரேலின் எனர்ஜி பைப்லைன் ஹமாசின் ராக்கெட் தாக்குதலில் பற்றி எரியும் காட்சி










பாவனை செய்தது. இதன் நோக்கம் இப்படி அறிவித்தால் ஹமாசின் தலைவர்கள் சுரங்கங்களில் சென்று பதுங்குவார்கள். அந்த சுரங்கங்களை தாக்கினால் ஹமாசின் தலைவர்களை ஒட்டுமொத்தமாக அழித்துவிடலாம் என்று. ஆனால் ஹமாஸ் இதனை ஆளில்லா உளவு வாகனங்கள், ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் கண்டறிந்து கொண்டது. இதற்கு ஈரான் பெருமளவில் உதவியது. எனவே, ஹமாசின்தலைவர்கள்யாரும்ஒட்டுமொத்தமாக எந்த இடத்திலும் சுரங்கத்தில் பதுங்கவில்லை. இதன் காரணமாக இஸ்ரேலின் திட்டம் தவிடு பொடியானது.

https://www.defenseworld.net/news/29622/Iran_Unveils_Heavy_UAV_Gaza_for_Attack_and_Surveillance_Missions

## பொருளாதார இழப்பு

இந்தப்போரின் மூலம் மிகப்பெரிய பொருளாதார நட்டத்தை சந்தித்திருக்கிறது இஸ்ரேல். எப்படியெனில் ஹமாஸ் இராணுவம் ஏவும் ராக்கெட்டுகளுக்கு ஆகும் பொருளாதார செலவு 500 முதல் 800 டாலர்கள். அதாவது அதிகபட்சமாக ரூ.60,000. ஆனால் அதை இடைமறித்து தாக்குவதற்கு இஸ்ரேல் அனுப்பும் ராக்கெட்டுக்கு ஆகும் செலவு ஒரு இலட்சம் முதல் 2,35,000 டாலர்கள். அதாவது அதிக பட்சமாக 1,64,50,000ரூபாய். அதாவது தங்களை தாக்க வருவது சாதாரண கஸ்ஸாம் ராக்கெட்டோ அல்லது அணுகுண்டை சுமந்து வரும் ராக்கெட்டோ அதனை எதிர்த்து அழிக்க இஸ்ரேல் அனுப்புவது ஒரே வகை ஐயர்ன் டோம் ராக்கெட்டுகளை தான். பல நேரங்களில் ஒரு சாதாரண ராக்கெட்டை தாக்கி அழிக்க இரண்டு ஐயர்ன் டோம்ராக்கெட்டுகள்வரைஏவப்படவேண்டும். ஏனெனில் அப்போது தான் ஒன்று தவறினாலும் மற்றொன்று அதனை தாக்கி அழிக்கும். எனவே, இப்போது செலவு அப்படியே இரட்டிப்பாகி விடும்.

இந்த 11 நாட்களில் ஹமாஸ் சுமார் 4500 ராக்கெட்டுகளை இஸ்ரேலை நோக்கி அனுப்பி இருக்கிறது. இந்த 4500 ராக்கெட்டுகளை இடைமறித்து அழிக்க இஸ்ரேல் குறைந்த பட்சம் 9000 ஐயர்ன் டோம் ராக்கெட்டுகளை அனுப்ப வேண்டும். அதற்கானசெலவுஎன்னவென்றால்பதினான் காயிரத்து எண்ணூற்று ஐந்து கோடிகள். பல நேரங்களில் ஹமாஸ் இராணுவத்தினர் இஸ்ரேலின் எல்லைகளில் சூடாக்கப்பட்ட பலூன்களை பறக்க விடுகிறார்கள். அதனை ராக்கெட்டுகள் என தவறாகப் புரிந்து கொண்டு இஸ்ரேலின் ஐயர்ன் டோம் சிஸ்டம் ராக்கெட்டுகளை அனுப்புகிறது. இதன் காரணமாகவும் அதற்கு பெரிய நட்டம். அதுமட்டுமன்றி ஐயர்ன் டோம் சிஸ்டத்தின் தோல்வியின் காரணமாக பல்வேறு நாடுகள்இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதை நிறுத்திக் கொண்டன. இதன் காரணமாக இன்னும் அதற்கு நட்டம்.

## எகிப்து உளவுத்துறையிடம் மண்டி

இதற்கிடையே தங்களிடமிருந்து பிடித்து சென்றவர்களை ஹமாசிடமிருந்து விடுவிக்க எகிப்து உளவுத்துறையிடம் உதவி கோரியது இஸ்ரேல். நெதன்யாஹூ நேரிடையாக எகிப்து சென்று இந்த உதவியை கோரினார்.

https://www.timesofisrael.com/netanyahu-meets-egyptian-spy-chief-demands-return-of-captives-in-gaza/

## திரும்பி செல்லுங்கள்

இந்தப்போரின் போது ஹிஸ்புல்லா அமைப்பும் ஈரானும் ஓர் ஒருங்கிணைந்த போர் அறையை உருவாக்கி தொடர்ந்து ஹமாசுடன் தொடர்பில் இருந்தனர் என்றும் அங்கிருந்து போரை ஒருங்கிணைத்து வழி நடத்தினர் என்றும் அதன் காரணமாகவே லெபனானில் இருந்தும் இஸ்ரேலின் மீது ராக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் பத்திரிகை தெரிவிக்கிறது.


இறுதியாக டைம்ஸ் ஆஃப் இஸ்ரேலில் வந்த ஒரு கட்டுரையில் ஈரானின் குத்ஸ் படைகளில் தலைவர் கொடுத்திருந்த ஒரு அறிக்கையில் சியோனிஸ்டுகள் ஐரோப்பாவில் அவர்கள் விற்றுவிட்டு வந்த வீடுகளை மீண்டும் சென்று அதன் விலை உயர்வதற்குள் வாங்கிக்கொள்வதே சிறந்தது என்று நக்கலடித்திருந்தார். அதாவது நீங்கள் முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் இங்கே வந்தது தவறு. உடனடியாக விலையேற்றத்திற்குமுன் உங்களுடைய பழைய இடங்களுக்கே சென்று விடுங்கள் என்பதே அதன் கருத்து. அதுதான் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வாகவும் இருக்கும்.

https://www.timesofisrael.com/iran-quds-force-chief-zionists-should-rebuy-homes-in-europe-before-prices-rise/



எகிப்தின் உளவுத்துறை தலைவர் அப்பாஸ் கமால் அவர்களை சந்தித்து தங்கள் வீரர்களின் விடுதலை குறித்து கோரிக்கை வைக்கும் நெதன்யாஹூ (மே 30 2021)

ஹமாஸ் இயக்கத்தினரின் ராக்கெட் தாக்குதல்களால் இஸ்ரேல் மிக அதிகமான பாதிப்புகளுக்கு ஆளான பின்பு வேகவேகமாக தன்னிச்சையாக போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது. இஸ்லாமிய பண்புகளின் அடிப்படையிலும் எகிப்து மற்றும் கத்தார் நாடுகளின் மத்தியஸ்தத்தின் காரணமாகவும் ஹமாஸ் இந்த போர் நிறுத்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டது. இந்த போர் நிறுத்த அறிவிப்பிற்கு பின்னர் ஹமாஸ் இயக்கம் போர் தான் ஓய்ந்து விட்டதே நாம் ஓய்வெடுப்போம் என்று சென்று விடவில்லை. அதன் பின்னர் அதற்கடுத்த நாளிலேயே ஆயிரக் கணக்கான ராக்கெட்டுகளை தயாரிக்கத் தொடங்கிவிட்டதாக பிரஸ் டிவி என்ற செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த செய்தி ஜெருசலத்தை வெற்றி கொள்ள காரணமாக இருந்த நூருத்தீன் ஸங்கி அவர்களின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுப்படுத்தியது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் போர் இல்லாத சமயத்தில் தங்களுடைய போர் வீரர்களை குதிரைகளை கொண்டு விளையாடும் போலோ போன்றதொரு விளையாட்டை விளையாட செய்தார்கள். தாங்களும் விளையாடினார்கள். இதற்கான காரணத்தை கேட்டபோது குதிரைகள் ஓடும் சத்தம் எதிரிகளின் காதில் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் நம்மை தாக்கும் எண்ணம் எதிரிகளுக்கு வராது என்று பதிலளித்தார்கள். அதையே தான் ஹமாஸ் இயக்கத்தினரும் செய்துள்ளார்கள். போர் நிறுத்தம் முடிவான அடுத்த நாளே ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை தயாரிக்க தொடங்கிவிட்டது என்ற செய்தி இஸ்ரேலுக்கும் யூத சியோனிஸ்டுகளும் பெரும் கலக்கத்தை உருவாக்கியிருக்கும் என்றால் மிகையல்ல. ஹமாஸை மீண்டும் தாக்கும் எண்ணம் இஸ்ரேலுக்கு வருமா என்றால் நிச்சயம் வராது. அப்படி ஒரு தவறை பெருமைக்காக இஸ்ரேல் மீண்டும் செய்தால் இஸ்ரேல் இனி பிழைக்காது.




அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்; இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம்; அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்); அவர்களை நீங்கள் அறியமாட்டீர்கள்- அல்லாஹ் அவர்களை அறிவான்; அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும், (அதற்கான நற்கூலி) உங்களுக்கு பூரணமாகவே வழங்கப்படும்; (அதில்) உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்பட மாட்டாது. (அல்குர்ஆன் 8:60)

https://www.newsdirectory3.com/hamas-resumes-production-of-thousands-of-rockets-to-stop-israeli-regime/

https://www.presstv.com/Detail/2021/05/30/657873/Palestine-Hamas-announcement-production-thousands-rockets

- அபூ அஃப்ரஹ்



# இஸ்ரேலை ஹமாஸ் வென்றது எப்படி?

பாதுகாவலுக்கு வழிதேடி வந்து புலி வாலை புடித்தால் என்ன நடக்கும்!. அதுதான் இஸ்ரேலின் கதி. இஸ்ரேல் சர்வ வல்லமை பொருந்திய அரசு என்றாலும் அதன் நிம்மதி தினம் தினம் பறிபோகிறது. அதன் உச்சக்கட்டம் தான் இந்த போரில் நடந்தது.

இஸ்ரேல் – பாலஸ்தீன போர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. தற்காலிக போர் நிறுத்தத்தின் அடிப்படையில் 11 நாட்களாக நடந்த போர் முடிவுக்கு வந்திருக்கிறது.

ஒரு நாடு போர் நிறுத்தத்திற்கு வருகிறது, அதுவும் சர்வ வல்லமை பொருந்திய நாடு என்று சொல்லக்கூடிய இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டிருக்கிறது என்றால் அதன் பாதிப்பு எதிர்தரப்பை விட இஸ்ரேலுக்கு அதிகமானதாக இருந்திருக்கிறது என்பதே உண்மை.

உதாரணத்திற்கு சமீபத்தில் ஆப்கான் பகுதியில் இருந்து அமெரிக்க படை வெளியேற்றத்திற்கான ஒப்பந்தம் நடந்தது. இதனை ஆப்கானில் அமெரிக்க படைக்கு எதிராக செயல்படும் தாலிபான்களின் வெற்றியாகவே அனைத்து சர்வதேச பத்திரிக்கைகளும் எழுதினார்கள். காரணம் அமெரிக்கா விட்டுக் கொடுத்து போகவில்லை. கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டனர். அதனை மறைப்பதற்கு அமெரிக்கா ''அமைதி ஒப்பந்தம்'' என்று மீசையில் மண் ஒட்டவில்லை என்றார்கள்.

இது தான் இஸ்ரேல் – பாலஸ்தீன் போரிலும் நடந்திருக்கிறது. இந்த போரில் இழப்புகள் யாருக்கு அதிகம் என்று கணக்கெடுத்தால் கண்டிப்பாக பாலஸ்தீனிய மக்களுக்கு தான் உயிரிழப்பும், பொதுமக்களின் வாழ்வியல் இழப்பும் அதிகம். ஆனால் இது பாலஸ்தீனிய மக்களுக்கு புதிது அல்ல. போர் சமயத்தில் கூடுதல் மரணங்கள் மற்ற நேரங்களில் மரணங்களின் எண்ணிக்கை குறைவு என்ற அளவில் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டு கொண்டே தான்இருக்கிறார்கள். ஆனால், இஸ்ரேலில்பொது மக்கள் பலி என்பது சுத்தமாக கிடையாது, அதே நேரத்தில் பொருளாதார இழப்பிலோ அல்லது இராணுவ கட்டமைப்பின் தோல்வி என்று இந்த போரை அணுகினால் அது இஸ்ரேலுக்கு பெரும் தோல்வியை கொடுத்திருக்கிறது. அது தான் இஸ்ரேலை போர் நிறுத்தத்தின் பக்கமும் நகர்த்தியிருக்கிறது.

இஸ்ரேல் – பாலஸ்தீன் போரை நில ரீதியாக தெளிவாக புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்த போரில் களத்தில் உள்ளவர்கள் இஸ்ரேலும், காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸ் பகுதியினர் மட்டும் தான். உலக நாடுகளில் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளும், UAE சவூதி போன்ற அரபு நாடுகள் இஸ்ரேலின் பக்கமும், ஈரான், துருக்கி போன்ற நாடுகள் பாலஸ்தீன் பக்கமும் நின்றன.

இந்த போரில் சண்டையிடுபவர்கள் இஸ்ரேலும் காஸாவும் மட்டும்தான். உலக நாடுகள்

பேச்சுவார்த்தையில் தான் பங்கெடுத்தது தவிர போரில் இல்லை.

இஸ்ரேல் தமிழ்நாட்டை விட ஆறு மடங்கு சிறிய நிலப்பரப்பு கொண்டது. இதுவே காஸா பகுதி 360 மடங்கு தமிழ்நாட்டை விட சிறியது.

அதாவது காஸா தன்னை விட 60 மடங்கு பெரிய நிலப்பரப்பு கொண்ட ஒரு நாட்டுடன் சண்டையிடுகிறது.

இதில் காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸிடம் இஸ்ரேலிடம் இருப்பது போலான பெரிய நவீன ஆயுதங்கள் கிடையாது. 100 கி.மீ மட்டுமே செல்லக்கூடிய ராஃக்கெட்டுகளை வைத்து தான் தாக்குகிறார்கள். ஆனால் இஸ்ரேல் உலக அளவில் இருக்கும் அதிநவீன ஆயுதங்களை கையில் வைத்திருக்கிறது.

உதாரணத்திற்கு சொன்னால், காஸா சென்னையை விட மிக சிறியது.

இதற்குள் 25லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள். இதில் 12லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கிறார்கள். இஸ்ரேலிய பகுதியில் இருக்கும் முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும் கூட காஸாவிற்குள் அடைக்கலம் புகுவார்கள். இஸ்ரேலில் மொத்தம் 90 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள். இதில் இஸ்ரேலிய குடியுரிமை பெற்றவர்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி வழங்கப்படுகிறது. அதனால் இஸ்ரேலிய மக்கள் சாதாரணமானவர்கள் இல்லை. இராணுவ பயிற்சி பெற்றவர்கள்.

இப்படியொரு நிலையில் காஸா தனது சிறு பகுதிக்குள் ராக்கெட் தளங்கள் அமைத்து எதிரிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டும். பொதுமக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

இந்த சூழல் புரிந்து இஸ்ரேல் – காஸா பிரச்சனையை பாருங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்த கண்ணோட்டத்தில் இனி இந்த போரின் விளைவுகளை அணுகுங்கள். அதாவது,

உதாரணத்திற்கு, மதுரை மாவட்டம் முழு தமிழ்நாட்டையும் எதிர்த்து சண்டை போடுகிறது என்பது தான் காஸா– இஸ்ரேல் சண்டை.

இதில் மதுரை மாவட்டத்திற்குள் தனிப்பட்ட எந்த வசதியும் கிடையாது, மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைக்கு கூட தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களை சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. இதே நிலை தான் காஸா VS இஸ்ரேலில் நிலவுகிறது. இனி விரிவாக பார்ப்போம்

## இஸ்ரேல் – பாலஸ்தீன் போர் 2021

தொடக்கத்தில் அல் அக்ஸா மசூதியில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பு, இஸ்ரேலின் வீதிகளில் முஸ்லிம்களுத்திரான கோஷங்களை எழுப்பி யூதர்கள் கலவரத்தில் ஈடுபடுதல், முஸ்லிம்களை செய்க் ஜர்ராஹ் பகுதியிலிருந்து வெளியேற்றல் என தொடர்ந்த இஸ்ரேலிய வன்முறைக்கு எதிராக காஸா பகுதியில் இருந்து ஹமாஸ் எதிர்ப்பை காட்ட தாக்குதலை தொடங்கியது. இது போராக உருவெடுத்து 11 நாட்கள் முடிவில் போர் நிறுத்தம் நடந்திருக்கிறது. இதனை இஸ்ரேலின் தோல்வியாகவும், பாலஸ்தீனியர்களின் வெற்றியாகவுமே சர்வதேச பத்திரிக்கையாளர்கள் பார்க்கிறார்கள்.





இதில் இஸ்ரேல் – காஸா பகுதியின் போரின் வெற்றி, தோல்வி பற்றி ஆராய்வோம்.

## காஸாவின் தாக்குதல்கள்

இஸ்ரேலிய அரசு காஸா பகுதியை தான் தனக்கு பெரும் தலைவலியாக எப்போதுமே பார்க்கிறது. யூதர்களின் முழுமையான பாலஸ்தீன ஆக்கிரமிப்புக்கு தடையாக இருப்பது காஸாவை நிர்வகிக்கும் ஹமாஸ் அமைப்பினர் மட்டும் தான்.

காஸாவிற்கு எளிமையாக போய் வர முடியாது. ஒன்று, இஸ்ரேல் தூதரக அனுமதியுடன் செல்ல வேண்டும் அல்லது எகிப்து தூதரக அனுமதியுடன் மட்டுமே செல்ல வேண்டும்.

காஸாவின் மின்சாரத்தேவையும் பெரும்பாலும் இஸ்ரேலிய அரசை சார்ந்தே இருக்கிறது. இந்த போரில் இஸ்ரேலின் தரப்பில் இருந்து காஸாவுக்கு கிடைக்கும் மின்சாரம் முழுக்க தடை செய்யப்பட்டது.

இத்தனை தடைகளுக்கு மீறி தான் இஸ்ரேலை எதிர்கொண்டது ஹமாஸ்.

## தொடக்க தாக்குதல்

போரின் தொடக்கத்தில் இருந்தே ஹமாஸ் தங்கள் எதிர்ப்பை காட்ட தயங்கவில்லை. இஸ்ரேல் தங்களை பயமறுத்த முடியாது என்று வெளிப்படையாக அறிவித்தார்கள்.

11ம் தேதி இஸ்ரேலின் முக்கிய நகரில் ஹமாஸின் தாக்குதல் தொடங்கியது. அப்போதே இஸ்ரேலின் விமான போக்குவரத்து மூடப்பட்டு மக்கள் பதுங்கு குழிகளில் அடைக்கலம் ஆகினார்கள். இந்த தாக்குதலுக்கு பிறகு ஹமாஸை ஒழித்து கட்டுவோம் என்று இஸ்ரேல் கூறியதற்கு பதிலடியாக நாங்கள் எதற்கும் தயார் என்று பதிலறிக்கை விட்டனர் ஹமாஸ் அமைப்பினர்.

இஸ்ரேலின் மத்திய பகுதியை தாக்கும் அளவுக்கு ஹமாஸின் பதிலடி இருக்கும் என்பதையும் தனது தடுப்பு ஏவுகணையான IRON DOME ஹமாஸின் ஏவுகணைகளை தடுக்க தவறியது என்பதும் இஸ்ரேலிய படைக்கு பெரும் அதிரிச்சியாக இருந்தது.

இதற்கு விளக்கம் அளித்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பால் 24 மணி நேரத்திற்கு மேல் தாக்குபிடிக்க முடியாது என்றும் அறிவித்தது.

ஹாமாஸின் தொடர் தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவ வீரர் பலியானார். அதைவிட மோசமான தாக்குதலாக இஸ்ரேலின் எய்லாட்–அஸ்கெலான் (Eilat-Ashkelon oil pipeline) ஆயில் பைப் பாதையை ஹமாஸின் ராக்கெட் தாக்கியது. இந்த பைப்லைன் 254கி.மீ தொலைவு கொண்ட இஸ்ரேலின் மிக முக்கியமான வர்த்தகமாக இருக்கிறது. இந்த பைப்லன் வர்த்தகத்தில் UAE அரசுக்கும் தொடர்பிருக்கிறது. அதனால் தான் UAE இஸ்ரேலுக்கு ஆதரவாக ஹமாஸ் அமைப்பினர் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று தொடக்கத்திலேயே அறிக்கை வெளியிட்டது.

இந்த பைப்லைன் தாக்குதலுக்கு பிறகு பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பிருப்பதால் இஸ்ரேல் அதிக கவனத்துடன் ஹமாஸின் தாக்குதலை எதிர்கொண்டார்கள்.

தங்களது IRON DOME ஏன் இந்த தாக்குதலை தடுக்கவில்லை என்ற கேள்விக்கு சின்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது. பேட்டரி மாற்றி அதனை விரைவில் சரி செய்து விடுவோம் என்று பதில் கொடுத்தார்கள். (அண்ணாச்சி இதுல பேட்டரி இல்ல– சந்தானம் காமெடி)

இதனோடு ஹமாஸின் ராக்கெட் தாக்குதல் இஸ்ரேலின் டைமானோ நகரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நகரம் தான் இஸ்ரேலின் அணு ஆயுத உற்பத்தி நடைபெறும் இடமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. அணு ஆயுத சோதனை இடத்தில் ராக்கெட் தாக்குதல் நடந்ததை பெரிய ஆபத்தாக கருதினார்கள் இஸ்ரேலியர்கள்.

இந்த தொடக்க தாக்குதலே இஸ்ரேல் இராணுவத்துக்கு ஹமாஸின் பலத்தை புரிய வைத்தது. இஸ்ரேலின் இந்த பாதிக்கப்பட்ட செய்திகள் முழுக்க இஸ்ரேலிய அதிகாரப்பூர்வ செய்தி தளமான TIMES OF ISRAEL–ல் வந்தது.

இந்த தாக்குதல் தொடர்பாக எழுதிய ஆங்கில இந்து பத்திரிக்கை 2014 இஸ்ரேல்–காஸா போரையும் தற்போதைய சூழலையும் குறிப்பிட்டு எழுதியது. அதில், "ஹமாஸ் 4000 ராக்கெட்டுகளை மொத்தம் 50 நாட்களில் வீசியது, தற்போது இரண்டு நாளில் 850 ராக்கெட்டுகளை வீசியிருக்கிறது. அதுவும் சில நிமிடங்களுக்குள் ஒரே நேரத்தில் 100 ராக்கெட்டுகளை ஹமாஸினால் அனுப்ப முடிகிறது என்றால் ஹமாஸ் இந்த போர் சூழலுக்கு தயாராகவே இருந்திருக்கிறது." என்று குறிப்பிட்டது.

## இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் சிறைப்பிடிப்பு

இஸ்ரேலின் இராணுவ வீரர்களை சிறை பிடித்தது ஹமாஸ் இராணுவ அமைப்பு. ஆனால் இதனை செய்திகளில் பரவாமல் பார்த்து கொண்டது இஸ்ரேலிய ராணுவம்.

ஹமாஸின் இந்த யுக்தியை முறியடிக்க இராணுவ வீரர்கள் மிலிட்டரி உடையில் நடமாடாமல் பொது மக்கள் போல் இருக்க வேண்டும் என்று இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

## இராணுவ வீரர்கள் மீது தாக்குதல்

இஸ்ரேலில் பொது மக்கள் பலி குறைவாகவும், காஸா பகுதியில் பொதுமக்கள் பலி அதிகமாக இருப்பதற்கு காரணம், இஸ்ரேலிய ஏவுகணைகள் பொது மக்களை குறி வைக்கின்றன. ஹமாஸ் அமைப்பினர் ஏவும் ஏவுகணைகள் இஸ்ரேலின் இராணுவ தளங்களையும், வீரர்களையும் குறி வைக்கின்றன.

ஹமாஸின் முதல் தாக்குதலில் இஸ்ரேலின் இராணுவ வீரர் ஒருவர் பலியானார். அதனை தொடர்ந்து இஸ்ரேலின் ஜிக்கிம் இராணுவ தளத்தில் ஒரு ஏவுகனை தாக்குதல் நிகழ்த்தியது ஹமாஸ். இதில் பத்து இராணுவ வீரர்கள் வந்த புல்லட் புரூப் கொண்ட இராணுவ வாகனம் தாக்குதலுக்கு உள்ளானது. ஆனால், ஒரு இராணுவ வீரருக்கு காயம் மற்ற வீரர்களுக்கு காயம் இல்லை என இஸ்ரேல் கூறுகிறது.

## இணைய வழித்தாக்குதல்

ஹமாஸ் அமைப்பின் மற்றொரு மிகப்பெரிய பலம் இணையவழித்தாக்குதலை இஸ்ரேல் மீது நிகழ்த்துவது. கடந்த காலங்களில் பல முறை இஸ்ரேலின் அதிமுக்கிய ரகசிய தளங்களில் ஹேக்கிங் செய்து பல தகவல்களை எடுத்திருக்கிறார்கள்.

சென்ற வருடம் 2020ல் பல்வேறு இஸ்ரேலிய இராணுவ வீரர்களின் போன்களை ஹேக் செய்து இஸ்ரேலின் ரகசிய தகவல்களை எடுத்தனர்.

ஹமாசின் இந்த டிஜிட்டல் பலத்தை உணர்ந்தே இஸ்ரேல் இராணுவம் வீடுகளில் உள்ள வெப்கேமராக்களையும், பாதுகாப்பு கேமராக்களையும் நிறுத்தி வைக்க (off) உத்தரவிட்டது. காரணம், இஸ்ரேலின் ஒவ்வொரு நடவடிக்கையும் கேமராக்களை ஹேக்கிங் செய்து ஹமாஸ் அமைப்பினர் தெரிந்து கொள்ளக்கூடாது என்று கூறினார்கள்.

அதுமட்டுமல்ல, போருக்கு நடுவில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலின் முக்கிய ரகசிய இணையதளத்தை ஹேக் செய்து இஸ்ரேலுக்கு உளவு பார்க்கும் 40 பேரை காஸாவில் கைது செய்தார்கள்.

இஸ்ரேலின் IRON DOME என்ற தடுப்பு ஏவுகணை 2011ல் உருவாக்கப்பட்டது. அப்போதிலிருந்து இன்று வரை அதன் எரிபொருளிலோ, செயல்பாட்டையோ இஸ்ரேல் மாற்றவில்லை. ஆனால், அதன் சாப்ட்வேரை மட்டும் தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டே இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் ஹமாஸின் ஹேக்கிங் திறன்.

## ஹமாஸின் ஆயுத பலம்

போரின் பொது ஹமாஸ் ஆயுத பலத்தையும் இஸ்ரேலின் எதிர் நடவடிக்கையையும் TIMES OF ISRAEL என்ற இஸ்ரேலிய பத்திரிக்கை வெளியிட்டது.

அதில், இஸ்ரேலின் ராணுவ தளபதி சொல்லும் போது

இதுவரை(மே 18 வரை) மொத்தம் 4000 ராக்கெட் ஏவுகணைகள் இஸ்ரேலின் மீது வீசப்பட்டிருக்கிறது. இதில் பாதியளவு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் மோட்டார் குண்டுகள்.

இஸ்ரேலிய இராணுவத்தினர் பயம் கொள்ளும் முக்கிய விடயங்களில் ஒன்று, ஹமாஸ் அமைப்பு தன்னிடம் இருக்கும் பலம் பொருந்திய ஏவுகணைகளை இந்த போரில் பயன்படுத்தவே இல்லை. அந்த ஏவுகணை பல நூறு கிலோ கொண்ட வெடிபொருட்களை கொண்டது. அது ஏவப்பட்டால் அதனை தடுப்பதும் கடினம். ஆபத்தும் பெருமளவு இருக்கும். 2019ல் இதுபோல் ஹமாஸ் அமைப்பினரால் ஏவப்பட்ட அந்த ஏவுகணையால் பாதிப்பு பெருமளவு இருந்தது என இஸ்ரேலிய இராணுவ அதிகாரி குறிப்பிட்டார்.

என்ன காரணத்தினால் தங்களிடம் இருக்கும் ஆபத்தான ஏவுகணைகளை பெருமளவில் உபயோகிக்கவில்லை என்று தெரியவில்லை என்றும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி குறிப்பிடுவது போல சக்தி குறைந்த ராக்கெட்டுகளை வைத்து இஸ்ரேலுக்கு இத்தகைய பாதிப்புகளை உருவாக்கியிருக்கிறது என்றால் ஹமாஸின் தொடர் தாக்குதல்கள் இஸ்ரேலின் இமேஜை உலகளவில் சிதைத்து விடும் என்று இஸ்ரேல் கண்டிப்பாக உணர்ந்திருக்கிறது.

ஹமாஸ் பகுதிக்கு எந்த உலக நாடுகளுடனும் ஆயுத உற்பத்தி விற்பனை கிடையாது. ஆனால் இஸ்ரேலின் ஆயுத விற்பனை உலகின் பல நாடுகளுடன் இருக்கிறது. இந்தியாவிற்கு கூட ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக அதிக ஆயுதங்களை விற்பனை செய்வது இஸ்ரேல் தான்.

இந்த நிலையில் இஸ்ரேலை ஒரு மிகச்சிறிய குழு பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது என்ற நிலை உருவானால் இஸ்ரேலின் ஆயுத விற்பனை பெருமளவு பாதிக்கும். இஸ்ரேலின் ஆயுதங்களை மிகச்சிறிய குழு வென்றிருக்கிறது என்பது இஸ்ரேலின் ஆயுதங்கள் மீது உலக நாடுகள் சந்தேகத்தை உருவாக்கும்.

உதாரணத்திற்கு அஜர்பைஜானின் போரில் அர்மீனியா வைத்திருந்த ரஷ்யாவின் அதிதீவிர தடுப்பு ஏவுகணை S-300ஐ துருக்கியின் ட்ரோன்கள் மூலம் அஜர்பைஜான் அழித்து காட்டியது. இதுவே போர் நிறுத்தத்திற்கு காரணமாக மாறி அஜர்பைஜான் வெற்றிக்கு காரணமாக பின்னாட்களில் அமைந்தது.

இதுபோலவே இஸ்ரேலின் IRON DOME போன்ற அதிநவீன ஆயுதங்களில் ஏற்பட்ட கோளாறுகளை உலகளவில் மறைக்கவே போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒருவேளை போர் தொடர்ந்திருந்து ஹமாஸ் தங்களது நவீன ஆயுதங்களை பயன்படுத்தியிருந்தால் இஸ்ரேலுக்கு பெரும் அவமானம் காத்திருக்கும் என்பதை உணர்ந்தே போர் நிறுத்தத்திற்கு வந்தது.

## போர் நிறுத்தம்

இஸ்ரேல் தரப்பு போர் நிறுத்தம் பற்றி பேசிய போது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸ், போர் நிறுத்தத்திற்கு பற்றி யோசிப்பதற்கு முன்னால் முழு நிரந்தர அமைதியை ஏற்படுத்தி ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழித்து விடுவோம்'' என்றார்.

பிரதமர் நெதன்யாகு, '' இது தொடக்கம் தான், நீங்கள் கனவிலும் நினைக்காத தாக்குதலை நாங்கள் தொடுப்போம் என்றார்.

ஆனால் 11 நாட்கள் தாக்குதலுக்கு பிறகு இஸ்ரேலே போர் நிறுத்தத்திற்கு முன்வந்தது. (அந்தளவுக்கு அடி)



போர் நிறுத்தத்தை பற்றி குறிப்பிட்ட ஹமாஸ் அமைப்பினர், “ நாங்கள் பாலஸ்தீன் முழுக்க இருக்கும் இஸ்ரேலிய படைகளை தாக்குதவற்கு தயாராகவே இருந்தோம். இருப்பினும் நாங்கள் போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்கிறோம்.” என்றனர்.

போர் நிறுத்த சூழல் உருவானால் ஹமா ஸிடம் பிடிபட்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவ வீரர்களையும், சட்டவிரோதமாக காஸாவுக்குள் நுழைந்த யூதர்களையும் இஸ்ரேலிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் போர் காலத்திலேயே இஸ்ரேலிய தரப்பால் வைக்கப்பட்டது. ஆனால் இஸ்ரேல் இப்படி கண்டிசன் போட்டு போர் நிறுத்தம் செய்யும் இடத்தில் இல்லாததால் எதையும் பேசாமல் போர் நிறுத்தத்திற்கு வந்திருக்கிறது.

போர் நிறுத்தத்திற்கு பிறகு காஸாவின் முக்கிய சாலையை திறந்திருக்கிறது இஸ்ரேல். இந்த பாதை மூலம் காஸாவுக்கு ஐக்கிய நாடுகள் வழியாக கொடுக்கப்பட்ட உதவிகள் காஸாவில் இருக்கும் மக்களுக்கு சென்றடைந்தது. இதனை இஸ்ரேல் உதவியாக செய்யவில்லை. ஹமாஸின் தாக்குதலுக்கு அடிபணிந்து இதையெல்லாம் செய்திருக்கிறது.

## காஸாவின் வெற்றிக்கு பின்னால் இருக்கும் நாடுகள்

ஹமாஸின் தொடர் வளர்ச்சிக்கு பின்னால் ஈரான், துருக்கி பெரும்பாலும் உதவுகின்றன. எகிப்து தரை வழியில் ஒன்றிருப்பதால் சில உதவிகளை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறது.

## ஈரான்

ஈரானின் ஆயுத தொழிற்நுட்பம் தான் ஹமாஸை இயக்குகின்றன. ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சிக்கு பிறகு இஸ்ரேலை நேரடி எதிரியாக பாவிக்கிறது ஈரான். ஹமாஸுக்கு வெளிப்படையான நேரடி ஆதரவை தருகிறது. ஹமாஸின் 50%க்கும் அதிகமான ஆயுதங்கள் ஈரானின் தொழிற்நுட்பம். இந்த ஈரானின் உதவிக்கு நேரடியாக போர் முடிந்ததும் ஹமாஸின் இராணுவ தளபதிகள் நன்றியை தெரிவித்து கொண்டார்கள்.

## துருக்கி

துருக்கி இஸ்லாமிய ஓட்டமன் சாம்ராஜ்ஜியத்தில் இருந்து விலகிய பிறகு முழுமையாக குடியரசு அமைப்பின் கீழ் சென்று இஸ்லாமிய கொள்கைகளுக்கு எதிராக நின்றது. செயல்பட்டது. அதன் பிறகு துருக்கியில் எர்துகானின் வெற்றிக்கு பிறகு நிலைமை சீர்செய்யப்பட்டு இஸ்லாமிய நடைமுறைகளை அரசாங்கத்தில் கொண்டு வருகிறார்கள். இதில் எர்துகான் அரசு முழுமையாக பாலஸ்தீனுக்கு ஆதரவாக நிற்கிறது. OIC (Organisation of Islamic Cooperation) எனப்படும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பை கூட்டி பாலஸ்தீனத்திற்கு ஆதரவான கருத்துகளை வெளிப்படுத்தியது. ஹமாஸ் அமைப்பிற்கு மறைமுக ஆதரவை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

அடுத்ததாக, **எகிப்து**

தரை வழியில் காஸாவின் எல்லை எகிப்துடன் மட்டும் தான் பகிர்ந்து கொள்கிறது.

பாலஸ்தீனின் சுதந்திரத்தை வெளிப்படையாக ஆதரித்து அதனை தனி நாடாக முதன் முதலாக 1988ல் அங்கிகரித்தது எகிப்து. இதற்கு பிறகு தான் மற்ற முஸ்லிம் நாடுகளே பாலஸ்தீனை அங்கிகரிக்க தொடங்கின. தொடக்கத்தில் இருந்தே பாலஸ்தீன் பிரச்சனைக்கு ஆதரவாக குரல் கொடுத்தே வருகிறது எகிப்து. இந்த குரல் முஸ்லிம்களுக்கு ஆதரவான குரலாக இல்லாமல் தேசியவாதத்துடன் இணைத்து பார்க்கிறது எகிப்து. அதனுடன் எகிப்திய மக்கள் பாலஸ்தீனின் ஒவ்வொரு பிரச்சனையும் தங்களுக்கு ஏற்படுவதை போல் கருதுகிறார்கள். அதனால் தான் இஸ்லாமிய அரசுக்கு எதிரான அரசு எகிப்தின் அதிகாரத்தில் இருந்தாலும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்கிறது. அதனால் தான் தற்போது ஆட்சியில் இருக்கும் சிசியின் சர்வாதிகார எகிப்து அரசும் காஸாவிற்காக குரல் எழுப்பியிருக்கிறது. போர் சூழல் கடுமையாக இருக்கும் போதே காஸாவுக்கு தேவையான மருத்துவ தேவைகளை தனது எல்லை வழியாக அனுப்பி வைத்தது எகிப்து.

இதனுடன் இன்னும் சில நாடுகளும் காஸா விற்காக குரல் கொடுத்திருக்கின்றன. இந்த அனைத்து உதவிகளுக்கும் பின்னாலும், உதாவ தவர்களுக்கு பின்னாலும் ஒரு அரசியல் இருக் கிறது. அதை பின்னாட்களில் விரிவாக பார்க்கலாம்.

அனைத்து ஆய்வு பின்னணிகளையும் கடந்து, அனைத்து ஆயுத பலத்தையும் கடந்து ஹமாஸ் அமைப்பினர் ஒவ்வொரு முறையும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டனர். அவர்களது ஈமான் பலம் மட்டுமே வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது.

உலகின் மூலை முடுக்கெல்லாம் முதலாளித் துவ நாடுகள், சர்வ வல்லமை பொருந்திய நாடு களுக்கு அடிமையாக இருக்கும் போது முஸ்லிம் கள் மட்டும் தான் தொடர் எதிர்ப்பை அடக்கு முறைக்கு எதிராக தொடுத்து வருகிறார்கள். அந்த கூட்டம் சிறியதோ, பெரியதோ அடக்கு முறைக்கு எதிராக தொடர்ச்சியாக போராடுபவர் களுக்கு இறைவன் வெற்றியை கொடுக்கிறான்.

''எத்தனையோ சின்னஞ்சிறு கூட்டம், அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பெரும் பெரும் கூட்டங்களை வெற்றி கொண்டிருக்கிறது; மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுட னேயே இருக்கின்றான்.'' (2:249)

– அபூ சித்திக்

# ஏம்பல் தஜ்ஜமுல் முஹம்மத் - மரணம்

இல்லாலில்லாஹி வா இன்னா இலைஹி ராஜிவூன்

கொரோனா கொள்ளும் பலிகளுக்கு அளவில்லை. சமுதாய செல்வங்களை இழந்து வருகின்றோம்.

சிறந்த எழுத்தாளராகவும், இஸ்லாமியச் சிந்தனையாளராய் பரிணமித்தவர் ஏம்பல் தஜ்ஜமுல் முஹம்மத். எமது உறவு எழுத்துத் துறை–இல் தொடங்கி, தொடர்ந்து இஸ்லாமிய இலக்கியக் கழகம், இவற்றில் அறிமுகமாகி தொடர்ந்துகொண்டே இருந்தது. அவரது கடைசி நாள்கள் வரை. இடையே அவருடைய நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்திட வேண்டும் என்றார். எழுத்துத் துறையில் நான் எடுத்துக் கொண்ட பணிகள் நிரம்பவே காத்திருப்பில் இருக்கின்றன. அதனால் புதிய மொழிப் பெயர்ப்புகளை எடுத்திட இயலாது என்றேன். ஆனால் அவர் ஆங்கிலத்திலிருந்து தமிழில் பல நல்ல மொழிப் பெயர்ப்புகளைத் தந்திருக்கின்றார். அவரே அவற்றைச் செய்யலாம் என்றேன். ஆனால்,, அவர் ஏனோ என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். என்னால் முடியவில்லை ; என்பதையே சொன்னேன். எனினும் நாங்கள் தொடர்ந்து இலக்கியங்கள் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தோம்.

அல்லாஹ் அவரை அழைத்துக் கொண்டான். அவரைப் பொருந்திக் கொள்வானாக!. சுவர்கத்தில் உயர்ந்த அந்தஸ்தைத் தந்திடுவானாக.

அவர் அதிகம் விரும்பிய கவிக்கோவை அல்லாஹ் ஒரு ரமழானில் அழைத்தான். இவரை இன்னொரு ரமழானில் அழைத்தான். இப்படி நரகத்தை மூடி வைத்து, சொர்க்கத்தை திறந்து வைத்திருக்கும் ரமழானில் அல்லாஹ் இவர்களை அழைத்துக் கொண்டான்.

# இஸ்ரேல்–காஸா
# போருக்கு பின்னாலான நிகழ்வுகள்

இஸ்ரேல் – காஸா போரில் போர் நிறுத்த ஒப்பந்த முடிவுக்கு பிறகு பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கிறது. இந்த போரில் ஹமாஸ் அமைப்பினர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றாலும் கூட இஸ்ரேலின் பயங்கரவாதம் தொடர்கிறது. இஸ்ரேலில் ஆட்சி மாற்றமும் நிகழ்ந்திருக்கிறது.

## இஸ்ரேலின் கட்டுக்கதைகள்

இஸ்ரேல் இராணுவம் தொடர்ச்சியாக காஸா பகுதிக்குள் குடிமக்களின் வாழ்வாதாரங்களை மையம் கொண்டே தாக்குதல் நடத்தியது. ஹமாஸ் இராணுவத்தளத்தின் மீது குறிவைத்து மொத்த தாக்குதலும் நடத்தவில்லை.

இஸ்ரேல் அரசு தனது இமேஜ உலகளவில் பாதுகாக்க நாங்கள் ஹமாஸை ஒழித்துவிட்டோம். அவர்களின்ஆயுதங்களைஒழித்துவிட்டோம்என்று தோற்ற பிறகும் பேசிக்கொண்டே இருந்தார்கள். இதிலொன்று தான் ஹமாஸ் அமைப்பினர் ஐந்து ஆண்டுகாலமாக உருவாக்கிய சுரங்கங்களை ஒழித்து விட்டோம் என்றனர்.

ஆனால், ஹமாஸ் அமைப்பினர் போர் நிறுத்தம் முடிந்த சில நாட்களிலேயே எங்கள் சுரங்களில் சிறிய பாதிப்பு இருந்தது. அதனை சரிசெய்து விட்டோம் என்று அறிக்கை கொடுத்தனர். கிட்டத்தட்ட 30 அடி ஆழம் கொண்ட 500 கி.மீ தொலைவு கொண்ட சுரங்கங்கள் ஹமாஸிடம் இருப்பதாக சொல்லப்படுகிறது.

காஸா பகுதியே மொத்தம் 32 ச.கிமீ எனும் போது ஹமாஸின் சுரங்கங்கள் 500 கி.மீ நீளம் கொண்டது என்றால் பல நாடுகளை இணைக்கும் சுரங்கங்கள் அவர்களிடம் இருக்கிறது. (The Statesman 06.06.2021)

## இஸ்ரேலின் தொடர் பயங்கரவாத செயல்கள்

போர் நிறுத்தம் உண்டான பிறகும் இஸ்ரேல் தொடர்ச்சியாக முஸ்லிம்களின் மீது தாக்குதலை நிகழ்த்தி வருகிறது.

முஸ்லிம்களை சீண்டும் விதமாக அல் அக்ஸா பள்ளிவாசலை நோக்கி யூதர்கள் இஸ்ரேல் கொடியை ஏந்தியவாறு பேரணி நடத்தினார்கள். அதில் முஸ்லிம் வெறுப்பு கோசங்களும், முஸ்லிம்களின் வழிகாட்டியாக இருக்கும் முகம்மது நபி (ஸல்) அவர்களை பற்றி மோசமான கோசங்களும் எழுப்பப்பட்டன.

ஜூன்15ம் தேதி இஸ்ரேலில் இருந்து காஸாவின் மீது ராக்கெட் தாக்குதலும் தொடுக்கப்பட்டது. இதில் உயிர் பாதிப்புகள் இல்லையென்றாலும் பொருளாதார இழப்புகள் காஸவிற்கு இருக்கிறது.

ஏற்கனவே காஸாவை நிர்வகிகும் ஹமாஸ் அமைப்பின் தலைவர் யஹ்யா, இதுபோல் இனியொரு யுத்தம் இஸ்ரேலுக்கும் – காஸாவுக்கும் நடக்குமானால் மத்திய கிழக்கு பகுதியில் இருக்கும் அரசியல் தலைகீழாக மாறி இஸ்ரேல் மொத்தமாக வீழும் என்று எச்சரிக்கை விட்டிருந்தார்.

இஸ்ரேலிய அரசு தனக்கு கீழிருக்கும் குடிமக்களையும் இராணுவ பயிற்சி கொடுத்து அனைவரையும் பயங்கரவாதியாக மாற்றி வைத்திருக்கிறது. அதன் பேரில் தினமும் பாலஸ்தீன முஸ்லிம்கள் யூத ஜியோனிஸ்ட்களால் அடித்தே கொல்லப்படுகிறார்கள். 27 வயதான இஸ்மாயில் என்ற பாலஸ்தீன முஸ்லிமும் இதே போல் கும்பலால் அடித்து கொல்லப்பட்டார்.

## இஸ்ரேலில் ஆட்சி மாற்றம்

இந்த போரின் முடிவுக்கு பிறகு இஸ்ரேலில் ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது. இஸ்ரேலிய பிரதமராக இருந்த நெதன்யாஹூவுக்கு பதில் நஃப்தாலி பென்னட் என்பவர் ஆட்சிக்கு வந்திருக்கிறார்.

பென்னட் வெளிப்படையாக முஸ்லிம்களுக்கு எதிராக பேசக்கூடியவர், நான் பல நூறு பாலஸ்தீன முஸ்லிம்களை கொன்றவன் என்று மேடைகளில் பெருமை பேசக்கூடியவர். இவர் தான் தற்போதைய இஸ்ரேலிய பிரதமர்.

போர் முடிந்து நிறுத்தம் ஏற்பட்டிருந்தாலும் முஸ்லிம்கள் இஸ்ரேலினுள் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டே வருகிறது.

இரு அரசுகளுக்கு(ஹமாஸ்– இஸ்ரேல்) இடைப்பட்ட போர் என்று வரும் போது எதையும் சாதிக்க முடியாமல் ஓடி ஒளிந்த இஸ்ரேல் தன் எல்லைக்குள் வாழும் முஸ்லிம்களை கொலை செய்து தனது பயங்கரவாத கோழைத்தனத்தை காட்டுகிறது.



# சாதனைப்பெண் முஜாஹிதா
# சமீரா முஹையித்தீன்
## (1948 - 2021)

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு சமீரா முஹையித் தீன் யார் என தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உலகளாவிய ஜிஹாதின் தந்தை (Father of Global Jihad) எனப் போற்றப்படும் முஜாஹிதீன் அப்துல்லா யூசுப் ஆஸம் அவர்களின் துணைவியரே சமீரா அவர்கள்.

ஜோர்டானில் வசித்து வந்த அவர் அண்மையில் இறப்பு எய்தினார் என்ற செய்தியை யுவான் ரிட்லி அவர்கள் எழுதிய பின்புதான் அறிய முடிந்தது. இறக்கும் பொழுது அவருடைய அகவை 73.

முஜாஹிதீன்களின் வரலாற்றை தேடிப் பிடித்து படிப்பதில் நமக்கு ஒரு அவா இருக்கத்தான்செய்கிறது. போர்களைப்பற்றியவரலாற்றை எழுதக் கூடியவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கின்றனர். அதிலும் அவர்கள் வீர மறவர்களின் வரலாற்றையே குறிப்பிடுகிறார்கள்.

போர்களில் வீர மங்கைகளின் பங்களிப்பை பற்றி அவர்கள் தனிக் கவனம் செலுத்துவதில்லை.

உலகளாவிய ஜிஹாத் இயக்கத்தின் வரலாற்றில் தவிர்க்கமுடியாத நபர் சமீரா. அவரின் இறப்பு செய்தியை சர்வதேச ஊடகங்களில் எங்கேயும் பார்க்க முடியவில்லை.

இதனாலேயே யுவான் ரிட்லி அவர்கள் இந்த பாலஸ்தீன பெண்மணியைப் பற்றிய குறிப்பை தருகிறார்கள். அந்த வரலாற்றை எல்லோரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.



யுவான் ரிட்லி

### அமெரிக்கா ஆதரித்த சமீராவின் ஜிகாத்

ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற நோக்கில் 24 டிசம்பர் 1979 அன்று காபூலை நோக்கி சோவியத் ரஷ்யாவின் ராணுவ பீரங்கிகள் முன்னேறின.

1981 இல் அரபுலகத்தில் இருந்த போராளிகளை ஆப்கானிஸ்தானை நோக்கி அணி திரட்டி கொண்டிருந்தார் அப்துல்லாஹ் ஆஸம். அவர் அப்பணியை உறுதியாய் செய்து கொண்டிருந்த வேளையில், ஆப்கன் போரில் பங்கெடுத்தவர்களில் மிக முக்கிய பெண் போராளியாக உருவெடுத்திருந்தார் சமீரா அவர்கள்.

உறுதியாக சொல்ல முடியும் போரில் அவர் மிக துடிப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் எனினும், அவரின் முயற்சிகளை மறந்து கடந்து விட்டதாகவே தோன்றுகிறது. சரித்திர புத்தகங்களில் அவருக்குரிய இடத்தை தராமல் விட்டு விட்டோமோ என்று தோன்றுகிறது.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஆப்கானிஸ்தானில் நடந்த ஜிஹாதிற்கு உதவி செய்து கொண்டிருந்த காலம் அது. எனவே 1970 – 1980 காலகட்டத்தில் பண உதவிகளும் இராணுவ உதவிகளும் வந்து குவிந்தன. கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் நடைபெற்ற இந்த யுத்தம் 15 பிப்ரவரி 1989 அன்று முடிவுக்கு வந்தது. சரியாக சொன்னால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

## பெண் முஜாஹிதீன்

இஸ்லாமாபாத்தில் தன்னுடைய குடும்பத்துடன் வசித்து வந்தார் சமீரா. கணவர் செய்த பல பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவருக்கு ஒன்பது பிள்ளை செல்வங்கள். முதல் குழந்தை ஃபாத்திமாவை 1966 இல் பாலஸ்தீனில் வைத்து பெற்றெடுத்தார். அடுத்த வருடத்தில் வாஃபா வை ஜோர்டானில் வைத்து பெற்றெடுத்தார். 1972 இல் எகிப்தில் முஹம்மது பிறந்தார். இப்ராஹிம், சுமைய்யா, ஹம்சா ஆகியோர் ஜோர்டானில் பிறந்தனர். மிசாப் 1984 இல் இஸ்லாமாபாத்தில் பிறந்தார்.

பெஷாவரில் செயல்படும் முஜாஹிதீன்களுக்கான சேவை மையத்தின் பெண்கள் குழுவின் தலைவராக சமீரா செயல்பட்டிருந்தும்கூட, அவரின் பங்களிப்பை, சேவையை மறந்து விட்டதாகவே தெரிகிறது. அவர் ஒரு மதிப்பு மிக்க இஸ்லாமிய அறிஞரும் கூட.

சமீராவும், இன்னும் பல அரபு, ஆப்கன் பெண்களும் இணைந்து பல செய்தி இதழ்களை நடத்தியுள்ளனர். இவை அனைத்தும் பெண் முஜாஹிதீன்களுக்காக அவர்களாலேயே எழுதப் பட்டு வெளியிடப்பட்டது.

1989இல் பெஷாவரில் நடந்த கார் குண்டு வெடிப்பில் அப்துல்லா ஆஸமும் அவருடைய இரண்டு மகன்களான முஹம்மதுவும் இப்ராஹிமும் படுகொலை செய்யப்பட்டனர். இந்த துயர சம்பவத்திற்கு பின், சமீரா அவர்கள் ஒரு அமைதியான வாழ்க்கையை தேர்ந்தெடுத்து வாழ்ந்திருக்கலாம்.

சோவியத் ரசியாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக முஜாஹிதீன்களை களம் காண வைத்த அப்துல்லாஹ் ஆஸமை குறிவைத்து ஏற்கெனவே இரண்டு முறை தாக்குதல்கள் நடந்துள்ளன.

கணவர் இறந்தபின் ஜோர்டனுக்கு வந்த சமீரா, அவருடைய சேவை பணிகளை தொடர்ந்தார். சோவியத்துக்கு எதிராக நடந்த ஜிஹாத் முடிவடைந்தபின், அகதிகளை மனிதநேயப் பணிகளை கொண்டும், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் வழியாகவும் ஆதரவளிக்க தொடங்கினார்.

அன்பு, ஞானம், கருணை இவற்றையே அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ளார். தனிப்பட்ட முறையில் அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால், அவருடைய கணவரை போன்று, மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர் சமீரா. மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்கா, ஆசியாவில் வாழ்ந்த பல பேர்களிடம் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

அவருடைய இளைய மகளான சுமைய்யாவை மணந்த அனஸ் அப்துல்லாஹ் அவரைப் பற்றி கூறுவதைக் கேளுங்கள்.

'சிந்தனைகளால்உத்வேகம்அளித்தவர்அவர். அவர் ஒரு தலைவர்' 'ஒரு தாயாக வாழ்ந்தார், அஸ்ஸாமின் மனைவியாக வாழ்ந்தார் என்ற வட்டத்துக்குள் அவரை சுருக்கிவிட முடியாது. அவர் அதற்கும் மேல். அவர் அல்லாஹ்வால் வழிநடத்தப்பட்டவர். ரமலான் மாதத்தில் அவர் அளவிற்கு நோன்பு வைக்கவோ, வணக்க வழிபாடுகளில் ஈடுபடவோ, குர்ஆனைஓதிடவோ எங்களால் முடியாது. குறைந்தது ஆறு அல்லது ஏழு முறை குர்ஆன் முழுவதையும் ரமலான் இறுதிக்குள் ஓதி முடித்திருப்பார் அவர்.'

அல்லாஹ்வால் வழிநடத்தப்பட்டவர் என்று ஒருவர் கூறுகிறார் என்றால் இதைவிட ஒரு மனிதனுக்கு வேறு என்ன நற்பேறு வேண்டும்?

## ஜியோனிஸ்டுகளே காரணம்

பலஸ்தீனமே தனது பூர்வீகம் என்பதை சமீரா மறக்கவில்லை. தனது சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக வெளியேறுபவர்களுக்கு சளைக்காமல் உதவி செய்து கொண்டிருந்தார். பலஸ்தீனத்தோடு மட்டும் அவர் உதவி செய்வதை மட்டுபடுத்தி விடவில்லை. 1967 இல் நடந்த ஆறு நாள் யுத்தத்தில் அவருடைய குடும்பம் பலஸ்தீனத்தில் இருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப் பட்டது.

அந்த யுத்தத்தில் சினாயையும், காசாவையும், கோலன் ஹைட்சையும், மேற்கு கடற்கரையையும் இஸ்ரேல் கைப்பற்றி இருக்காவிட்டால் இந்த உலகத்திற்கு அப்துல்லாஹ் ஆஸமை பற்றி ஒருவேளை தெரியாமல் போயிருந்திருக்கக்கூடும். ஒரு பல்கலைக்கழக ஆசிரியரின் மனைவி என்றே சமீரா அறியபட்டிருப்பார்.

ஆனால் வரலாறு அவருக்காக காத்துக் கொண்டிருந்தது. உலகளாவிய ஜிஹாத் என்று கூறப்பட்டால் ஞாபகத்திற்கு வரும் மனிதராக



அப்துல்லாஹ் ஆஸம் உருவானதற்கு ஜியோனிஸ்டுகளே காரணம். அவர்களே அதற்கான பிறப்பை கொடுத்தனர்.

முஜாஹிதீனாக சமீரா அவர்கள் செய்த பங்களிப்பை பற்றி தாமஸ் ஹெக்காமர் தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யுவான் ரிட்லி அவர்கள் சமீராவை லண்டனில் வைத்து சந்தித்தபொழுது,

ஈராக் போரில் கொல்லப்பட்ட அப்பாவிகள் பற்றியும் போரினால் அகதிகள் உருவாகுவதை பற்றியும் மத்திய கிழக்கில் நிலவிய ஸ்திரத்தன்மையற்ற நிலையை பற்றியும் மிகுந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார். ஒற்றுமை, முஸ்லிம்கள் அனைவரும் ஒரே உம்மத் என்ற கோட்பாட்டில் நம்பிக்கை இவற்றினால் மட்டுமே மத்திய கிழக்கை வலிமைபடுத்த முடியும் என்று உணர்ந்திருந்தார் அவர்.

## ஆஸமின் ஜிஹாத்

மத்திய கிழக்கிலும் ஆசியாவிலும் நடைபெறும் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்படுபவர்களை முஸ்லிம்கள் பாதுகாத்திட வேண்டும். முஸ்லிம்களின் நிலங்களை மேற்கத்திய அந்நிய மேலாதிக்கத்திலிருந்து விடுவித்திட வேண்டும் என்று Join the Caravan என்ற தன்னுடைய புத்தகத்தில் அறைகூவல் விடுத்தார் ஆஸம். எனினும், 11 செப்டம்பர் 2001 தாக்குதல், லண்டன் குண்டுவெடிப்பு போன்ற செயல்களை தன்னுடைய கணவர் ஆதரித்து இருக்கமாட்டார் என்று உறுதிபட கூறியுள்ளார் சமீரா.

இதைப் போன்ற செயல்களை தன்னுடைய கணவர் செய்த ஜிஹாதுடன் ஒப்பிட முடியாது.

சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக அரபுக்களை அணி திரட்டியது, அவர்களுக்கு உத்வேகம் அளித்தது உண்மை என்றாலும் அல்கொய்தாவின் உருவாக்கம், 9/11 தாக்குதல் இவற்றிற்கு ஆஸம் தான் காரணம் என்று கை காட்டிவிட முடியாது. எந்த நம்பிக்கையை சார்ந்தவராக இருந்தாலும் அப்பாவிகள் உயிரிழப்பது தனக்கும் தன்னுடைய கணவருக்கும் மிகுந்த கவலையை ஏற்படுத்தியது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாக யுவான் ரிட்லியிடம் கூறியுள்ளார்.

ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் தன்னுடைய கணவரை தீவிரவாதி போன்று சித்தரிப்பதை கண்டு மனம் நொந்துள்ளார். ஈராக், சிரியா, சூடான் இன்னும் பிற முஸ்லிம் நாடுகளில் உள்ள தீவிரவாத போக்கு கொண்ட இயக்கங்கள் தங்களின் வலைதள பக்கத்தில் அஸ்ஸாமின் பெயரை பயன்படுத்துவது, சண்டை பிரிவிற்கு அவரின் பெயரை பயன்படுத்துவது குறித்து அவர் அதிர்ச்சி அடைந்துள்ளார். இவற்றை ஜிஹாதின் எல்லைகளை தெளிவாக தெரிந்த மனிதருக்கு செய்யும் துரோகமாக சமீரா பார்த்துள்ளார்.

தன்னுடைய கடைசி காலத்திலும் இதனால் எரிச்சல் அடைந்துள்ளார். தன்னுடைய கடைசி பேட்டிகளுள் ஒன்றில் சமீரா கூறினார் ‘அமைதியாகவாழும்குடிமக்கள், ரஷ்யர்கள்மீது தாக்குதல் நடத்த ஆஸம் ஒருபோதும் அனுமதித்ததில்லை. அவர் எப்பொழுதுமே கூறுவார் நம்முடைய நிலத்தை ஆக்கிரமித்த எதிரிகளுக்கு எதிராகவே நாம் சண்டையிடுகிறோம். தீவிரவாதம் என்கிற வார்த்தை எங்கிருந்து வந்தது என்பது கூட நமக்கு தெரியாது’.

பெண்கள் ஜிஹாதில் பங்கு கொள்வது குறித்து சமீராவும் அஸ்ஸாமும் ஒரே கருத்தை கொண்டிருந்தனர். குறிப்பாக,

ஜிஹாத் என்பது ஒவ்வொரு தனிநபர் மீதும் கடமை. ஆப்கானிஸ்தானில் அந்த காலகட்டத்தோடு ஜிஹாத் கடமை முடிந்து விட்டது என்று எண்ணிடலாகாது. பலஸ் தீனிலும் அது கடமை என்றே அவர்கள் கருதினர்.

இஸ்லாமின் வழி பெண்களை வலிமைபடுத்துவதில் தன்னுடைய முழு ஆதரவை வழங்கினார் சமீரா. அவருடைய உரைகள் பெஷாவரில் மிகவும் பிரபலமானவை. அங்கிருந்த பெண் முஜாஹிதீன்களுக்கு ரோல் மாடலாக திகழ்ந்தவர் அவர்.

ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்தே பெண் உறுப்பினர்களின் சேர்க்கையும், அவர்களின் துடிப்பான பங்களிப்பும் கொண்ட இயக்கமான முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினோடு அவருக்கும் அவருடைய கணவருக்கும் இருந்த தொடர்பு சமீராவின் செயல்பாடுகளிலும் பிரதி பலித்தது. (ஆஸம் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தில் *1953*–ல் இணைந்தார்)

ஆப்கன் மற்றும் அரபு பெண்களுக்காக மருத்துவமனைகள், அரபி பாடசாலைகள், சமூக கூடங்கள் இவற்றைநிறுவுவதில் தன்னுடைய பங்களிப்பை செலுத்தியவர். தலைமை தாங்கி நடத்தியவர்.

யுத்தகளத்தில் முன் அணியில் நின்று போராடும் போராளிகள் பத்திரமாக வீடு திரும்பவேண்டும் என்று பெரும்பாலான துணைவிமார்கள் விரும்புவதை போன்றே சமீராவும் விரும்பினார். அப்துல்லாஹ் ஆஸம் யுத்த பகுதிக்கு சென்றுவிட்டால், அவர் பத்திர மாக வீடு திரும்ப வேண்டும் என்று இறைவனி டம் பிரார்த்தித்து கொண்டு இருப்பாராம்.

எதற்காக இவ்வாறு பிரார்த்தனை செய்கி றாய்? ஷஹீதாகி ( வீர மரணம்) அதன் மூலம் சுவர்க்கத்திற்கு நான் செல்வதை ஏன் நீ மறுக் கிறாய் என்று செல்லமாக கடிந்து கொள்வாராம் ஆஸம்.

## சமீராவின் ஆதரவு

ஆப்கானிஸ்தான் போரை வழி நடத்தி செல்வது ஆபத்தான வாழ்க்கையை வாழ்வதற்கு சமம். ஒரு சமயம் போர் உச்ச கட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது, தன்னுடைய விருப்பத்தை எழுத முனைந்தார் ஆஸம். அதில் சமீராவின் பெயரை பல முறை குறிப்பிட்டுள்ளார்.

ஆஸம் இவ்வாறு எழுதினார், 'நீ என்னு டன் பொறுமையுடன் இருந்தாய், ஒவ்வொரு சோதனையிலும் தடைகளிலும் பொறுமையைக் கொண்டும் தைரியத்தை கொண்டும் எனக்கு நீ ஆதரவளித்தாய். இந்த ஜிஹாதை நான் தொடர்ந்து செய்திட தேவையான ஆதரவை நான் உன்னிடமிருந்தே பெற்றேன். உன்னுடைய பொறுமை மட்டும் இல்லாதிருப்பின், என்னால் தனியாக இந்த பாரத்தை தாங்கி இருக்க முடியாது.'

அஸ்ஸாமிடம் அது சரியில்லை இது சரியில்லை என்று சமீரா நடந்து கொள்ளாமல் இருந்ததை பற்றியும் உலக பொருள்களின் மீது மோகம் கொள்ளாமல் இருந்தது பற்றியும் ஊதாரித்தனமான செலவுகளை தவிர்த்ததை பற்றியும் ஆஸம் சிலாகித்து கூறியுள்ளார்.

'இந்த உலகத்தில் நம்மை இணைத்தது போன்று சுவர்க்கத்திலும் நம்மை அல்லாஹ் இணைக்க வேண்டும்' என்று அவனிடம் பிரார்த்திப்பதாகவும் எழுதியுள்ளார்.

ஆஸம் இறந்த பின்பும் அவர் நினை வாகவே சமீரா வாழ்ந்தார். மறுமணம் செய்து கொள்ளவில்லை.

பலதாரமணம் குறித்து பிரச்சனை உங்களுக் கிடையே ஏற்பட்டதுண்டா என்று சமீராவிடம் கேட்டுள்ளார் யுவான் ரிட்லி. அதற்கு சிரித்து கொண்டே, குடும்பம் அவருக்கு எல்லாவற்றை யும் விட முக்கியமானதாக இருந்தது. பலர் தங்களுடைய மகளை மணமுடிக்க அவரிடம் கேட்டனர். அவர்கள் எல்லோரிடமும், நான் சமீராவுக்கே போதுமான நேரம் ஒதுக்குவதில்லை என்றே ஆஸம் பதில் அளித்ததாக கூறியுள்ளார்.

என்னிடமே அவர் கூறினார், உனக்கே போதுமான நேரம் ஒதுக்காத போது, இன்னொரு திருமணம் செய்தால் இறுதி தீர்ப்பு நாளன்று என்னால் எப்படி அதை நியாய படுத்த முடியும்?. எங்களுக்குள் பலதாரமணம் ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை.

முஸ்லிம் உலகத்தை ஒரே உம்மத்தாக இணைக்க அப்துல்லாஹ் ஆஸம் எடுத்த முயற்சியில் சமீராவின் பங்கு மறுக்க முடியாதது. அதனையும் அவரை பற்றியும் இந்த உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அகதிகளின் நல்வாழ்வுக்கு உதவி செய்ததன் மூலம் பல பேரின் வாழ்க்கையை அவர் மாற்றி யுள் ளார். அவர்கள் சமீராவை என்றுமே நினைவில் வைத்திருப்பார்கள். அவ்வாறே நாமும் அவரை நினைவில் வைத்திருப்போம்.

இறைவனிடமிருந்தே வந்தோம்.
அவனிடமே மீழுவோம்.

ஆதாரம் : wtxnews.com
அபூஹாசின்

# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்-7



தொடர்

## உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் சொன்னதென்ன..?

அன்பார்ந்த வாசகர்களே நமது நீதித்துறை அதன் விழுமியங்களை இழந்து அநீதிகளின் உறைவிடமாக ஆனபோது, அதனை தட்டிக்கேட்டார், பிரசாந்த் பூஷன்.

உச்ச நீதிமன்றம் நாட்டை பாசிசத்தின் பிணக்கமாக ஆக்கிடு முன் அதனை தடுத்து நிறுத்திட வேண்டும் என நினைத்தார். அத்தனையும் இந்த நாட்டின் மீது கொண்ட பற்றால், பாசத்தால் இந்த நாட்டைக் காத்திட தலையெடுத்த தலைமகன்களில் ஒருவர் அவர்.

இன்றைய இம்சை அரசர்களின் ஆட்சி நிச்சயமாக ஒருநாளில் வீழும். அன்று இந்தியாவைக் காத்தவர்களின் பட்டியலில் நிச்சயமாக ஓர் இடத்தைப் பிடிப்பார் பிரசாந்த் பூஷன் அவர்கள் என்பது திண்ணம்.

நமது உச்ச நீதிமன்றத்தின் நீதி நழுவிய நெறிமுறையை இரண்டு டிவிட்டர் பதிவுகளில் சுட்டிக் காட்டினார் வீரமகன் பிரசாந்த் பூஷன்.

ஒன்று, 27-06-2020இல் பதிவிடப்பட்டது.

பிரிதொன்று 29-06-2020 அன்று பதிவிடப்பட்டது.


இவை இரண்டையுமே சுற்றிவளைத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்காக ஆக்கியது நமது உச்ச நீதிமன்றம். அந்த வகையில் அவர் நீதிமன்றத்தை அவமதித்துவிட்டதாக அவருக்கு உச்ச நீதி மன்றம் 22-07-2020இல் ஓர் தாக்கீதை அனுப்பியது.

இந்த தாக்கீதுக்கு அவர் 02-08-2020 அன்று ஒரு பதிலை - உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அந்தப் பதில், நம் நாட்டில் பாசிஸ்ட்டுகள் என்னென்ன அநீதிகளைச் செய்தார்கள், அதற்கு உச்ச நீதிமன்றம் எப்படியெல்லாம் பக்கதாளம் போட்டது என்பதையெல்லாம் விரித்துரைக்கின்றது.

அத்தோடு நில்லாமல் நம் நாட்டில் நடந்த பயங்கரமான ஊழல்கள், அநீதிகள் ஆகியவற்றையும் பட்டியல் போடுகின்றது. இதனை இந்தியாவின் சமகால வரலாறு என்பதே சரி!

அதன் தமிழ் வடிவத்தை இங்கே சமர்ப்பிக்கின்றோம்...



ஷாந்தி பூஷன்

அதற்கு முன் இந்த பிரசாந்த் பூஷனின் பின்னணியை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்...

## யார் இந்த பிரசாந்த் பூஷன்

பிரசாந்த் பூஷன் அவர்கள், உலகப் பிரசித்திப் பெற்ற வழக்கறிஞர் ஷாந்தி பூஷன் அவர்களின் மகன்.

ஷாந்தி பூஷன் அவர்களைப் பற்றி நிரம்ப எழுதலாம். விரிவஞ்சி மிகச் சுருக்கமாக சில வீர செயல்களை மட்டும் இங்கே பதிவு செய்கின்றோம்.

நம் நாட்டில் இருந்த பிரதமர்களில் ஜவஹர்லால் நேருவைப் போல் அவரது மகள் இந்திரா காந்தியும், நாட்டின் கொள்கைகளை வடிவமைப்பதில் பல சாகசங்களைச் செய்தவர்.

ஆனால், அவரும் ஒரு கட்டத்தில் சர்வாதி காரியாகிட தலைப்பட்டார். அது அவருக்கு ஏற்பட்ட தோல்வியின்போதுதான்.

1971–இல் அவர் நாடாளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டது 'செல்லாது' என 1975 ஜூன் 26 ஆம் தேதி அலஹாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

எல்லா அதிகாரத்தையும் ஒருங்கே பெற்ற, இந்திரா காந்தி நாடாளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டது செல்லாது என வழக்குத் தொடர்ந்தவர் ராஜ் நாராயணன் என்பவர். அந்த வழக்கில் வாதாடியவர் ஷாந்தி பூஷன்தான். இதில் இந்திரா காந்தியின் கெடுபிடிகளுக்குச் சற்றும் அஞ்சாமல், வழக்கில் நிலையாய் நின்று வாதாடி வென்றவர் இந்த ஷாந்தி பூஷன்.

தீர்ப்பு இந்திரா காந்தியை நாடாளுமன்ற த்திற்கு தேர்ந்தெடுத்தது செல்லாது என்று மட்டும் வரவில்லை. அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அவர் அரசியலில் ஈடுபடக் கூடாது என்றும் வந்தது.

இதில் இந்திராகாந்திக்கு ஒரு பெரும் நெருக் கடிநிலை ஏற்பட்டது. அதை தேசிய நெருக்கடி யாக அறிவித்தார். ஷாந்தி பூஷன் போன்றவர் களெல்லாம்சிறைபிடிக்கப்பட்டார்கள். எதற்கும் அஞ்சாமல் நிலையாய் நின்றார் ஷாந்தி பூஷன். பின்னர் 1977 முதல் 1979 வரை இந்தியாவின் சட்ட அமைச்சராக இருந்தார்.

## உச்ச நீதிமன்ற ஊழல்

2009/2010 ஆண்டுகளில் உச்ச நீதிமன்றத்தின் ஊழல்கள், ஒரு பேட்டியில் விவாதமானபோது, (The Week 2010) உச்ச நீதிமன்ற 16 நீதிபதிகளில் 8 பேர் நிச்சயமாக ஊழல் பேர்வழிகள், 4 பேர் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர்கள் 4 பேர் பற்றி தெரியாது என அழுத்தந்திருத்தமாக கூறியவர். ஷாந்தி பூஷன், அப்போது இவருடைய மகன் பிரசாந்த் பூஷனும் உடனிருந்தார்.

உச்சநீதிமன்றம்இந்தக்கூற்றுக்கு நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறியபோது, துணிச்சலோடு அதை எதிர்கொண்டு தன்னுடைய கூற்றை ஓர் அறிக்கையாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவர். தான் சொன்னதை நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

ஆனால், உச்சநீதிமன்ற விவகாரத்தை விவாத மாக்கிட முனைந்திடவில்லை. மாறாக, ஷாந்தி பூஷன் அவர்களிடம் தனது அறிக்கையை பின் வாங்கிட வேண்டும் அல்லது சிறை செல்ல வேண்டும் என அச்சுறுத்தியது. அதற்கு ஷாந்தி பூஷன் அவர்கள் "இந்த நாட்டின் நீதி நிர்வாகம் நீதி–இன் பக்கம் திரும்பிட நான் சிறை செல்லவும் தயாராக இருக்கின்றேன்" என்றார். அத்தோடு உச்சநீதிமன்றம் அந்த வழக்கை அப்படியே விட் டது. இதனை அப்போதே வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டோம்.



## நாடாளுமன்றத் தாக்குதல் 13/12

அதேபோல் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் நமது இந்திய பெருநாட்டின் ஆட்சியைப் பிடிக்க நாடெங்கும் தொடர்ந்து குண்டுவெடிப்புகளை நடத்தி வந்தார்கள். இந்தக் குண்டு வெடிப்பு களுக்கான பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள்.

முஸ்லிம்களைப் பேய்களாகவும், பிசாசு களாகவும் காட்டினார்கள். நாட்டு மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித் துக் காட்டினார்கள். ஆனால் நாட்டு மக்கள் முஸ்லிம்கள் மேல் போட்டப்பழியை அத்துணை எளிதாக நம்பிடவில்லை. அதனால் ஒரு பெரிய ஏற்பாட்டைச் செய்தார்கள். அதுதான் நாடாளு மன்றத் தாக்குதல் 13/12.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் நாள் இந்த நாடாளுமன்றத் தாக்குதல் நடத்தப் பெற்றது. இந்த தாக்குதலை கஷ்மீரில் உள்ள அரசு காவல்படையான "STF" Special Task Force - சிறப்பு அதிரடி காவல்துறையும் டெல்லியில் நமது சாத், சாத் அத்வானி அவர்களுக்கு வேண்டிய ராஜ்பீர் சிங் என்ற (Delhi Speical Police)–டெல்லி சிறப்புக் காவல் படையைச் சார்ந்தவரும் சேர்ந்து

ஏற்பாடு செய்தார்கள்.

வழக்கம்போல் பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள்.

டெல்லி பல்கலைக்கழகத்தில் அரபி மொழி பேராசிரியராக பணியாற்றி வந்த 'இஃப்திகார் ஜீலானி என்ற கஷ்மீர் முஸ்லிம்தான், நாடாளு மன்ற தாக்குதலுக்கு மூளை எனக் கூறினார்கள். ஊடகங்கள் அதனை பெரிதாக விளம்பரப்படுத் தின. இன்னும் பல அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து, சித்திரவதைச் செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்கினார்கள். கீழ் நீதிமன்றத்தில் அதாவது சிறப்பு நீதிமன்றத்தில் மரண தண்டனையையும் பெற்றுத் தந்தார்கள்.

வழக்கு உயர் நீதிமன்றம் வந்தது. அங்கே ஷாந்திபூஷன் அவர்கள் சல்லிக்காசுகூட வாங்கி டாமல் வாதிட்டார் என்பது ஒருபெரும் செய்தி.

அவர்தான் நாடாளுமன்றத் தாக்குதலின் முக்கிய மூளை எனக் குற்றம் ஜோடிக்கப்பட்ட 'இஃப்திகார் ஜீலானி' அவர்களுக்காக வாதிட் டார். அத்தோடு சவ்கத் ஹூசைன் என்பவருக் காகவும் வாதிட்டார். அங்கே – உயர்நீதிமன்றத் தில் பொட்டில் அறைந்தாற்போல் இப்படிக் கூறினார்.

"வழக்கை விசாரித்த அதிகாரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 194, 195 ஆகியவற் றின் கீழ் ஆயுள் தண்டனையை பெறும் குற்றங் களைச் செய்திருக்கின்றார்கள். இத்துணை, பார தூரமான குற்றங்களை, வழக்கை விசாரித்த அதிகாரிகள் செய்திருக்கும்போது, அவர்களைத் தண்டிக்க வேண்டும். அவர்களைத் தண்டிப்பதன் மூலமே, சாட்சியங்களைப் பொய்யாகத் தயா ரிப்பதையும் போலி ஆவணங்களைத் தயாரித்து, அவற்றை உண்மையென நீதிமன்றத்தில் வாக்குறுதி தந்து சமர்ப்பிப்பதையும் தடுத்திட இயலும்."

ஆக, தண்டிக்கப்பட வேண்டியவர்கள், அந்த அப்பாவி முஸ்லிம்களல்ல மாறாக வழக்கை விசாரித்தவர்கள் தான் என வாதாடினார்.

அத்தோடு கீழ் நீதிமன்றம் சாட்சியங்களை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டு அப்பாவி முஸ்லிம்களைத் தண்டித்திருக்கின்றது. அந்த நீதிபதியை தண்டிக்காத வரை, இந்திய குற்றவியல் நீதித்துறையின் மேல் மக்களுக்கு நம்பிக்கை வராது என வாதாடினார்.

இதில் மூத்த வழக்கறிஞர் இராம்ஜெத் மாலினியும், இந்திரா ஜெய்சிங் அவர்களும் பங்கெடுத்து வாதிட்டார்கள்.

(ஆதாரம் : December-13, Terror Over Democracy ; Compited by PUDR, Page. 47-50)

(மேலும் தகவல்களுக்கு ''நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்'' நூலைப் படிக்கவும் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் "வேர்கள்" வெளியீடு பக்கங்கள் 24–27)

ஷாந்தி பூஷன் அவர்கள், நீதிபதிகள், நீதி மன்றங்கள் இவையெல்லாம் தங்களுடைய செயல்களுக்குப் பதில் சொல்லும் ஓர் ஆணையம் அல்லது ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றொரு முழக்கத்தை முன் வைத்து வருகின் றார்கள். இதற்காக CJA - Committee on Judical Accountability என்றொன்றை அதாவது, "நீதித் துறைதன் செயல்களுக்குப் பதில் சொல்வதற்கான குழுமம்'' என்றொன்றை தொடங்கி நடத்தி வருகின்றார். இதில் அவருடைய மகன் பிரசாந்த் பூஷனும் இணைந்து செயல்படுகின்றார்.


## பிரசாந்த் பூஷன்

இவர் தன் தந்தை ஷாந்தி பூஷன் அவர்களைப் போலவே போர்க்குணம் கொண்டவர்.

'பிரசாந்த் பூஷன்' அவர்கள் தந்தை இந்திரா காந்திக்கு எதிராக வழக்காடி வென்றபோது பிரசாந்த் பூஷன் ஓர் மாணவர் மட்டுமே! அப்போதே அந்த வழக்கைப் பற்றி ஒரு நூலை எழுதினார். அதன் பெயர் "The Case that Shook india" "இந்தியாவை உலுக்கிய வழக்கு."

2009இல் இவர் நடத்திய வழக்கொன்றில் நீதித்துறையும், நீதிபதிகளும் (RTI) என்ற தகவ லறியும் சட்டத்தின் கீழ் வந்திட வேண்டும் என வாதிட்டார். இவர் தொடர்ந்து எடுத்த முயற்சி களின் முடிவாக நீதிபதிகள் தங்கள் சொத்துக்கள் பற்றிய விபரங்களை நீதித்துறையின் இணைய தளத்தில் வெளியிட வேண்டும் என்ற நடைமுறை வழக்கில் வந்தது.

இனி அவர், தண்டிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்புவழக்கில்அவர்தந்தபதில்–அதாவது நாட்டின் சமகால வரலாற்றை–ஐ பார்ப்போம் இன்ஷாஅல்லாஹ். :–



## பிரசாந்த் பூஷன் உச்ச நீதிமன்றத்திற்கு தந்த பதில்

"பிரசாந்த் பூஷன் ஆகிய நான், உச்ச நீதிமன்ற நீதிபதி பாப்டே'' ஒரு பைக்கில் பயணம் செய்வதைக் குத்திக்காட்டி ஒரு பதிவை டிவிட்டரில் 29–6–2020 இல் போட்டிருந்தேன். இந்தப் பதிவு உச்ச நீதிமன்றம் ஒருவார காலமாக இயங்கிடவில்லை என்ற ஆதங்கத்தில் போடப் பட்டது. உச்ச நீதிமன்றம் இயங்கவில்லை. ஆனால் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உல்லாசமாக பைக்கில் பவனிவந்தது என்னை அதிகமாக வருத்தியது.

இதனால் அடிப்படை உரிமைகள் பறிக்கப் பட்ட மக்கள் நீண்ட நாட்களாக சிறையில் கிடக்கும் மக்கள், இவர்களில் பலர் ஏழைகள் இவர்களின் வழக்கு விசாரணைக்கு வரவில்லை. அதேபோல் பலருடைய உயிரையும் வாழ்க்கையையும் முடிவு செய்யும் வழக்குகள், இவையெல்லாம் விசாரணைக்கு வராமலேயே நிலுவையில் கிடக்கின்றன. அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளும் அப்படியே நிற்கின்றன. இப்படி அவருடைய கடமைகளை அப்படியே போட்டுவிட்டு, அவர் பலருடைய குழுமத்தில் ஒரு முகக் கவசம் கூட அணியாமல் நின்று கொண்டிருந்தது பொறுப்பற்றச் செயல். அந்த நேரத்தில் உச்ச நீதிமன்றம் முடங்கிக் கிடந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாக விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வழக்குகளில் நேரலையில் (Online) திருப்தி இல்லாமல் அரைகுறையாகவே நடந்து கொண்டிருந்தன.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற ராஜ்பவனில் BJP பாரதீய ஜனதா கட்சிக்காரர் ஒருவருக்குச் சொந்தமான பைக்–இல் அமர்ந்திருந்தார் என்பது, சமூக வலைத்தளங்களில் தகுந்த ஆதாரங்களோடு உலா வந்து கொண்டிருந்தது. தொலைக்காட்சி ஊடகங்களும் இதனை ஆதாரத்தோடு வெளியிட்டன.

உச்ச நீதிமன்ற நீதிபதியின் இந்த செயல்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்காமல் என் ஆதங்கத்தை பதிவு செய்தது நீதிமன்ற அவமதிப்பில் எப்படி வரும்? இதனை நீதிமன்ற அவமதிப்பு என எடுத்துக்கொண்டால், அது பேச்சுரிமையின், கருத்துச் சுதந்திரத்தின், கழுத்தை நெறிப்பதாகும். அது நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 19(1)(a)இன் மீது தேவையற்ற ஓர் கட்டுப்பாட்டை விதித்ததாகவும் ஆகும்.

என்னுடைய இரண்டாவது டிவிட்–ஐ 27–6–2020 பொறுத்தவரை, அதில் மூன்று முக்கிய கூறுகள். அவை ஒவ்வொன்றும் இந்த நாட்டின் நிலைமையைப் பற்றிய என்னுடைய கருத்துக்கள். குறிப்பாக கடந்த ஆறு ஆண்டுகளாக என்னென்ன நீதித்துறையில் நடந்தன என்பதைப் பற்றியும் அவற்றில் உச்ச நீதிமன்றத்தின் பங்கென்ன? அதிலும் கடந்த நான்கு தலைமை நீதிபதிகளின் நிலையும் நிலைபாடும் என்னென்ன? என்பன பற்றியவை.

என்னுடைய 'டிவிட்'இன் முதல் பகுதி என்னவெனில், நம் நாட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் மக்களாட்சி பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டது.

எனது டியூட்–இன் இரண்டாம் பகுதி என்னவெனில் நமது உச்ச நீதிமன்றம், இந்த மக்களாட்சி அழிக்கப்படுவதற்கு மிகப்பெரிய பங்களிப்பை நல்கியது. உண்மை என்னவெனில் மக்களாட்சியை மண்மூடிப்போக செய்ததில் ஒரு பெரும் பங்கு உச்ச நீதிமன்றத்தையே சாரும்.

என்னுடைய பதிவின் மூன்றாம் பகுதி என்னவெனில், கடந்த காலத்தில் நான்கு தலைமை நீதிபதிகள், நம் மக்களாட்சியை மாய்த்தலில் ஆற்றிய பங்கு பற்றியது.

இந்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படாமலிருக்கலாம், கசப்பாகவுமிருக்கலாம். ஆனால், நிச்சயமாக அவை நீதிமன்ற அவமதிப்பின் கீழ்வராது, என்பதை நம் நாட்டில் வழங்கப்பெற்ற

பல தீர்ப்புகள் உறுதி செய்கின்றன.

அதேபோல, பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் வழங்கப்பெற்ற தீர்ப்புகளும் உறுதி செய்கின்றன.

நீதித்துறை உள்ளிட்ட எல்லா அமைப்புகளும் நீதியோடும் நேர்மையோடும் இயங்கிட வேண்டும் என்பது, ஜனநாயகத்தின் உயிர் நாடி. இவையெல்லாம் குடிமக்களின் நலன் காக்க, உரிமைகளைக் காக்க இயங்கிட வேண்டும். அவர்கள் (குடிமக்கள்) இந்த அமைப்புகளின் செயல்பாடுகள் பற்றி தாராளமாகக் கருத்துகளைப் பறிமாறாலாம். அவற்றை சீர்செய்யும் அளவில் மக்கள் கருத்துக்களை உருவாக்கலாம். அதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு.

நான் இங்கே ஒன்றை சமர்ப்பிக்க விரும்புகின்றேன். அது என்னுடைய விமர்சனங்கள் வெளிப்படையானவை. ஆனாலும், மிகவும் கவனமாகக் கணித்துக் கூறப்பட்டவை. அவை மிகவும் பொறுப்புடனும் கவலையுடனும் கூறப்பட்டவை.

நான் ''டிவிட்'' பண்ணியவை கடந்த காலங்களில் உச்ச நீதிமன்றம் எப்படி இயங்கியது என்பதன் உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுபவை. விருப்பு வெறுப்புகளற்று எனக்கு யதார்த்தமாகப் பட்டவை.

குறிப்பாக அவை கடந்த கால நான்கு தலைமை நீதிபதிகளைப் பற்றியவை. அவர்கள், அதிகாரத்தை நீதிநெறிகளின்படி கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி வைத்திட வேண்டிய தங்களது தார்மீகக் கடமையிலிருந்து தவறினார்கள். உச்ச நீதிமன்றத்தின் செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மைக் கொண்டனவாகவும், பாமர குடிமக்களுக்கும் மற்றவர்களுக்கும் பதில் சொல்லிடும் அளவில் பொறுப்போடும் கடமை உணர்வோடும் இருந்திட வேண்டும். நீதிபதிகளும் அவ்வாறே நடந்தி வேண்டும். ஆனால், அவர்கள் ஜனநாயகத்தை – மக்களாட்சி தத்துவத்தை வீழ்த்திடும் வகையிலேயே வாடிக்கையாகச் செயல்பட்டார்கள்.

நான் இன்னும் சமர்ப்பிக்கின்றேன். தலைமை நீதிபதி நீதி மன்றம் அல்ல. ஆனால் தலைமை நீதிபதி எப்படி நடந்துகொள்கின்றார், அவர் எப்படி தனது ஓய்வுநேரத்தைப் பயன்படுத்துகின்றார் என்பவையெல்லாம் நீதிபரிபாலனத்தின்மேல், தாக்கங்களை ஏற்படுத்தும்.

கடந்த நான்கு தலைமை நீதிபதிகளும், தங்களை 'ரோஸ்டரின் மாஸ்டர்கள்' (நீதிபரிபாலனத்தின் தலைவர்கள்) என்ற பெயரில், அதிகார வர்க்கத்தின் ஆட்டங்கள் அனைத்தையும் ஆமோதித்துக் கொண்டிருந்தார்கள். இந்த அதிகார வர்க்கத்தின் ஆட்டங்கள், பரவிக் கொண்டே இருந்தன. எல்லாத் துறைகளிலும் தலைவிரித்தாடின. இவற்றைத் தலைமை நீதிபதிகள் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் கும்பலாட்சியை செயல்படுத்தினார்கள். எதிர்க் கருத்துக்களைச் சொன்னவர்களை, அடக்கினார்கள். அவர்கள் மூச்சுவிட முடியாத அளவுக்கு அடக்கினார்கள். நாடெங்கும் எதிர்க் கருத்தைச் சொன்ன அரசியல் வாதிகளையும், சமூக ஆர்வலர்களையும் சிறைபிடித்தார்கள். சித்திரவதைச் செய்தார்கள். அநீதிகளைக் கண்டு கொள்ளாமல் இருந்தவர்களின் கவனத்தை அந்த அநீதிகளின் பக்கம் திருப்புவது, நீதித்துறையை அவமதிப்பதாகவோ, நீதித்துறையை மோசமான விவாதத்திற்குள்ளாக்குவதோ ஆகாது. அதேபோல் இது நீதித்துறையின் கீர்த்தியை குறைத்துக் கூறுவதாகவும் ஆகாது.

இங்கே உச்ச நீதிமன்றம், ஓர் நிறுவனம் அது 31 நீதிபதிகளைக் கொண்டது. அதற்கென நீண்டதொரு பாரம்பரியமிருக்கின்றது. அதேபோல் பாரம்பரியமிக்க நடைமுறைகளையும், நெறிமுறைகளையும் கொண்டது. இந்த உச்ச நீதிமன்றத்தை ஒரு நீதிபதியோடு ஒப்பிட்டுவிட முடியாது. அதேபோல் அடுத்தடுத்துவரும் நான்கு நீதிபதிகளோடும் ஒப்பிட்டுவிட முடியாது. அக்கறையுடன் ஒரு நீதிபதியை, அல்லது நான்கு நீதிபதிகளை குறை கூறுவது, நீதிமன்றத்தைக் மோசமான விவாதத்திற்குள்ளாக்குவதாகாது. அதேபோல் இது நீதிமன்றத்தை, உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் குறைத்துக் காட்டுவதுமாகாது. தலைமை நீதிபதிதான் உச்ச நீதிமன்றம், உச்ச நீதிமன்றம்தான் தலைமை நீதிபதி என எடுத்துக்கொள்வதுதான் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைத்துக் காட்டுவதாகும். இன்ஷா அல்லாஹ்.

- MGM

–பிரசாந்த் பூஷனின் எதிர்வாதம் தொடரும்.

ஹள்ரத் மௌலானா
அபுல்ஹஸன் அலீ நத்வி (ரஹ்) அவர்களின்

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

நூலுக்கு

## செய்யித் குதுப் ஷஹீத் அவர்கள்

வழங்கிய அணிந்துரை




இன்றைய நாள்களின், அதிரடியான தேவை முஸ்லிம்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது. ஒரு முஸ்லிம் தன்னிடம் தன்னம் பிக்கையை வளர்த்திட வேண்டும். அத்தோடு தனது முந்தையப் புகழ்மிக்கப் பாரம்பரியத்தின் மீதும் பிடிப்பை வளர்த்திட வேண்டும். இவற்றின் வழி அவன், எதிர்காலத்தை, ஏக்கத்தோடு பார்த் திடாமல் நம்பிக்கையோடு, எதிர்கொள்ள வேண் டும். எதிர்வரும் சவால்களை திடமான நெஞ்சுரத் தோடும் தெளிவான சிந்தனையோடும் எதிர் கொள்ள வேண்டும்.

ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்பிக்கையின் (ஈமானின்) ஆழமான அடிப்படைகள் என் னென்ன என்பதை இதயத்தில் பதிய வைத்திட வேண்டும். தான் கொண்ட ஈமானின் தனித் தன்மைகளை அவன் பல நேரங்களில் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதுவே யதார்த்தம். அதை அவனுக்குப் புரிய வைத்திட வேண்டும். அத்தோடு அவனுடைய நாடி நரம்புகளிளெல் லாம் அதன் உணர்வும் உயிரும் ஓடிடச் செய்திட வேண்டும்.

பல இடங்களில் ஒரு முஸ்லிம் இஸ்லாத் தோடு கொண்டுள்ள உறவு, அவன் முஸ்லிம் தாய், தந்தைக்குப் பிறந்தான் என்பதோடும், இஸ் லாமியப் பரம்பரையோடு சம்மந்தப்பட்டவன் என்பதோடும் நின்று விடுகின்றது. அவன் தான் சார்ந்த மார்க்கத்தின் எல்லாப் பகுதிகளையும் புரிந்திட முயற்சிகளை மேற்கொண்டதில்லை.

அன்றைய நாள்களில் வெளிவந்த பல இஸ்லாமிய இலக்கியங்களையும், இன்றைய நாள்களில் வெளிவந்த இஸ்லாமிய இலக்கியங் களையும், நான் நிரம்பவே படித்திருக்கின்றேன். அவற்றுள் செய்யீத் அபுல் ஹஸன் அலீ நத்வீ அவர்களால் எழுதப்பட்ட இந்த நூல், இஸ்லாத் தைப் புரிந்துகொள்வதில், இன்னொரு பார்வை யைத் தருகின்றது. முற்றிலும் வித்தியாசமான பார்வை அதனால் வரலாற்றில் வரையிட்டுக் காட்டிட வேண்டிய நூல்.

இஸ்லாம் கற்றுத்தரும் பாடங்கள், தலை மைத் துவத்திற்கான பாடங்கள். உலகத்தில் நன்மையையும், நல்லொழுக்கத்தையும் போதிக் கும் புரட்சிகரமான பயனுள்ள புதிய பாடங்கள்.

அப்படி இஸ்லாம் கற்றுத்தரும் பாடங்களுள் ஒன்று எப்படி நாம் நமக்குள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது என்பதாகும். இதனை இஸ்லாத்தைப் பின்பற்றும் அனைவருக்கும் ஒருசேர கற்பிக்கின்றது இந்த நூல்.

தன்னம்பிக்கையை கற்பிக்கின்ற அதே வேளையில் அகந்தை, அகம்பாவம் ஆகியவற்றை கெல்லி எறிந்து விடுகிறது. இஸ்லாத்தின் பாடங்கள், நாம் நேரான, சீரான வழியில்தாம் இருக்கின்றோம் என்ற பிடிப்பையம் பிணைப் பையும் நம்முள் ஏற்படுத்துகின்றது.

இஸ்லாத்தின் போதனைகளால் ஊட்டம் பெற்ற ஒருவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் வேடதாரியாக இருக்க மாட்டான்.

அந்த பொன்நிகர் போதனைகள் அவன் உலகில் எதையும் சார்ந்து நிற்காமல், அல்லாஹ்வை மட்டுமே அனைத்திலும் சார்ந்து நின்றிடும் உன்னத நிலையை உருவாக்குகின்றன. அவன் அனைத்திலும் அல்லாஹ்விடமே அடைக்கலம் தேடுகின்றான். காவல் தேடுகின்றான். அவனுள் ஒளிரும் ஈமான் ஒருபோதும், மங்குவதில்லை மாய்வதில்லை, மறைவதில்லை.

இந்த (ஈமான்) இறை நம்பிக்கை மனித இனத்திற்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் பெரும் சுமையை அவன் ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது.

மனித இனத்தின் மொத்த நன்மைக்கும் நல்வாழ்வுக்கும் ஈடேற்றத்திற்கும் அவனே பொறுப்பு. இந்தப் பொறுப்புணர்வை அவன் பெற்றிட வேண்டும், ஏற்றிட வேண்டும்.

அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களிலிருந்து அகண்டு போனவர்களை மீண்டும் அல்லாஹ்வின் வழிக்குக் கொண்டு வந்திடும் பெரும் கடமை அவனுக்கிருக்கின்றது! அல்லாஹ்வின் ஒளியைக் கொண்டு ஏனைய எல்லா மனிதர்களையும், இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திட வேண்டும். இது அவனது கடமை ; கட்டாயப் பணி!

அல்லாஹ் பிரகடனப்படுத்துகின்றன் :

**“மனிதர்களுக்காக, தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் ; ஏனெனில் நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் ; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் திடமாக நம்பிக்கை கொள்கிறீர்கள்...” (3:110) அல்குர்ஆன்**

இன்னும் அல்லாஹ் இப்படி அறிவுறுத்துகின்றான் :

உங்களுக்கு இறைவனின் தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் எப்படியொரு சாட்சியாக (முன்மாதிரியாக) இருந்தார்களோ அதேபோன்று நீங்களும் ஏனைய மக்களுக்கு ஓர் முன் மாதிரியாகவும் சாட்சியாகவுமிருந்திட வேண்டும். இதற்காகவே நீங்கள் நடுவு நிலையான சமுதாயமாகப் படைக்கப்பட்டுள்ளீர்கள். (விரிவான விளக்கத்திற்குப் பார்க்க, திருக்குர்ஆன் வசனம் 2 : 143)

இந்த நூல் இந்தக் கடமை உணர்வை, வாசிப்பவர்களிடம் ஏற்படுத்தி விடுகின்றது. இதை சாதிப்பதில் இந்த நூல் வெற்றிக் கண்டுள்ளது. அதேபோல் முஸ்லிம்களிடம் இருந்திட வேண்டிய வீரியத்தை மீண்டும் கொண்டுவந்து விடுகின்றது. இந்த மகத்தான சாதனையைச் சாதிப்பதில் இந்த நூல் படிப்பவர்களிடம் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்கோ மத உணர்வுகளை கிள்ளிவிடுவதற்கோ முயற்சி செய்யவில்லை. அதேபோல் முரட்டுத்தனமாக இதைச் செய்யுங்கள் என முண்டா தட்டவில்லை. மாறாக ஒரு பெரும் அறிவார்ந்த வாதத்தை நம் முன் வைத்து, நம்மை ஆயத்தப்படுத்துகின்றது. அடுக்கடுக்கான அத்தாட்சிகளை, வரலாற்று சாட்சியங்ளை நம்முன் அள்ளிக் கொட்டுகின்றது.

அத்தனையும் தெளிவான, தரமான இலக்கிய வளத்தோடு சிந்தனையை சீண்டும் நடையில் நம்மிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஒரு பெரும் ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிக்குப் பின் நம்மிடம் வைக்கப்படுகின்றது. இவை நமது மனதையும் சிந்தனையையும் ஒன்றுபோல் கொள்ளை கொள்கின்றன.

இந்த நூல், எதையெல்லாம் தனது என்கின்றதோ அதற்கெல்லாம் ஆணித்தரமான சாட்சியங்களைச் சமர்ப்பிக்கின்றது. நூல் முழுவதும் இந்த சாட்சியங்களையும் அறிவார்ந்த அத்தாட்சிகளையும், அடுக்கிக் கொண்டே போகின்றார் ஆசிரியர்.

ஆசிரியரின், மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்ட தெளிவான அணுகுமுறை, அவர் உண்மையின் பக்கம் கொண்டுள்ள அக்கறைக்குக் கட்டியங் கூறுகின்றது.

வரலாற்று நிகழ்வுகளை அணுகுவதிலும், அவற்றை யதார்த்த உலகின் சூழ்நிலைகளோடு ஒப்பிட்டுக் காட்டுவதிலும் வாய்மையின் பக்கம், மிகவும் கவனம் செலுத்தியுள்ளார் ஆசிரியர். இது நம்மை பிரமிக்க வைக்கின்றது. அதே வாய்மையோடு வரலாற்று ஆவணங்களை வரிசையாக

> “ முஸ்லிம்கள் தவறியது, இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களிலிருந்து அவர்கள் தடம் புரண்டது, இவற்றிற்கான காரணங்களை இந்த நூலின் ஆசிரியர் தெளிவாகவும் விளக்கமாகவும் தெளிவுபடுத்துகின்றார். இஸ்லாத்திடமிருந்து உலகத் தலைமை போனபின் மனித இனம் சந்தித்த கேடுபாடுகளையும் நூலாசிரியர் விரிவாகவே விரித்துரைக்கின்றார்.



செய்யீத் அபுல் ஹஸன் அலீ நத்வீ

அலசி ஆராய்ந்து நம்முன் சமர்ப்பித்து, யதார்த் தங்களை, நமக்குப் பட்டெனப் புரியும், பாடங் களாகப் புகட்டுகின்றார்.

புரிந்துகொண்ட பாடங்களின் அடிப்படை யில் முடிவுகளை எடுப்பது, நமது அறிவுக்கும், மனசாட்சிக்கும், விட்டு விடப்படுகின்றது. நேர்மையையும் வாய்மையையும் நெஞ்சத்திலே நிறுத்துவோர் நிச்சியமாக சீறிய முடிவுகளை எடுப்பார்கள். செயலில் குதிப்பார்கள்.

தலைப்புகள், விவாதிக்கப்படுகின்றன, அவை அரிய வகையில் வரிசைப்படுத்தப்படுகின்றன. தலைப்புகள் நூலிழைப்போல் ஒன்றொடொன்று பிணைக்கப்பட்டு நம்முன் விரித்துரைக்கப்படு கின்றன. எந்த முடிவையும் ஆசிரியர், வாசகர் களிடம், திணிக்கவில்லை.

இஸ்லாம் இந்த உலகிற்கு வருவதற்குமுன் உலகின் நிலை என்ன? சீனாவிலிருந்து இந்தியா வரைக்கும், பாரசீகத்திலிருந்து ரோம் வரைக்கு மிருந்த சிந்தனை போக்குகள் என்னென்ன? இன்றைய சமுதாய அமைப்பின், பாங்கும் போக்குமென்ன? இறைவனால் அருளப்பட்ட மார்க்கம் என்ற பெயரைப் பெற்ற கிருஸ்தவம், யூதமதம் இவை எதை நோக்கிப் போய்க் கொண் டிருந்தன. சிலைகளை வணங்குவதையும், நெருப்பை பூஜிப்பதையும் வழிபாடுகள் எனக் கருதி வாழ்ந்த மக்களின் நிலை என்ன? இந்து மதம், மேக்னியனிசம் போன்றவற்றை பின்பற்றிய மக்களின் நிலை என்ன? இவற்றை கோட்டிட்டுக் காட்டுவதோடு தொடங்கும். இந்த நூல் எல்லாவற்றையும், சுருங்கச்சொல்லி விளங்க வைக்கின்றது. விவரிக்க எடுத்துக்கொண்ட காலக்கட்டத்தை தெளிவாகவே நம் கண்முன் கொண்டுவந்து காட்சிப்படுத்துகின்றது. ஆசிரியர் எனது சிந்தனையே எல்லாம் எனக் காட்டிட எப்போதும் முயன்றதில்லை.

அவர் முஸ்லிமல்லாத வரலாற்றாய்வாளர் களின் எழுத்துக்களை, எடுத்தாளுகின்றார். குறிப்பாக இஸ்லாத்தை குத்தியும், குதறியும் எழுத வேண்டும். அதன்வழி இஸ்லாத்தின் கீர்த்தியை, மக்கள் மனதில் குறைத்துக் காட்டிட வேண்டும் எனத் தங்கள் பேனாக்களை கால மெல்லாம் ஓட்டியவர்களின், எழுத்துக்களையும். விமர்சனங்களையும், எழுத்தாளுகின்றார்.

இஸ்லாத்திற்கு முந்தையக் காலம், அறியா மையிலும் அஞ்ஞானத்திலும் மூழ்கிக் கிடந்தது. மனிதன் ஆன்மீகத்தில் அதல பாதாளத்தில் கிடந் தான். மிருகமாகவே வாழ்ந்தான். மனித சமுதா யத்தில் ஒளிவீசி இருக்க வேண்டிய மாண்புக ளெல்லாம் புதையுண்டு போயின.

## அந்த அறியாமைக் காலம்

ஒருபுறம், அடிமைத்தனமும், குரூரங்களும் மிகைத்து நின்ற ஒரு காலகட்டம். மறுபுறம் ஊழலும், ஊதாரித் தனமும் உல்லாசமும், சல்லா பமும் மிகைத்து நின்ற காலக்கட்டம். இவை

> “நூலைப் படித்து முடித்தபின், ஒரு முஸ்லிம் தனது தவறுகளையும், தோல்விகளையும் உணர்ந்தால் அதற்காக வெட்கப்பட்டால், வேதனைப் பட்டால், குற்ற உணர்வோடு தலை குனிந்தால், அவன் இனியாவது தான் ஆற்றிட வேண்டிய பெரும் பொறுப்பைப் பற்றி உணர்ந்தால், செயல் களத்தில் குதித்தால், சரிதான். அப்போது மட்டுமே அவன் மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றிட இயலும்.

இரண்டிற்குமிடையே மனித இனத்தின் இன்னொரு பகுதியினர். வேதனை, சோதனை, இவற்றின் மிகுதியால் விரக்தியும், ஏக்கமும் நிறைந்த தொரு வாழ்க்கையில் உழன்று கொண்டிருந்தார்கள்.

படைத்தவனையே பகைக்கும் நாத்திகம், எடுத்ததிலெல்லாம் ஏமாற்று, துரோகம், குடும்ப வாழ்வில் கொண்டவனை பழிக்கும், பெண்கள் அவர்களின் பகட்டில் மயங்கிய ஆட்சியாளர்கள் என மனிதம் முதற்கொண்டு அனைத்தையும் இழந்து அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்த காலம். அந்த நேரத்தில் அவர்களுக்கு வழிகாட்டி கரம் பிடித்து அத்தனை அவலங்களிலிருந்தும் கரையேற்றிருக்க வேண்டிய மதங்கள். அவர்களுக்கு எந்த உதவியையும் செய்ய முடியவில்லை.

*என்னே கையறு நிலை!*

காரணம் வானத்திலிருந்து வந்த மார்க்கம், எனச் சொல்லிக் கொண்டிருந்தவை, இடைச் செருகல்களுக்கும், இடைத்தரகர்களின் இடையூறுகளுக்கும் ஆட்பட்டு நொறுங்கிப் போய்க் கிடந்தன. அந்த மதங்கள், குறிப்பாக கிறிஸ்தவம், தன்னுடைய கண்ணியத்தை இழந்து நிற்கின்றது. அது ஆன்மிகத்தை இழந்து வெற்று மதமாகத் தேய்ந்துக் கொண்டிருந்தது. அது இறந்தே போய்விட்டது எனச் சொல்லிடுமளவுக்கு அது செயலிழந்து மக்கிப்போயிற்று. சுருங்கச் சொன்னால் அது சில சடங்குகளின் தொகுப்பாக ஆகிப்போனது. யதார்த்த வாழ்க்கையை வழி நடத்துவதில் தோற்றுப் போயிருந்தது.

இப்படி அறியாமை காலத்து அவலங்களையெல்லாம் ஆதாரங்களுடன், பட்டியிலிட்டப் பின் இஸ்லாத்தின் வருகையையும் அது மனித இனத்தை மீட்டெடுத்த வரலாற்றையும் விரிவாகப் பேசுகின்றார் ஆசிரியர்.

இஸ்லாம், எப்படியெல்லாம் மனித ஆன்மாக்களை மூட நம்பிக்கைகளிலிருந்தும், முரட்டு சிந்தனையிலிருந்தும் விடுதலையடையச் செய்தது. எல்லா அடிமைத் தனங்களிலிருந்தும், வீழ்ச்சிகளிலிருந்தும் மனிதனைக் காப்பாற்றியது. அழிவின் விளிம்பில் நெழிந்து கொண்டிருந்த மனித இனம் காப்பாற்றப்பட்டது. மீட்டெடுக்கப்பட்டது.

இஸ்லாம் மனிதர்களை மன்னர்களின் கெடுபிடிகளிலிருந்தும், மதக் குருக்களின் கிடுக்கிப் பிடியிலிருந்தும் விடுவித்தது, காப்பாற்றியது.

இஸ்லாம் மனித வாழ்வை ஒரு புதிய அடிப்படையின் கீழ் கட்டமைத்தது. கட்டியெழுப்பியது.

இஸ்லாம் – தூய்மையான நம்பிக்கை, புதிய ஒழுக்க நெறிகள் இவற்றைக் கொடுத்தது. புதிய அனுமதிகளையும் கட்டப்பாடுகளையும் கொண்டு வந்தது. வாழ்க்கைக்கோர் உயர்ந்த லட்சியத்தைத் தந்து, மனிதர்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் சீலமிகு சிகரங்களுக்குக் கொண்டு சென்றது. இதற்காக மிக்க மேலான விழுமியங்களை வழிமுறையாக வழங்கிற்று.

அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து சுதந்திரமாக வாழ்ந்திட வேண்டும் என்ற வேட்கையை உருவாக்கியது. ஆக்கப்பூர்வமான சிந்தனைகளின் பக்கம், அவர்களை இட்டுச் சென்றது. அவர்களுடையவாழ்க்கையில் அருளை அள்ளிச் சொரிந்தது. அறிவையும் அறிவார்ந்த நம்பிக்கையையும் ஊட்டியது. சகோதரத்துவ வாஞ்சையை வளர்த்தது. நீதியை நிலை நாட்டியது. நீதிக்கு அந்த மக்களை தலைதாழ்த்த வைத்தது. சுயமரியாதை தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் ஏற்படுத்தித் தந்தது இஸ்லாம்.

மனிதர்களின் உள் புதைந்துக் கிடந்த ஆற்றல்களையெல்லாம் அகழ்ந்தெடுத்து பயன்பெற வைத்தது. வாழ்க்கையை ஒளிரச் செய்தது. அவனியில் நீதி நிறைந்த ஒரு சமநிலை சமுதாயத்தை சமைத்துக் காட்டியது. மனிதர்களின் மன நிலையை சரியாகக் கணித்து, அவர்களின் திறமைகளைப் போற்றி சரியாகக் கணக்கிட்டு சரியான மனிதர்களை, சரியான இடத்தில் அமர்த்தியது. ஒவ்வொருவரிடமிருந்தும் நல்லனவற்றையும் அழகானவற்றையும் எடுத்துச் சென்றது. இதனால் வாழ்க்கை முழு அளவில் தழைத்தது, வளர்ந்தது, வானளாவ உயர்ந்தது.

இவையெல்லாம், இஸ்லாம் இந்த உலக நிகழ்வுகளை தன் கைகளிலே வைத்துக் கட்டுப் படுத்திக்காரியமாற்றிக் கொண்டிருந்த காலத்தில் சாதித்தவை. இஸ்லாத்தின் யதார்த்தமான கொள்கைகளால் வழி நடத்தப்பட்டபோது நடந்தவை. இஸ்லாம் வியத்தகு விழுமியங்கள் கொண்ட

கொள்கைகளையும் வழிமுறைகளையும் தன்னுள் கொண்டது.

ஆனால், இஸ்லாம் மனித இனத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று, அதிகாரத்தில் அமர்ந்து உலக நிகழ்வுகளை வழி நடத்தும்போதுதான் பயன்தரும், பலன்தரும். ஏனெனில் இஸ்லாம் இறை நம்பிக்கை சார்ந்த தலைமையை உருவாக்குவதில் வல்லமைப் பெற்றது. அது மனித வாழ்க்கையை முற்றாகத் தலைமை ஏற்று வழி நடத்திட வல்லது. அது அடிமைகளை உருவாக்கிடும் மார்க்கமல்ல. தலைமை தாங்கிடும் தலைமுறைகளை உருவாக்கிய மார்க்கம்.

பின்னர் ஒரு காலம் வந்தது, அதில் இஸ்லாம் தலைமையை இழந்தது. இதற்கு முஸ்லிம்களே காரணம். மனித இனத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பையும் ஏற்றவர்கள் என்ற நிலையிலிருந்து இறங்காமல் இருந்திருக்க வேண்டும். முஸ்லிம்கள் அதனை எதிரிகள் பறித்திடாமல் பார்த்திருக்க வேண்டும். அதனை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிருக்க வேண்டும்.

மனித இனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பவை இஸ்லாம் அதனைப் பின்பற்றும் முஸ்லிம்கள் மீது சுமத்திய கட்டாயக் கடமை. அவர்கள் இந்தக் கடமையில் தவறினார்கள், இது ஒரு பெரும் வரலாற்றுப் பிழை!

முஸ்லிம்கள் தவறியது, இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களிலிருந்து அவர்கள் தடம் புரண்டது, இவற்றிற்கான காரணங்களை இந்த நூலின் ஆசிரியர் தெளிவாகவும் விளக்கமாகவும் தெளிவுபடுத்துகின்றார். இஸ்லாத்திடமிருந்து உலகத் தலைமை போனபின் மனித இனம் சந்தித்த கேடுபாடுகளையும் நூலாசிரியர் விரிவாகவே விரித்துரைக்கின்றார்.

> ❝ மேலே பட்டியல் போட்டக்காரணங் களுக்காக, இந்த நூல், மதத்தையும், சமூகத்தின் நிலைபாட்டையும், எப்படி ஆய்வு செய்திட வேண்டும், எப்படி விளக்கிச் சொல்லிட வேண்டும் என்பதற்கான முன்மாதிரி. இலட்சிய சமுதாயத்தின் வெற்றிக்கு வித்திட இப்படித்தான் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்திட வேண்டும்.

மீண்டும் பழையமௌட்டீகத்திற்குள் மனித இனம் வீழ்ந்தது. மனிதமும் மனித இனமும் தாழ்ந்தன, வீழ்ந்தன. அழிவை நோக்கியே மனித இனம் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. மனித இனம் அழிவில் பாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் போது மனிதன் அதிசயிக்கத் தக்க சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான். இந்தச் சாதனைகள் உலக வாழ்வின் வளத்தையும் வசதியையும் பல்கிப் பெருகிடச் செய்திருக்கின்றன. ஓர் அதிசய காலம். அறிவுப் பாதையில் அனேக அதிசயிக்கத் தக்க கண்டுபிடிப்புகள் அதிலே அதிசயமான அழிவு பாதைகளும் திறந்துவிடப்படுகின்றன – இது உண்மை!

மனிதன் இந்த உலகாதய வாழ்க்கையில் (இந்த உலக வாழ்க்கையே எல்லாம்) என்ற நிலையில்) வியத்தகு வகையில் வளர்ந்திருக்கின்றான். யதார்த்தத்தில் இஃதோர் அபாக்கியமானது 'முரண்பாடானது' – மனிதன் முன்னேற்றத்தின் முகட்டிலே இருக்கும் காலக்கட்டத்தில்தான் அவன் அழிவை நோக்கியும் அசுர வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றான். இந்த முரண்பாட்டை விளக்க வந்த ஆசிரியர் வேகமான வார்த்தைகளைக் கொட்டவில்லை, வார்த்தை விளையாட்டுக்களை விளையாடவில்லை. வசைபாடவில்லை, நிகழ்வுகளை விளக்கமாக விவாதிக்கின்றார். காரணகாரியங்களைப் பட்டியல்போடுகின்றார். வரலாற்றை கண்முன்னே கொண்டு வந்து காட்டுகின்றார். பரிகாரங்களையும் பரிந்துரைக்கின்றார். உண்மைகளை கூடுதல் குறைவில்லாமல் நம் முன்னே சமர்ப்பிக்கின்றார். எழுத்தில், நயம் காட்டிட வேண்டும் என்பதற்கோ எழுத்தில் அலங்காரத்தை அதிகப்படுத்திட வேண்டும் என்பதற்காகவோ அவர், எள் முனை அளவு கூட எதையும் கூடுதலாகக் கூறிடவில்லை. குறைத்தும் கூறிடவில்லை.

வரலாற்றை செய்யீத் அபுல் ஹஸன் அலீ நத்வீ அவர்கள், அலசும் விதம் நம்மையெல்லாம் ஓர் முடிவை நோக்கிப் பிடித்துத் தள்ளுகின்றது. அது, இப்போதிருக்கின்ற, உலகத் தலைமையை நிச்சயம் அகற்றியாக வேண்டும் என்பதே ! மனித இனத்தை இந்த பொய்யர்கள் போலிகள் எதிரிகள் இவர்களிடமிருந்து காப்பாற்றி, உண்மையின் பக்கம் – நேர்மையின் பக்கம் – இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்திட வேண்டும். அறியாமை இருளிலிருந்து, இந்த உலகை மீட்டு

மீண்டும் இஸ்லாத்தின் வழியில் வாழ வைத்திட வேண்டும். இது இன்றைய உலகின் அவசிய தேவை. அவசரத் தேவை. இதை வாசகர்கள் உடனேயே உணர்ந்து விடுகின்றார்கள். இல்லையேல் மனித இனம் மீள முடியாத அளவில் அழிவின் பிடியில் சிக்கிக் கொள்ளும். சீரழிந்து போகும்.

இப்போதே மனித இனம் பல்வேறு அழிவுகளிலேதான் சிக்கிக் கொண்டிருக்கின்றது. இந்த அழிவில் முஸ்லிம்களும் சிக்கிக் கொள்கின்றார்கள். இதர மக்களும் சிக்கிக் கொண்டார்கள். இந்த அழிவு நீண்ட நாள்களுக்கு முன்னரே தொடங்கியது. இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இனிவரும் நாள்களிலும் தொடரும். இறைவன் காப்பாற்றட்டும்!

நூலைப் படித்து முடித்தபின், ஒரு முஸ்லிம் தனது தவறுகளையும், தோல்விகளையும் உணர்ந்தால் அதற்காக வெட்கப்பட்டால், வேதனைப் பட்டால், குற்ற உணர்வோடு தலை குனிந்தால், அவன் இனியாவது தான் ஆற்றிட வேண்டிய பெரும் பொறுப்பைப் பற்றி உணர்ந்தால், செயல் களத்தில் குதித்தால், சரிதான். அப்போது மட்டுமே அவன் மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றிட இயலும்.

உலகத் தலைமையை அவன் இழந்ததற்கு, அவனுடைய மெத்தனம், மந்த நிலை, மார்க்க விவகாரங்களில் மயக்கம் ஆகியவையே காரணம். அவனுடைய பலத்தை அவன் மறந்தே வாழ்ந்து விட்டான். அதனால் வீழ்ந்துவிட்டான். வேதனையையும் வெட்கத்தையும் விட்டு அவன் விரைந்து செயல்படட்டும், தன் தவறுகளையும் பாவங்களையும் கழுவிக் கொள்ளட்டும்.

இந்த நூலில், பாராட்டுதலுக்குரிய ஒரு சிறப்பான அம்சம் என்னவெனில், நூலாசிரியர் எங்கெல்லாம் மனித இனத்தின் அழிவைப்பற்றிப் பேசுகின்றாரோ அங்கெல்லாம் மௌட்டீகத்தையே காரணமாகக் காட்டுகின்றார். அதே போல் முஸ்லிம்கள் மனித இனத்திற்கு தலைமை ஏற்றிடத் தவறியதே காரணம் என்பதையும் சரியாகவே சுட்டுகின்றார்.

அதேபோல் மனித இனத்தின் அழிவிற்கும் அதன் விமோஷனத்திற்கும், மனித இனத்தின் சிந்தனை போக்கே காரணம் என்பது நூலாசிரியரின் தெளிந்த முடிவு. அந்தச் சிந்தனை போக்கு

“இந்த நூல் இந்தப் பழுதுகளையெல்லாம் பாங்காக மனதில் வைத்துக்கொண்டு மிக்கக் கவனத்துடன் பழுதற எழுதப்பட்டுள்ளது. பழைய தவறுகள் கிஞ்சிற்றும் தலைகாட்டிட வில்லை. வரலாற்று உண்மைகள். உண்மையாக, உண்மைக்காகவே தரப்பட்டுள்ளன. மனித இனத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் சற்றும் சறுகி விடாமல் பதியப்பட்டுள்ளது. மாச்சர்யங்கள் எள் மூக்கின் முனை அளவு கூட இடம்பெற்றிட வில்லை. மனித இனத்தின் மேல் வரலாற்று நிகழ்வுகள் நிகழ்த்திய அனைத்து நிகழ்வுகளும் இளையும் பிசகாமல் அப்படியே பதியப்பட் டுள்ளன.

இஸ்லாத்தை அழுத்தமாக நம்பும் ஓர் ஆசிரியர், இஸ்லாத்தின் தலைமை மட்டுமே. உலகை, அதன் இழிவுகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் மாற்றும் என உறுதியாக நம்பும் ஆசிரியர், இஸ்லாம் மீண்டும் உலகத் தலைமையை ஏற்றிட வேண்டும் என விழையும் ஓர் ஆசிரியர் அதன் பொருளாதார வலிமையும், தொழில் துறை வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியையும் விவாதிப்பார் என ஒரு வாசகர் எதிர்பார்க்க மாட்டார். ஆனால், இந்த நூலின் ஆசிரியர் அவற்றையும் விட்டு விடாமல் விவாதிக்கின்றார். அனைத்தையும் முழுமையாக விவாதிக் கின்றார்.

வாழ்க்கை ஓட்டத்தை திசை திருப்பி, வாழ்க்கையைக் கட்டுப்படுத்திய அனைத்துப்பகுதிகளையும் விரிவாக சங்கிலித் தொடராய் இந்த நூல் விவாதிக்கின்றது. மனித வாழ்க்கையை மாட்சிமைப்படுத்திட வேண்டும் என்ற இலட்சியத்தை மையமாகக் கொண்டு வரலாற்றின் அனைத்துப் பகுதிகளையும் மீளாய்வுக்கு உட்படுத்துகின்றது இந்த நூல்.

அத்தோடு இஸ்லாமிய உலகுக்குத் தேவையான ஆலோசனைகளையும், அறிவார்ந்த அறிவுரைகளையும் வழங்குகின்றது. இந்த ஆலோசனைகளும், அறவுரைகளும், நடுவுநிலையானவை, அளவானவை, அதிகப் பிரசங்கித்தனம் அற்றவை. இந்த நூல் வரலாற்றை எப்படிப் பதிவு செய்திட வேண்டும் என்பதற்கான ஒப்பற்ற வாழும் எடுத்துக்காட்டு!

மனித இனத்தின் 'இந்த உலகமே எல்லாம்' என்ற சிந்தனைகளுக்கும், இஸ்லாமியச் சிந்தனைப் போக்குக்கும் இடையே உள்ளது. இந்த உலகமே எல்லாம் என்ற சிந்தனையும் உணர்வுந்தான் இஸ்லாத்திற்கு முந்தைய காலக் கட்டத்தில் நிலவியது. இஸ்லாம் உலகத் தலைமையை இழந்தபோதும் அதே சிந்தனைதான் நிலவியது.

வரலாற்றின் எந்தக் காலக்கட்டமாக இருந் தாலும், இஸ்லாத்தின்வழிகாட்டுதல்கள்இல்லாத காலக்கட்டத்தில் மனித இனத்தின் வாழ்வும் போக்கும் அறியாமை இருள் மண்டியதாகவே இருந்திருக்கின்றது. இந்த மௌட்டீகத்தை இன்றைய உலகம் விடாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டே இருக்கின்றது. அன்றைய அய்யாமுல் ஜாஹிலிய்யா காலத்தைப் போல! அதாவது அறியாமை இருள் மண்டிக் கிடந்த காலத் தைப்போல்.

வரலாற்றில் எதிர்காலம் வரை இட்டுக் காட்டும் அளவிற்கு இந்த நூலில் உயர்ந்து நிற்கும் தனித்தன்மை என்னவெனில் நூலில், ஆசிரியர் இஸ்லாத்தின் இலட்சியங்களையும், உணர்வுகளையும் துல்லியமாகவும் ஆழமாகவும் கோடிட்டுக்காட்டியது தான். அத்தோடு இஸ் லாத்தின் கொள்கைகளையும், அதன் இலட்சியங் களையும் பாங்குற எடுத்துக் காட்டுகின்றார்.

மேலே பட்டியல் போட்டக்காரணங் களுக்காக, இந்த நூல், மதத்தையும், சமூகத்தின் நிலைபாட்டையும், எப்படி ஆய்வு செய்திட வேண்டும், எப்படி விளக்கிச் சொல்லிட வேண்டும் என்பதற்கான முன்மாதிரி. இலட்சிய சமுதாயத்தின் வெற்றிக்கு வித்திட இப்படித்தான் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்திட வேண்டும்.

மேலை நாட்டு அறிவாளிகள் வரலாற்றை (வளைத்தும் திரித்தும்) தங்கள் இசைவுக்கேற்ப வரைந்திருக்கின்றார்கள். இயல்பாகவே அவர்கள் வளர்க்கப்பட்ட வார்ப்பிலிருந்து அவர்கள் தப்பித்துவிட இயலவில்லை, முடியாது. அவர்கள், கொள்கைகளின் அடிப்படையிலும், நிலத்தின் அடிப்படையிலும், மத நம்பிக்கையின் அடிப்படையிலும், மாச்சர்யங்கள் நிறைந்த வர்கள். அவர்கள் வாழ்க்கையின் யதார்த்த விழுமியங்கள் தரத்தில் உயர்ந்த பண்களை அறிந்ததில்லை. அவர்கள் எழுதிய வரலாறுகள் எல்லாம் தகிடுதத்தங்கள், உண்மைக்குப் புறம் பானவை.

வாழ்க்கையின் யதார்த்த விழுமிங்களையும் தரத்தில் உயர்ந்த பண்புகளையும் புரிந்து கொண்டா லொழிய மனித இனத்தின் வரலாற்றை மாச்சர்யங்களுக்கு அப்பால் நின்று எழுதிட இயலாது. அதனை சரியான கோணத் தில் ஆய்ந்திட முடியாது. முழுமையான சரியான முடிவுக்கு வந்திட இயலாது.

ஐரோப்பிய வரலாற்று ஆய்வாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் வரலாற்றை வரைவது ஒரே ஒரு கோணத்தில்தான். அவர்களை, ஐரோப்பாவின்சிந்தனை, கருத்தோட்டம், இவை மட்டுமே வழி நடத்தும். அவர்கள் உலகின் இதர நிகழ்வுகளைக் கண்டுகொள்வதே இல்லை. அதேபோல் இதர சிந்தனைகள், கருத்துக்கள் இவற்றையும் கண்டுகொள்வதே இல்லை. கார ணம் அவை ஐரோப்பாவில் அவதரிக்கவில்லை என்பதுதான். அவர்கள் எப்போதாவது ஐரோப் பாவுக்கு வெளியே நிகழ்ந்த நிகழ்வுகளை, தங்கள் எழுத்தில் கொண்டுவந்தால், அவர்கள் அவற்றை ஏளனப்படுத்துவதற்கே கொண்டுவந்தார்கள். பின்னர் அவற்றின் முக்கியத்துவத்தையும் வரலாற்றில் அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் குறைத்தும், திரித்தும் காட்டுவார்கள். இதற்காக மட்டுமே அவர்கள் ஐரோப்பாவிற்கு வெளியே உள்ள வரலாற்றை கண்டுகொள்வார்கள். அல்லாமல் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள், அடுத்தவர்கள் வரலாற்றை.

ஒரு காலக்கட்டம்வரை, நாம் கிழக்குத் திசை நாட்டைச் சார்ந்தவர்கள், மேலை நாட்ட வர்களிடமிருந்து கடன் வாங்கிடவும், காப்பி அடிக்கவும் கற்றுக் கொண்டோம். அவர்கள் தயாரித்த பொருள்களை மட்டுந்தான் கடன் வாங்கினோம், காப்பி அடித்தோம் என்றில்லை, வரலாற்றை வரையும் முறைகளையும் காப்பி அடித்தோம். கடன் வாங்கினோம். இப்படி கடன் வாங்கிய திலும் காப்பி அடித்ததிலும் அவர்களின் குறைகளையும், குற்றங்களையும், குயுத்திகளையும் அப்படியே கடன் வாங்கினோம், காப்பி அடித்தோம்.

இன்று, அந்த மேலை நாட்டவர்களின் குறை களும், மாச்சச்யங்களும், மக்கள் மன்றத்தில் பளிச்சென பல்லிளிக்கின்றன. அதனால் மக்கள் அந்த வரலாறுகளை நம்ப மறுத்து வருகின்

றார்கள். இந்தச் சிக்கலில் கிழக்கு திசையைச் சார்ந்த நாமும் சிக்கிக் கொண்டோம்.

அவர்கள், மேலை நாட்டவர்கள் வாழ்க்கையை மிகவும் குறுகியதொரு வட்டத்திற்குள் இருந்துகொண்டு பார்க்கின்றார்கள். அதே பார்வையைத்தான் வரலாற்றின் மீதும் பாய்ச்சுகின்றார்கள். இதனால் அவர்களால் நேரான விசாலமான முடிவுகளை எட்டிட இயலவில்லை. குண்டு சட்டிக்குள் குதிரையை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். தவறான அடிப்படையின் கீழ் எழுப்பப்படும் சிந்தனைகளும் முடிவுகளும் தவறான செயல்களிலே கொண்டு நிறுத்தும். இழிவுகள், அழிவுகள், இவையே விளையும்.

இந்த நூல் இந்தப் பழுதுகளையெல்லாம் பாங்காக மனதில் வைத்துக்கொண்டு மிக்கக் கவனத்துடன் பழுதற எழுதப்பட்டுள்ளது. பழைய தவறுகள் கிஞ்சிற்றும் தலைகாட்டிடவில்லை. வரலாற்று உண்மைகள். உண்மையாக, உண்மைக்காகவே தரப்பட்டுள்ளன. மனித இனத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் சற்றும் சறுகிவிடாமல் பதியப்பட்டுள்ளது. மாச்சர்யங்கள் எள் மூக்கின் முனை அளவு கூட இடம்பெற்றிடவில்லை. மனித இனத்தின் மேல் வரலாற்று நிகழ்வுகள் நிகழ்த்திய அனைத்து நிகழ்வுகளும் இளையும் பிசகாமல் அப்படியே பதியப்பட்டுள்ளன.

இஸ்லாத்தை அழுத்தமாக நம்பும் ஓர் ஆசிரியர், இஸ்லாத்தின் தலைமை மட்டுமே, உலகை, அதன் இழிவுகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் மாற்றும் என உறுதியாக நம்பும் ஆசிரியர், இஸ்லாம் மீண்டும் உலகத் தலைமையை ஏற்றிட வேண்டும் என விழையும் ஓர் ஆசிரியர் அதன் பொருளாதார வலிமையும், தொழில் துறை வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியையும் விவாதிப்பார் என ஒரு வாசகர் எதிர்பார்க்க மாட்டார். ஆனால், இந்த நூலின் ஆசிரியர் அவற்றையும் விட்டு விடாமல் விவாதிக்கின்றார். அனைத்தையும் முழுமையாக விவாதிக்கின்றார்.

வாழ்க்கை ஓட்டத்தை திசை திருப்பி, வாழ்க்கையைக் கட்டுப்படுத்திய அனைத்துப் பகுதிகளையும் விரிவாக சங்கிலித் தொடராய் இந்த நூல் விவாதிக்கின்றது. மனித வாழ்க்கையை மாட்சிமைப்படுத்திட வேண்டும் என்ற இலட்சியத்தை மையமாகக் கொண்டு வரலாற்றின் அனைத்துப் பகுதிகளையும் மீளாய்வுக்கு உட்படுத்துகின்றது, இந்த நூல்.



செய்யீத் குதூப் ஷஹீத்

அத்தோடு இஸ்லாமிய உலகுக்குத் தேவையான ஆலோசனைகளையும், அறிவார்ந்த அறிவுரைகளையும் வழங்குகின்றது. இந்த ஆலோசனைகளும், அறவுரைகளும், நடுவுநிலையானவை, அளவானவை, அதிகப் பிரசங்கித்தனம் அற்றவை. இந்த நூல் வரலாற்றை எப்படிப் பதிவு செய்திட வேண்டும் என்பதற்கான ஒப்பற்ற வாழும் எடுத்துக்காட்டு!

இந்த நூல் எப்படி, முஸ்லிம்கள், வரலாற்றைப் படிக்கலாம், எழுதலாம், ஆய்வு செய்யலாம், மேலை நாட்டவர்களிடமிருந்து கடன் வாங்காமலும், காப்பி அடிக்காமலும் என்பதைக் கற்றுத் தருகின்றது.

இந்நூல் பற்றி, என்னுடைய எண்ணங்களைப் பதிவு செய்திட கிடைத்த வாய்ப்பை அல்லாஹ் வழங்கிய அரிதான அருளாகக் கருதுகின்றேன். இதனை அரபிலேயே படிக்க வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

''எவருக்குப் புரிந்துகொள்ளக்கூடிய இதயமிருக்கின்றதோ, எவர் நேர்மையுடன் செவி தாழ்த்திக் கேட்கின்றாரோ, அத்தகையவருக்கு நிச்சயமாக இதில் படிப்பினை இருக்கின்றது.'' (அல்குர்ஆன் – 50:37)

ஹல்வான் : எகிப்து செய்யீத் குதுப்
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்,
ஆசிரியர் – வைகறை வெளிச்சம்
நிறுவனர் : விடியல் வெள்ளி–

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்பூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர் களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப் படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்க வில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளை யடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திற மையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர் களுக்குஇருந்தது.முதலாம்உலகப்போரின்போதுபிரெஞ்சுதளபதிஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து ‘எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது‘ என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே..

## என்ன ஓர் அற்புதம்?

அல்-அதீத் உதவி கேட்டு அனுப்பிய செய்தி நூருத்தீன் ஸங்கியை அடைந்தவுடன் அவர் அசதுதீனை நேரில் வந்து சந்திக்கும்படி செய்தி அனுப்பினார். அந்த செய்தியை கொண்டு சென்ற செய்தியாளன் அலெப்போவை விட்டு வெளியேறும் முன்னரே அசதுதீன் அங்கு எதிர் கொண்டு வந்து கொண்டிருந்தார். எகிப்தில் உள்ளவர்கள் நூருத்தீனிடம் உதவி கேட்டு செய்தி அனுப்பியது போலவே அசதுதீனிடமும் தங்கள் துன்பத்தை வெளிப்படுத்தி உதவி கோரி செய்தி அனுப்பி இருந்தனர். அவருக்கும் தாள முடியாத ஆத்திரம். அவரால் பொறுமையாக இருக்க இயலவில்லை. அவருக்கு என்ன செய்வ தென்றும் தெரியவில்லை.

எனவே, அவர் எகிப்தில் உள்ளவர்களுக்கு உதவுவதற்கு அனுமதி கேட்பதற்காக நூருத்தீ னிடம் வந்திருந்தார். செய்தி சென்று சேர்வதற்கு முன்னரே அசதுதீன் அவர்கள் வந்து விட்டார். அதுவும் தான் விரும்பிய அதே காரணத்திற் காகவே அவரும் வந்துள்ளார் என்று அறிந்த நூருத்தீன் இதனை ஒரு நல்ல அறிகுறியாக இறை வன் புறத்தில் இருந்து கிடைத்த அனுமதியாக எடுத்துக்கொண்டார். அவர் இறைவனை புகழ்ந் தவராக எகிப்திற்கு எவ்வளவு விரைவாக படை களை கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக கொண்டு செல்ல அசதுதீனுக்கு உத்தரவிட்டார்.

இது தான் இறைவன் புறத்தில் இருந்து நிகழும் அதிசயம். வெவ்வேறு திசைகளில் இருந்த இருவருக்கு ஒரே மாதிரியான எண்ணத்தை உருவாக்கி அவர்களை சந்திக்க செய்வது என்பது இறைவனால் மட்டுமே நடக்கக்கூடிய நிகழ்வு.

இதன் பின்னர் எகிப்திற்கு படை நடத்தி செல்ல இரண்டு இலட்சம் தினார்களையும் தேவையான பொருட்கள் தளவாடங்களையும் அசதுதீனுக்கு நூருத்தீன் தந்தார். மேலும் தனக்கு தேவையான போர்வீரர்களை தேர்வு செய்து கொள்ளவும் அசதுதீனுக்கு அனுமதி வழங்கினார்.

அசதுதீன் நூருத்தீன் அவர்களின் படையிலி ருந்து 2000 வீரர்களை தேர்வு செய்தார். பின்னர் துர்குகளிலிருந்து (துருக்கிய வீரர்கள்) 6000 வீரர்களை தேர்வு செய்து கொண்டார். அசதுதீ னுக்கு இரண்டு இலட்சம் தினார்களை போர் செலவிற்கு தந்தது மட்டுமல்லாமல் போர் வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 20 தினார் களை நூருத்தீன் கொடுத்து அவர்களை வழிய னுப்பினார். மேலும் சில படை தளபதிகளையும் சில முக்கியமான தலைவர்களையும் அசதுதீ னுடன் சென்று உதவுமாறும் கட்டளையிட்டார்.

ரபியல் அவ்வல் மாதத்தின் நடுவில் அவர்கள் எகிப்தை நோக்கி அல்லாஹ்வை நோக்கி வெற்றியை கோரி இறைஞ்சியவண்ணம் படையெடுத்தனர். நூருத்தீன் அவர்கள் ரசல்மா (டமாஸ்கசுக்கு அருகில் உள்ள இடம்) என்ற இடத்தில் முகாமிட்டு வெற்றி செய்திகளை எதிர் நோக்கி காத்திருந்தார். இதற்கிடையே நூருத்தீன் அவர்களின் ஒற்றன் ஒருவன் ஒரு செய்தியை கொண்டு வந்தான்.

நூருத்தீன் அவர்களின் படை வரும் செய்தியை கேள்விப்பட்ட ஃபிரான்குகள் கெய்ரோவை விட்டு வெருண்டோடி தங்களின் பழைய இடத் திற்கே திரும்பி விட்டனர் என்பதும் அந்த கிறித் தவ மன்னன் "நான் அப்போதே கூறவில்லையா? இதுதான் நடக்கும்" என்று கூறி தன்னை எகிப்திற்கு வரவழைத்த அனைவருக்கும் தற்போது சாபம் விட்டுக்கொண்டிருக்கிறான் என்பதும் தான் அந்த ஒற்றன் கொண்டு வந்த செய்தி. இந்த மகிழ்ச்சியான செய்தியை கேட்டுக்கொண்ட நூருத்தீன் அவர்கள் இந்த செய்தியை தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்.

## ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தயக்கம்

மற்றவர்களை போலல்லாமல் ஸலாஹுத்தீன் அவர்களுக்கு எகிப்தில் மீண்டும் போர் செய்ய சற்றும் விருப்பமில்லை. எகிப்தியர்களின் செய்தி அதாவது அல்-அதீத் அனுப்பிய செய்தி நூருத்தீன் அவர்களை அடைந்தவுடன் அவர் ஸலாஹுத் தீனை அழைத்து, "நீ என் செய்தியாளனுடன் ஹிம்சில் உள்ள உன்னுடைய மாமாவிடம் செல். நிலைமை மோசமாக உள்ளது. எனவே, தாமதப்படுத்தாமல் அவரை உடனடியாக இங்கே வரச்சொல்" என்று கூறினார்.

ஸலாஹுத்தீன் ஹிம்சை நோக்கி கிளம்பி

னார். அவர் அலெப்போவிலிருந்து கிளம்பி ஒரு மைல் தூரம் செல்வதற்குள் அவர்களை எதிர் நோக்கி அவருடைய மாமா அசதுதீன் வந்து கொண்டிருந்தார். இருவரும் நூருத்தீனிடம் சென்றனர். "எகிப்தை நோக்கி படையெடுக்க தயாராகுங்கள்" என்று நூருத்தீன் அவர்களிடம் கூறினார். அப்போது அசதுதீன் ஏற்கனவே எகிப் தியர்கள் செய்த துரோகத்தை நினைவுப்படுத்தி னார். மேலும் எகிப்தை நோக்கி படையெடுக்க போதிய பணம் கைவசம் இல்லை என்பதையும் அவர் எடுத்துக் கூறினார். போதுமான பணத் தையும் போதுமான போர்வீரர்களையும் தந்த நூருத்தீன் அவர்கள் இப்போது எகிப்தை நோக்கி படையெடுக்கும்படி கூறினார்.

"நீங்கள் எகிப்திற்கு செல்ல தாமதப்படுத்தி னாலோ தயக்கம் காட்டினாலோ நானே அங்கே செல்ல வேண்டியிருக்கும். ஒன்று நீங்கள் சொல் லுங்கள் அல்லது நான் அங்கே கட்டாயம் செல்வேன். நாம் இந்த விஷயத்தை அலட்சியம் செய்தால் கிருத்தவர்கள் எகிப்தை கைப்பற்றி விடுவார்கள். இதன் காரணமாக முஸ்லிம்கள் மரியாதையை லெவான்திலும் அதை சுற்றி யுள்ள இடங்களிலும் இழக்க நேரிடும்." என்று கூறிவிட்டார்.

இதன் பின்னர் அசதுதீன் ஸலாஹூத்தீனை நோக்கி, "ஸலாஹுதீன் நீங்கள் உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

அதை கேட்டவுடன் ஸலாஹுதீன், "நீங்கள் என்னை எகிப்தின் மன்னராக்கினால் கூட நான் எகிப்தை நோக்கி போர் செய்ய வரமாட்டேன். அலெக்சாண்டிரியாவில் நான் பட்டபாடு எனக்குதான் தெரியும். அதை நான் மறக்க மாட்டேன்", என்று கூறிவிட்டார்.

ஆனால் அவருடைய மாமா இப்போது நூருத்தீன் அவர்களை நோக்கி, "ஸலாஹூத்தீன் என்னுடன் வருவது மிகவும் அவசியம்" என்று கூறினார். இப்போது நூருத்தீன் அவர்கள் ஸலாஹூத்தீனை நோக்கி, "நீங்கள் கண்டிப்பாக அசதுதீனுடன் எகிப்திற்கு செல்ல வேண்டும்" என்று உத்தரவிட்டு வேறு எதுவும் பேசாமல் "இந்த கூட்டம் இத்துடன் முடிந்துவிட்டது" என்று கூறி சென்றுவிட்டார். அவர் அவ்வாறு உத்தரவிட்டபின்னர் பேசுவதற்கு ஒன்றும் கிடை யாது. வேறு வழி எதுவும் இல்லை.

இதன் பின்னர் துர்குகளிலும் மற்றவர்களிலும் தன் படையை தயார் செய்து கொண்டார். அசதுதீன் எகிப்தை நோக்கி புறப்பட்ட போது நூருத்தீன் மீண்டும் ஸலாஹூத்தீனிடம் வந்து "நீ, உன் மாமாவுடன் துணை நில்" என்று உற்சாகப்படுத்தினார். ஆனால் ஸலாஹூத்தீன் தன்னிடம் போதுமான பணமும் ஆயுதங்களும் இல்லை என நூருத்தீனிடம் தெரிவித்தார். நூருத்தீன் உடனடியாக போதுமான பணத்தை ஸலாஹூத்தீனுக்கு வழங்கி அவருடைய மாமா வுடன் போகும் படி உத்தரவிட்டார். அன்று ஸலாஹூத்தீன் அவர்கள் தயக்கத்துடனே தான் சென்றார். ஆனால் எல்லாம் வல்ல இறைவன் நூருத்தீன் அவர்களின் மறைவுக்கு பிறகு ஸலா ஹூத்தீன் எதிர்பார்க்காததை எல்லாம் தந்து அருளினான்.

இதனை தான் இறைவன் தன்னுடைய இறைமறையில் பின்வருமாறு கூறுகிறான்:

"நீங்கள் ஒன்றை விரும்பமாட்டீர்கள். ஆனால் அதில் உங்களுக்கு நன்மையிருக்கும். நீங்கள் ஒன்றை விரும்புவீர்கள். அது உங்களுக்கு நன்மையானதாக இருக்காது. இதனை நீங்கள் அறியமாட்டீர்கள். அல்லாஹ் நன்கறிவான்"

## அசதுதீனையும் படைத் தளபதிகளையும் கொலை செய்ய திட்டம்

அசதுதீன் தன்னுடைய படையினருடன் கெய்ரோவை ரபியல் ஆகிர் 7ம் நாள் வந்தடைந் தார். அங்கு அவரை எகிப்தின் ஆட்சியாளர் அல் அதீத் சந்தித்தார். அசதுதீனுக்கு பல்வேறு பரிசுகளை வழங்கினார். ஷவாரால் இது எதையும் தடுக்க இயலவில்லை. அசதுதீனின் படையையும் அல்அதீத் அசதுதீனிடம் நடந்து கொண்ட விதத் தையும் பார்த்த பின்னர் ஷவாருக்கு வேறு வழி எதுவும் இல்லை. இதனை அவர் வெட்கத்தை விட்டு அசதுதீனடமே ஒப்புக் கொண்டார்.

ஆனாலும் அவர் அசதுதீனுக்கு முன்னர் தந்திருந்த வாக்குறுதி எதையும் நிறைவேற்ற மனமில்லை. ஆனால் இப்போது நூருத்தீன் அவர்களுக்கு தன்னுடைய ஆளுமைக்கு கீழ் உள்ள பகுதிகளில் மூன்றில் ஒரு பகுதியை விட்டுத்தர முன்வந்தார். அசதுதீனையும் நேரில் சந்தித்து தான் முன்னர் அளித்துள்ள வாக்குறுதி களையும் நிறைவேற்றுவதாக ஒரு பொய்யான



வாக்குறுதியை தந்துவிட்டு வந்தார். இப்போது அசதுதீனையும் அவருடைய படைத் தளபதி களையும் கொலை செய்ய நயவஞ்சகமாக ஒரு திட்டம் தீட்டினார்.

அசதுதீனையும் அவருடைய படைத் தளபதி களையும் விருந்துக்கு வரவழைத்து அவர்களை அங்கே வைத்து கைது செய்ய வேண்டும். பின்னர் அசதுதீனை கொன்றுவிட வேண்டும் என்று திட்டமிட்டார். ஆனால் ஷவாரின் மகன் அல்காமில் ஷவாரை இவ்வாறு செய்யாமல் தடுத்துவிட்டார். அவர் தன் தந்தையை தடுத்து, "தந்தையே, அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் இவ்வாறு செய்ய திட்டமிட்டால் நான் அதனை முன்கூட்டியே அசதுதீனுக்கு தெரி வித்து விடுவேன்" என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த ஷவார், "நான் இவ்வாறு செய்யாவிட்டால் நாம் அனைவரும் கொல்லப் பட்டுவிடுவோம் என்று அஞ்சுகிறேன்" என கூறினார்.

இதற்கு மறுமொழி கூறிய ஷவாரின் மகன், "உண்மை தான். சிலுவைப்படையினரின் முன் மண்டியிட்டு அவர்களிடம் அடிமைப்பட்டு அவர்களால் கொல்லப்படுவதை விட, நாம் முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் முஸ்லிம் களின் ஆட்சியின் கீழ் இருக்கும் போது மரணிப்பது எவ்வளவோ மேலானது. ஒருவேளை அசதுதீன் அவர்கள் கைது செய்யப்பட்டது சிலுவைப்படையினருக்கு (ஃபிரான்குகளுக்கு) தெரியவந்தால் உடனடியாக அவர்கள் இங்கே வந்துவிடுவார்கள். நூருத்தீன் அவர்களுக்கு அல்அதீத் இந்த செய்தியை தெரிவித்தால் அவர் ஒரே ஒரு போர்வீரனைக்கூட நம்மை பாதுகாக்க அனுப்ப மாட்டார். இறுதியில் ஃபிரான்குகள் எகிப்தை கைப்பற்றி விடுவார்கள். எனவே, இவ்வாறு செய்ய வேண்டாம்" என்று கூறினார்.

முடிவில் ஷவார் அசதுதீனையும் அவருடைய படைத்தளபதிகளையும் கைது செய்யும் தன்னு டைய சதித் திட்டத்தை கைவிட்டார். ஆனாலும் இந்த சதித்திட்டம் எப்படியோ கசிந்து நூருத்தீன் அவர்களின் படையினருக்கு தெரியவந்தது. ஸலா ஹூத்தீன் அவர்களும் இஸ்ஸத்தீன் ஜுர்திக் என்பவரும் இன்னும் மற்றவர்களும் அசதுதீனை கொன்றுவிடுவது என முடிவு செய்தனர். இதனை செயல்படுத்த அசதுதீன் அவர்களிடம் உத்தரவு கேட்டனர். ஆனால் அசதுதீன் அவர்களை இவ்வாறு செய்ய வேண்டாம் என தடுத்துவிட்டார்.

"ஷவார் உயிருடன் இருக்கும் வரை நமக்கு ஆபத்து தான். எனவே, அவரை கொன்றுவிட அனுமதி தாருங்கள்" என்று மறுபடியும் அசதுதீனின் படையினர் கோரிக்கை வைத்தனர். ஆனாலும் அசதுதீன் தீர்க்கமாக அதனை மறுத்துவிட்டார்.

ஒருநாள் அசதுதீன் அவர்கள் இமாம் அஷ் ஷாஃபி (ரஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு சென்றிருந்தார். அந்த நேரத்தில் ஷவார் அவர்கள் அசதுதீன் அவர்களை பார்ப்பதற்காக தன் படை பரிவாரத்துடன் வந்திருந்தார். அங்கே அவர்கள் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களையும் இஸ்ஸத் தீன் ஜுர்திக் அவர்களையும் சந்தித்தார். அவர்கள் அசதுதீன் அவர்கள் இமாம் அஷ்ஷாஃபி (ரஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு சென்றுள்ள செய்தியை தெரிவித்து இப்போதைக்கு அசது தீனை காண இயலாது என்று கூறிவிட்டனர். ஷவார் அவர்களின் மீது ஏற்கனவே அவர்களுக்கு மிகுந்த சந்தேகம் இருந்தது. மேலும் இப்போது அங்கு வந்திருந்ததையும் அவர்கள் சந்தேகம் கொண்டே பார்த்தனர். ஷவாரிடமிருந்து அசது தீனை காப்பாற்றிவிட வேண்டும் என்று அவர்கள் உறுதியாக இருந்தனர்.

இப்போது ஷவார் தன்னுடைய படையின ருடன் அசதுதீன் சென்றிருந்த இமாம் அஷ்ஷாஃபி (ரஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்தின் பக்கமாக

செல்ல ஆரம்பித்தார். இது ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் சந்தேகத்தை மேலும் வலுப் படுத்தியது. ஷவார் நிச்சயமாக அசதுதீனை கொலை செய்யும் நோக்கத்தோடு தான் வந்துள் ளார். அதன் காரணமாகவே அவர் அசதுதீனை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்று நினைக்கிறார் என்று ஸலாஹூத்தீன் கருதினார். ஷவாருக்கு முன்பாக நாம் செயல்பட்டு அவரு டைய சதித்திட்டத்தை தடுத்துவிட வேண்டும் என்று நினைத்தார். எனவே, ஸலாஹூத்தீனும் அவருடைய படைவீரர்களும் ஷவாரின் படை யினரை தாக்கி ஷவாரை கைது செய்தனர். ஷவாரின் படைவீரர்கள் பலர் தப்பி ஓடி விட்ட னர். ஸலாஹூத்தீன் ஷவாரை கொன்றுவிட நினைத்தார்.

ஆனாலும் அசதுதீன் அவர்களின் உத்தரவில் லாமல் ஸலாஹூத்தீனால் ஷவாரை கொல்ல இயலவில்லை. எனவே, அவரை சிறைவைத்து அவருக்கு பாதுகாவலாக சில வீரர்களை நிறுத்தினார்.

அசதுதீன் அவர்கள் திரும்பி வந்தவுடன் அவருக்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை. காரணம் தற்போதுள்ள நிலையில் ஷவாரை விட்டால் அவர் நிச்சயம் தங்களை திருப்பி தாக்கவும் அழிக்கவும் முயல்வார் என அசதுதீன் நம்பினார். இதற்கிடையே இந்த நிகழ்வுகளை அறிந்து கொண்ட அல்அதீத் பல்வேறு செய்தி களை ஷவாரை கொலை செய்யும் முடிவுக்கு சாதகமாக அனுப்பிக் கொண்டே இருந்தார். எனவே, இறுதியாக ரபியல் ஆகிர் மாதம் 17ம் நாள் ஷவாரை கொல்ல அசதுதீன் அனுமதி அளித்தார். இதன் பின்னர் அவர் கெய்ரோவை வந்தடைந்தார். அங்கே அவரை காண பெருந் திரளான மக்கள் வந்திருந்தனர். ஷவாரின் சொத் துக்கள் பொதுமக்களுக்கே பிரித்து கொடுக்கப் பட்டது. இதற்கிடையே தான் அந்த சோகமான நிகழ்வு நடந்தது...

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்..

# புத்தகங்கள் ஹிஜ்ரத் செய்ததா?

மூரித்தானிய, வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாட்டில் ஷன்கீத் என்ற நகரம் பாலைவனத்தின் மணலால் பூமிக்குள் மூழ்கி விட்டது.

ஆச்சரியம் என்னவென்றால் இந்த புதைந்த நகருக்குள் ஒரு புதைக்கப்பட்ட நூலகம் உள்ளது.

ஏன் புதைக்கப்பட்டது யார் புதைத்தார்கள்?

ஸ்பெயினிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறும் போது தங்களது சொந்தக் கரங்களால் எழுதிய பொக்கிஷங்களையும் தங்களோடு சுமந்து வந்தார்கள். ஸ்பெயினின் பெரும் பெரும் ஆய்வா ளர்கள் எழுத்தாளர்களெல்லாம் தாங்கள் விரட்டி யடிக்கப்பட்ட நேரத்தில் தங்களது உயிரை காப்பாற்றுவதை விட இந்த பொக்கிஷங்களை பாதுகாக்க இடம் தேடி கொண்டிருந்தார்கள்.

இந்த கையெழுத்துப் பிரதிகளின் ஹிஜ்ரத் பயணம் தொடங்கியது டோலிடோவிலிருந்து, மொராக்கோ, மவுரித்தேனியா வழியாக, மாலி வரை, குறிப்பாக திம்புகூ நகரம் (ஒன்பதாம் நூற் றாண்டைச் சார்ந்த பழைய குர்ஆன் பிரதி இந்த ஊரில் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது).

கடைசியில் இந்த ஷன்கீத் நகரத்தில் நிறை வடைந்தது. இந்த நகரத்தில் தான் தங்களது கைப்பிரதிகளை அந்த மகான்கள் புதைத்தார்கள்.

இந்த கையெழுத்து பிரதிகள் வெறும் ஷன் கீத்தில் மாத்திரமில்லை மாறாக அந்த நகரத்தில் பல்வேறு ஊர்களில் உள்ளது மொத்தம் 40,000 பிரதிகள் என்று புள்ளி விவரம் கூறுகிறார்கள். இந்த பிரதிகளை கண்டறிவதற்கென்றே மூரித்தானிய கல்வி நிறுவனம் ஒருக் குழுவையை ஏற்படுத்தி ஆராய்ச்சியை தொடர்ந்தது 1975 இல் 7000 கைப் பிரதிகளை அந்தக் குழு கைப்பற்றியது.

அதில் இமாம் இப்னு ஸீனா மற்றும் இமாம் ராஸி உடைய பிரதிகள், ஹிஜ்ரி ஐந்தாம் நூற் றாண்டில் மான் தோலில் இமாம் மஸ்ஊது அவர் களால் எழுதப்பட்ட மூரூஜுஹப் பிரதிகளெல் லாம் கண்டறியப்பட்டது. அதுப்போல மாலிகி மத்ஹபின் மிக முக்கியமான நூல் 'ஜாமி இப்னு யூனுஸ்' கண்டறியப்பட்டது.இது வரைக்கும் 3500 பிரதிகள் நுன்பதிவின் மூலம் புத்தகங்களாக மாற்றம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

இதுவே புத்தகங்களின் ஹிஜ்ரத் வரலாறு.

அரபி மூலம்: நாவிததுன் மின் தாரிக்
தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# புனித தீன் கவியரங்கில் புகழுடன் புகுந்த கவிக்கோ

“ஆலிம் கவிஞர்” தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹி
(துணைத் தலைவர், இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை.)



அன்னைத் தமிழின் கவிதை வானத்தில் கதிரவானாக ஒளி வீசிய கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள், “வள்ளுவர் வாழ்வியல்” என்ற பொதுத் தலைப்பில், கவியரசு கண்ண தாசன் தலைமையில் காரைக்குடியில் 1961ஆம் ஆண்டில் நடைபெற்ற கவியரங்கில் கவிதை வாசித்தார்.

இது, கவிக்கோ தன்னுடைய வாழ்வில் பங்கேற்ற முதல் கவியரங்கம் ஆகும்.

1967 மார்ச் 6 ஆம் தேதி அண்ணாவின் தலைமையில் அமைந்த தி.மு.க. ஆட்சியில் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமை யில், 1967 ஆகஸ்ட் 15 ஆம் நாள் திருச்சி வானொலியில் “விடுதலைப்போர் வீரர்கள்” என்ற பொதுத் தலைப்பில் 7 கவிஞர்கள் பங்கேற்ற ஒரு கவியரங்கம் நடைபெற்றது. இதில் கவிக்கோவும் ஒருவராகப் பங்கேற்று ‘வ.வே.சு. ஐயர்’ என்ற தலைப்பில் கவிதை வாசித்தார். இது கலைஞரின் தலைமையில் கவிக்கோ பங்கேற்ற முதுல் கவியரங்கம் ஆகும். இதற்குப் பின் அடுத்த மாதம் 1967 செப்டம்பர் 17 ஆம் நாள் அண்ணா பிறந்தநாள் கவியரங்கம் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற கவிக்கோவிற்கு கலைஞர் அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கவியரங்கில் பங்கேற்ற கவிக்கோ தன்னுடைய கவிதையில் அண்ணாவைப் பற்றி,

**“அண்ணா அழுகின்ற போதும் மேகம்போல் அழுதவன், நீ!**
**விழுகின்ற போதும் விதையைப் போல் விபந்தவன், நீ!**

என்று வாசித்த வரிகளால் கலைஞர் மிகவும் ஈர்க்கப்பட்டார். எனவே, அன்று கலைஞரின் இதயத்தில் கவிக்கோ ஒரு விதையைப் போல் விழுந்துவிட்டார். அந்த விதை அவரின் இதயத் தில் வேரூன்றிய விருட்சமாகப் பின்னாளில் வளர்ந்ததால் தான் ‘கலைஞரின் ஆஸ்தானக் கவிஞர்’ என்ற நிலையை கவிக்கோ பெற்றுவிட் டார். ஆம்! கவிக்கோ பங்கேற்காமல் கலைஞரின் தலைமையில் எந்தக் கவியரங்கமும் நிகழ்ந்த தில்லை. இத்தகைய கவியரங்குகள் அனைத்தி லுமே கவிக்கோவின் கவிதைக்குத்தான் ஆவல் அலைமோதும் ஆனந்த ஆரவாரம் அதிகமாகக் கிடைத்தது.

எனவேதான், 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் மும்பையில் உள்ள பாரதி கலை மன்றத் தில் ‘பாரதிதாசன்’ என்ற பொதுத் தலைப்பில் ஒரு கவியரங்கம் கலைஞர் தலைமையில் நடை பெற்றபோது, அதில் கவிக்கோ பற்றி கலைஞர் குறிப்பிட்டதாவது

**“இவர் ஒரு, வானம்பாடி;**
**இருக்குமிடம், வாணியம்பாடி”**
**பாரதிக்கு தாசன், பாரதிதாசன் எனில்,**
**அந்த தாசர்க்குத் தாசர் இவர்.**
**தமிழ் கவிதை தீட்டுவதில்**
**குடமிட்ட தீபம் இவர் – இனிமேல**
**குன்றிவிட்ட தீபம் தான்!**
**புடமிட்ட தங்கம் இவர் – இனிமேல்**
**புகழ் மீட்டும் வீணையிவர்!**

*என்று பாடினார் தொலைநோக்குப் பார்வையில் அமைந்த கலைஞரின் இந்தப் புகழாரம் பொய்த்துப் போகவில்லை என்பதை காலம் நிரூபித்து விட்டது.*

*1969 பிப்ரவரி 10 ஆம் நாள் – அண்ணாவின் மறைவுக்குப் பின் முதன் முறையாகக் கலைஞர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதற்குப் பின் கலைஞரின் சீரிய புகழ் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக பொலிவடைந்து கொண்டே யிருந்தது. கலைஞரின் ஆட்சி எல்லாத் துறைகளிலும் வெற்றிக்கு மேல் வெற்றியை குவித்தது. இந்நிலையில் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 2 ஆம் நாள் சேலம் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற கவியரங்கிற்குத் தலைமையேற்ற முதல்வர் கலைஞர், கவிக்கோவை கவிதை பாட அழைத்தபோது*

**"விஜயன் வில்லிலே விளையாடுவதில் வீரன்"**
**என்பார். இவரோ –**
**சொல்லிலே விளையாடும் தமிழ் வீரர்!**
**வெற்றி பல கண்டு நான், விருது பெற வரும் போது**
**வெகுமானம் என்ன வேண்டும்**
**எனக் கேட்டால் – அப்துல்**
**ரகுமானைத் தருக என்பேன்!**

*என்று குறிப்பிட்டார் கலைஞரின் இநதப் புகழாரம் கவிக்கோவின் வரலாற்றில் ஒரு கல்வெட்டாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பின் கவிக்கோவின் புகழ் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவியதை சொல்லவும் வேண்டுமா? கவிக்கோவின் 'விதை போல் விழுந்தவன்' என்ற நூலுக்கு கலைஞர் வழங்கிய அணிந்துரையை – "கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களை அறியாத தமிழர்கள் இருக்க முடியாது" என்றவைரவரியால்தான்தொடங்கிஇருக்கிறார்.*

*இவ்வாறு தாய்மொழியாம் தமிழின் பொதுத் தளத்தில் புகழ் பெற்று வந்த கவிக்கோவின் கவி ஆற்றலை அவர் சார்ந்த சமுதாய மக்களுக்கும் புரிய வைக்க வேண்டும் என்ற எண்ணம் இஸ்லாமிய இலக்கிய கழகத்திற்கு ஏற்பட்டது. இதுவரை எட்டு அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் நடத்திய இஸ்லாமிய இலக்கியக் கழகம், தன்னுடைய மூன்றாவது மாநாட்டை செந்தமிழ் நாட்டின் சின்ன மக்கா என்று போற்றப்படும் காயல்பட்டினத்தில் 1978 நவம்பர் 14 ஆம் நாள் அன்று நடத்தியது. அம்மாநாட்டுக் கவியரங்கிற்க தலைமை ஏற்க கவிக்கோவை வேண்டினர். "நெஞ்சில் நிலைத்த நிகழ்ச்சி – தாயிப் நகரில் தாஹா நபிகள்" எனும் ஒரே தலைப்பில் அமைந்த இந்தக் கவியரங்கில் பதினைந்துக்கும் மேற்பட்ட கவிஞர்கள் பங்கேற்றனர். இறையருள் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்கள் தொடக்கக் கவிதையும், கலைமாமணி கவி கா.மு.ஷரீப் அவர்கள் வாழ்த்துக் கவிதையும் வாசித்த பின், கவிக்கோ தன் தலைமைக் கவிதையைப் படித்தார். தலைமைக் கவிதைமுற்பகுதி. இறைவணக்கம், தலப்புராணம் (கவியரங்கம் நடக்கம் ஊரை வர்ணித்தல்), நபி புகழ் என்ற அமைப்பில் இருந்தது. இந்தக் கவியரங்கில் கவிக்கோ அவர்கள் பெருமானாரைக் குறித்து புகழ்ந்துரைத்த ஒவ்வொரு வரியும் ஆரவார வரவேற்பைப் பெற்றது. இதோ அந்தக கவிதையிலிருந்து சில வரிகள்...*

**நபிகள் பெருமான் –**
**இளமையில் பெற்றோரை**
**இழந்த அனாதை தான். ஆனால்**
**உலகுக்கே தாயாகி**
**ஊட்டி வளர்த்தவர்.**

**படிக்கப் பயிலாத – இந்தப்**
**பண்பு நபியிடம் தான்**
**பள்ளிக் கூடங்களும்**
**பாடம் பயின்றன!**
**இல்லை**
**பல்கலைக்கழகங்களே!**
**பாடம் பயின்றன!**

**கந்தல் அணிந்த – இந்தக்**
**கருணை நபி கையால் தான்**
**அம்மண உலகம் –**
**ஆடையைப பெற்றது**

**பாலையில் முளைத்த – இந்த**
**பச்சை மர நிழலில்**
**வெயிலும் கூட**
**இளைப்பாற வந்தது!**

இந்த ஏழையை
ஈன்ற பிறகு தான்
கிடைக்காத புதையல்
கிடைத்தது போன்று
இந்த உலகம்
இறுமாப்பு அடைந்தது

மண்ணில் – இந்த
மணி விளக்கைக்
கண்ட பின் அல்லவா
விண்ணும் தன் சுடர்களுக்காக
வெட்கம் கொண்டது!

மறையெனும் மகுடியினால் – இவர்
ஊதக் கேட்டவுடன்
நாகத்தின் பற்களிலும்
நல்லமுதம் கரந்தது!

*இத்தகைய கவிதை வரிகளால் தலைமைக் கவிதையின்தொடக்கத்தைகவிக்கோபாடிமுடித் தவுடன் அரங்கில் பங்கேற்ற மற்ற கவிஞர்கள் அவரவர் கவிதையை படித்தனர். தாயிப் நகர வாசிகள் அண்ணலாரை கல்லால் அடித்ததை கடும் சீற்றத்துடன் கண்டித்து அவர்கள் மீது சொல்லால் அடிக்கும் வடிவிலேயே அனை வரின் கவிதையும் அமைந்திருந்தது. கவியரங்க இறுதியில் கவிக்கோ தன் தலைமைக் கவிதையின் பிற்பகுதியைப் படித்தார். அப்போது அரங்கமே வரிக்கு வரி கரவொலி எழுப்பி கலகலப்பானது. "ஆஹா சபாஷ்!!" என்பன போன்ற மகிழ்ச்சிக் குரல்கள் அரங்கில் ஒலித்தன இதோ அந்தக் கவிதையின் ஒருப்பகுதி.*

தாயிப் வாசிகளே!
விந்தை மனிதர் நீர்!
கல்லின் மீது தான் பூவைத் தூவுவீர்!
ஆனால் அன்று – ஒரு
பூவின் மீதல்லவா
கல்லை சொரிந்தீர்!

வெல்வதாக நினைத்து
கல்லெறிந்தீர்கள் – ஆனால்
தோற்றவர் நீங்களே!
நீங்கள் வணங்கும் கற்களை அல்லவா!
கருணை நபிக் காலடியில்
மண்டியிட வைத்தீர்கள்!

தாயிப் வாசிகளே!
களிமரம் என்பதால்
கல்லெறிந்தீரோ
கல்லடி பட்டால்
கனி மட்டுமா உதிரும்
காய் கூட உதிருமே!
ஆனால் கல்லடிக்கு
கனி மட்டுமா உதிர்த்த
கருணை மரத்தை
எங்கேனும் கண்டதுண்டா?

எங்கள் பெருமான்
காயம் பட்டதோ அன்று
அதன் இரத்தமோ
இன்றும் வழிகிறது!
எங்கள் எழுதுகோல் வழியே!

*இவ்வாறு கவிக்கோ தன் தலைமைக் கவிதையின் முடிவைப் படித்து அரங்கத்தை மகிழ்ச்சி ஆரவரத்தால் அதிர வைத்தபோது, முன் வரிசையில் அமர்ந்திருந்தவர்களில் – இந்தியன் யூனியன் முஸ்லிம் லீகின் மாநிலத் தலைவர் சிராஜுல் மில்லத், ஏ.கே.ஏ.அப்துஸ் ஸமது சாகிப் அவர்கள், சொல்லின் செல்வர் ரவண சமுத்திரம் எம்.எம். பீர் முஹம்மது சாகிப் அவர்கள், சிலேடைக் கவிஞர் சிராஜ் அப்துல் ஹை சாகிப் அவர்கள், கவிமாமணி தி.மு.அப்துல் காதிர் அவர்கள், கவிஞர் நாஞ்சில் ஆரிது போன்றவர்கள் முக்கியமானவர்கள் ஆவர். அப்போது 'அரபி மொழியிலுள்ள நபிபுகழ் கவிதைகளை தமிழில் மொழிப் பெயர்த்து தமிழர்களுக்கு தருகிறோம். இனி இதுபோன்ற நபிபுகழ் தமிழ்க் கவிதைகளை அரபியில் மொழிப் பெயர்த்து அரபிகளுக்குத் தர வேண்டும்" என்று சிராஜுல் மில்லத் அவர்கள் குறிப்பிட்ட ஒரு சொல் மறக்க முடியாத மணி வாசகமாகும்.*

*ஏற்கெனவே இறையருள் கவிமணி*

பேராசிரியர் கா. அப்துல் கபூர் சாகிப் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நான்கு கவியரங்குகளில் பங்கேற்று, கவியரங்கத் தொடர்பு கொண்டிருந்த யான் இந்தக் கவியரங்கத்தின் பார்வையாளர்களில் ஒருவனாக முன் வரிசையில் அமர்ந்திருந்தேன். முதன் முதலாக அன்று தான் கவிக்கோவை பார்க்கவும், அவரின் கவிதையை நேரில் கேட்கவும் பெரு வாய்ப்பு பெற்றிருந்தேன். மரபுக் கவிதைகளையே இறையருள் கவிமணி தலைமையில் நடைபெற்ற கவியரங்குகளில் கேட்டும், படித்தும் பழகிய எனக்கு இந்தப் புதுக் கவிதை தன்னுள் அடக்கிய பொலிவான பொருள் வளம் என்னை புளகாங்கிதம் அடைய வைத்தது. எனவே, கவிக்கோ மீது என் உள்ளத்தில் இனம் புரியாத ஒரு காதல் அக்கணமே ஏற்பட்டது. என்றைக்காவது ஒருநாள் இவரை நேரில் சந்தித்து அளவளாவி நெஞ்சம் மகா வேண்டும். இவர் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் பங்கேற்க வேண்டும்" என்று என் மனத்துக்குள் பேராவல் அலை மோதியது.

இந்நிலையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சொல்லின் செல்வர் ரவண சமுத்திரம் எம்.எம். பீர் முஹம்மது சாகிப் அவர்கள் கவிக்கோவை ஒரு நிகழ்ச்சியில் சந்தித்த போது, என்னைக் குறித்து எடுத்துக் கூறியிருக்கிறார். அதன் விளைவாக **1979** ஏப்ரல் **21** ஆம் நாள் கவிக்கோ தலைமையில் கோவை இஸ்லாமிய பண்பாட்டுக் கழகம் நடத்திய கவியரங்கில் – ஐந்து கவிஞர்களில் ஒருவனாக – யான் கவிதை வாசிக்க அழைப்பு விடுக்கப்பட்டேன். "ஐந்து வண்ணம்" எனும் பொதுத் தலைப்பில் எனக்கு வழங்கப்பட்ட பொருள் தொழுகையாகும். எனக்கு முன் கலிமா எனும் பொருளில் கவிதை வாசித்த கவிஞர் சற்று அதிகமாக நேரம் கவிதை வாசித்தார்.

எனவே, என்னைக் கவிக்கோ அழைக்கும் போது "ஆக கவி. மதுர கவி, சித்திர கவி, வித்தாரக் கவி என்றெல்லாம் கூறப்படுவதுண்டு இங்கே ஆலிம் கவிஞர் வருகிறார். ஆலிம் கவிஞரே வருக! எங்களுக்கு தொழுகை நடத்தித் தருக! ஆனால் தராவீஹ் தொழுகை தற்போது வேண்டாம்!" என்று குறிப்பிட்ட வரிகள் கவியரங்க மண்டபத்தை பலத்த சிரிப்பொலியால் கலகலப் பாக்கியது. அதாவது, முந்தின கவிஞரைப் போல் உரிய நேரத்தை நீட்டாமல் சுருக்கி கவிதை தருக என்பதை தனக்கே உரிய உத்தியில் கவிக்கோ குறிப்பிட்ட பாங்கு இன்றும் என் உள்ளத்தில் இன்பத் தேனாக இனிக்கிறது. அன்று தொடங்கிய எங்களின் நல்லுறவு அவரின் வாழ்வின் இறுதி வரை தொடர்ந்தது. அவர் தலைமையில் நிகழ்ந்த இஸ்லாமியக் கவியரங்குகள் மிகப் பெரும்பாலானவற்றிலும் யான் பங்கேற்க அழைப்பு விடுக்கப் பட்டிருந்தேன். என்னை அவர், "என் ஆஸ்தான ஆலிம்" என்றும், "மிம்பரில் ஏறும் ஒரு கம்பர்" என்றும் கவியரங்கில் குறிப்பிட்ட வரிகள் காலத்தால் அழியாத கல்வெட்டாக என் இதயத்தில் பதிந்துள்ளது.

"இஸ்லாமிய தமிழிலக்கியங்கள் எனும் பெயரில் கவிக்கோவால் தொகுக்கப்பட்ட ஒரு நூல், **1980** இல் கீழக்கரையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்டது. அந்நூலில் இடம்பெற்ற **890**க்கு மேற்பட்ட கவிஞர்கள் மற்றும் புலவர்களின் பட்டியலில் என்னையும் ஒருவராக கவிக்கோ இடம்பெறச் செய்தது என்னால் மறக்க வியலாதது. அந்நூல் வெளிவந்த போது அதில் இடம்பெற்ற கவிஞர்களில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் இறையருள் கவிமணி கா. அப்துல் கபூர், கலைமாமணி கவி க.மு.ஷரீப் மற்றும் யான் ஆகிய மூவர் மட்டும் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

முத்தமிழ் கலைஞரும், முத்தொளிர் கவிக்கோவும் எனும் பெயரில் இறையருளால் யான் எழுதவிருக்கும் நூலின் சுருக்கம் தான் இந்தக் கட்டுரை ஆகும். எல்லாம் வல்ல இறைவன் நம்மை விட்டு மறைந்த கவிக்கோவின் மண்ணறையை ஒளிவாக்கி மறுமையினை மகிழ்வாக்கி அவர் ஆற்றிய சன்மார்க்க மற்றும் சமுதாயப் பணிகளுக்கு தக்க கைமாறை வழங்குவானாக! சூஃபித்துவ சிந்தனையில் மூழ்கி தன் வாழ்வின் இறுதி காலத்தில் பேரின்பம் கண்ட கவிக்கோவை சூஃபி நாதர்களுடன் எல்லாம் வல்ல இறைவன் சேர்த்தருள்வானாகா!



# நானும் இந்துதான்

- இராமச்சந்திர அலூரி

நுழையுமுன்...

கேரளத்தில் இந்துத்துவ சக்திகள் மண்ணைக் கவ்விக்கொண்டே இருக்கின்றன. அதற்கான காரணம், அங்குள்ள மக்களிடம் நிலவும் சிந்தனைப் போக்கு. அதனை அப்பட்ட மாக வெளிப்படுத்துகின்றது இந்தப் பிரகடனம்.

படியுங்கள், பரப்புங்கள்

*இராமச்சந்திர அலூரி நமது பக்கத்து மாநிலமாம் கேரளாவைச் சார்ந்தவர். மிகவும் பிரபல்யமான பத்திரிகையாளர். "மாத்ருபூமி" என்ற தினசரி பத்திரிகையின் இணை ஆசிரியர். கேரளாவின் இலக்கிய வட்டாரத்தில் கீர்த்திமிக்க ஆளுமை!*

*இவர் அண்மையில் பாசிஸ்ட்டுகள் அதாவது இந்துத்துவவாதிகளைப் பீதிவயப்படுத்தினார், தான் வெளியிட்ட அறிக்கையின் வழி! அந்த அறிக்கையை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.*

## இராமச்சந்திர அலூரியின் பிரகடனம்!

*நான் வெளியிடும் இந்த அறிக்கையை ஒவ்வொரு இந்துவும் ஆழ்ந்து படித்திட வேண்டும். இதை ஜீரணிக்க வேண்டும். பரப்பிட வேண்டும்.*

*இப்போது ஒன்றிய அரசில் வீற்றிருக்கும் அடிப்படைவாதிகள் இதை நிச்சயமாகத் தெரிந்திட வேண்டும், புரிந்திட வேண்டும். மலையாளிகளான நாங்கள் அகண்ட பாரதம் என்பதையோ, வட நாட்டில் நீங்கள் நம்பும் கண் மூடித்தனமான கட்டுக்கதைகளையோ நம்புவதில்லை. அதனால்தான் நாங்கள் உங்களை எதிர்க்கின்றோம்.*

> "எங்களுக்கு முக்கியமான திருநாள்கள் 'திருவோணம், விசுவும்'தான். அல்லாமல் தீபாவளியோ, நவராத்திரியோ அல்ல. நாங்கள் "ஹோலி, பாய் டூஜ், கர்வாசவ்த்", ஆகியவற்றை கொண்டாடுவதில்லை. கிருஸ்துமஸ்சும் ஈத்வும் எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்குப் பகுதிகள்.

*கேரளாவில் இந்துக்களாகிய நாங்கள் பசுவை தாய் என வணங்குவதில்லை. எங்களுடைய சிவன் கோயில்களில் நாங்கள் நட்சத்திரங்களாக, மாடுகளை வைத்திருப்போம். எங்களுக்கு ஐய்யப்பன் கோயிலும், குருவாயூர் கோயிலும் உங்களுடைய ஹரித்துவாரை விடவும், அயோத்தியாவையும் விடவும் மிகவும், முக்கியமானவை.*

*எங்களுக்கு முக்கியமான திருநாள்கள் 'திருவோணம், விசுவும்'தான். அல்லாமல் தீபாவளியோ, நவராத்திரியோ அல்ல. நாங்கள்*

> "இந்தச் சதி டெல்லியில் உருவானது, இந்து சேனாக்களால் செயலில் கொண்டு வரப்பட்டது. கேரளாவில் உங்களை எதிர்ப்பவர்களை காயப்படுத்திட வேண்டும் என்பதே இந்தச் சதியின் நோக்கம். மலையாளம் எங்கள் தாய்மொழி. ஆகவே நாங்கள் மலையாளிகள்

**❝ இந்தியோ, இந்துத்துவாவோ, எங்களுக்கு எந்த விதத்திலேயும் ஏற்புடையதல்ல. இஸ்லாமும், கிருஸ்தவமும், எங்கள் பூமியில் அமைதியாகவே வளர்ந்தன. இந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள், நமது பன்முகத்தன்மைக் கொண்ட கலாச்சாரத்தின் ஒளிவிடும் பகுதியின் சொந்தக்காரர்கள்**

"ஹோலி, பாய் டூஜ், கர்வாசவ்த்", ஆகியவற்றை கொண்டாடுவதில்லை. கிருஸ்துமஸ்சும் ஈத்வும் எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்குப் பகுதிகள்.

முனைப்பான மத உணர்வுள்ள கேரள இந்துக்கள் 'சைவ' உணவுகளையே உண்கிறார்கள். இன்னும் சிலர் சைவத்தை தங்கள் உணவு பழக்கமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்கள். எங்களில் அதிகமானோர் மாட்டிறைச்சி, கோழிக்கறி, ஆட்டுக்கறி, வாத்துக்கறி போன்றவற்றை உண்ணுகின்றோம். மீன் கறி எங்கள் சமையல் கலையின் ஒருபகுதி.

வட இந்தியாவில் சிலர் பசுவை வணங்குகின்றார்கள் என்பதற்காக, எங்கள் உணவிலிருந்து மாட்டுக் கறியை விட்டு விடுவோம் என எதிர்பார்க்காதீர்கள். எருமை கறியை இந்தியாவில் எங்கேயும் இதுவரை தடை செய்யவில்லை. இவற்றிற்கெல்லாம் தடைகளை இங்கே கொண்டு வருவது ஒரு சதி.

இந்தச் சதி டெல்லியில் உருவானது, இந்து சேனாக்களால் செயலில் கொண்டு வரப்பட்டது. கேரளாவில் உங்களை எதிர்ப்பவர்களை காயப்படுத்திட வேண்டும் என்பதே இந்தச் சதியின் நோக்கம். மலையாளம் எங்கள் தாய்மொழி. ஆகவே நாங்கள் மலையாளிகள்.

இந்தியோ, இந்துத்துவாவோ, எங்களுக்கு எந்த விதத்திலேயும் ஏற்புடையதல்ல. இஸ்லாமும், கிருஸ்தவமும், எங்கள் பூமியில் அமைதியாகவே வளர்ந்தன. இந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள், நமது பன்முகத்தன்மைக் கொண்ட கலாச்சாரத்தின் ஒளிவிடும் பகுதியின் சொந்தக்காரர்கள்.

கேரளத்தில் நீங்கள் கோயில்களும், ஆலயங்களும், மஸ்ஜித்களும் ஒன்றுக்குப் பக்கத்தில் இன்னொன்று வானளாவ உயர்ந்து வனப்பாகக் காட்சி தருவதைப் பார்க்கலாம். இவை ஆயிரம் வருடங்கள் பழமையானவை.

உங்களுக்கென ஓர் ஒப்பாரி வரலாற்றை உருவாக்கி வைத்திருக்கின்றீர்கள். அவை முகலாயர்கள் வருகை வேறுபல வடக்கில் நடந்த ஆக்கிரமிப்புகள் என்றெல்லாம் நீளுகின்றன. அவற்றை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இந்தியாவின் பழமையும், பெருமையும் புகழுமிக்க மஸ்ஜித் கி.பி. 629–இல் கட்டப்பட்டது. அது இங்கே எங்கள் பூமியில் கொடுங்கையூரில்தான் கம்பீரமாக வீற்றிருக்கின்றது.

நாங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக யூதர்கள், அரபுக்கள், சீனர்கள் இன்னுமுள்ளவடகிழக்கு ஆசிய அரசுகளுடன் வியாபார உறவுகளை வளர்த்துக் கொண்டவர்கள். அதாவது கி.மு. கிருஸ்துவுக்கு முன்பிருந்தே இந்த வியாபார உறவுகளை வளர்ந்து வருகின்றோம். நாங்கள் தாம் டச்சுக்காரர்களை குளச்சல் போரில் வீழ்த்திக் காட்டியவர்கள்.

திருவிதாங்கூரும், கொச்சியும், பிரிட்டீஸ் சாம்ராஜ்யத்தின் அடிமை பகுதிகளாக இருக்கவில்லை. அவை எப்போதும் சுதந்திர பூமிகளாகவே இருந்தன. திருவிதாங்கூருக்கு எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்ட மன்றம் இங்கே திருவனந்தபுரத்தில் அன்றே இருந்தது. அது இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே இருந்தது.

ஆர்.எஸ்.எஸ்.வும், இதர பிற்போக்கு சக்திகளும் ஒன்றை புரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்கள் இந்துத்துவ சதித் திட்டங்களுக்கு உடன்பட மாட்டோம். நாங்கள் இந்தியாவின் யூனியன் என்ற இந்திய ஒன்றிய அரசுடன் தான் இணைந்தோம். அது மத சார்பற்ற ஒரு கூட்டுக் குடியாட்சி. நாங்கள் ஒருபோதும் இந்து ராஷ்ட்டிராவின் ஒரு பகுதியாக இருக்க மாட்டோம்.

நன்றி!

இவண்,<br>
பெருமைமிகு மலையாளி இந்து<br>
இராமச்சந்திர ஹலூரி.

நன்றி : Sabrang India, 7-15, April-2017<br>
தமிழ் வடிவம் : MGM

# குர்ஆனின் வசன அமைப்புகள்



பாகம்–2

*2021 பிப்ரவரி மாதஇதழின் தொடர்ச்சி...*

குர்ஆனின் முன்பின் வசனங்கள் ஒன்றுக் கொன்று தொடர்பற்றவை என்ற மிக நீண்ட கால விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் பல அறிஞர்கள் குர்ஆனின் வசன அமைப்புகளை ஆராய்ச்சி செய்து அதன் தொடர்புகளைவிளக்க முயற்சித்துள்ளனர். அந்த வரிசையில் இக்கட்டுரையும் எழுதப்படுகிறது.

மேலும் வசனங்களின் அமைப்பை விளங்கி கொள்வதன் மூலம், அதன் உள்ளார்ந்த அர்த் தத்தை மென்மேலும் புரிந்து கொள்வதற்கும் இக்கட்டுரை உதவும் என நம்புகிறேன். பொது மைய வளைய அமைப்பே குர்ஆன் முழுமைக்கும் பெரும்பாலும் காணப்படுகிறது. ஆரம்பித்த இடத்திற்கே வந்து வசனங்கள் முடிவதன் மூலம் ஒரு வளையத்தை ஏற்படுத்துகின்றன வசனங்கள். ஆரம்பத்தில் கூறப்பட்ட அதே வார்த்தையை அல்லது வாக்கியத்தை முடிவிலும் மீண்டும் கூறுவதன் மூலம் ஒரு தொடர்பு ஏற்படுத்தப்படு கிறது. அல்லது கருத்து ஒற்றுமை ஆரம்பத்திலும் முடிவிலும் காணப்படுகின்றன. அதாவது வசன அமைப்புகளின் முறை அஆ/இ/ஆ’அ’ , அஆஇ/ ஈ/இ’ஆ’அ’....

சென்ற மாதத்தில் அல்பகரா அத்தியாயத்தின் வசனங்கள் 103 வரை பார்த்தோம்.

## அல் பகரா – D(104-141):

பாகம்-D ஐ மூன்று தொடர்ச்சியான வளைய அமைப்புகளாக பிரிக்கலாம். வேதம் வழங்கப் பட்டவர்களான யூதர்கள், கிறிஸ்தவர்கள் இஸ் லாமிற்கு எதிரான கருத்துக்களை முன் வைத்தனர். அவர்களுக்கு பதில் கூறும் வண்ணம் இதில் உள்ள வசனங்கள் அமைந்துள்ளதால் பாகம்-C உடன் தொடர்பை ஏற்படுத்துகிறது.

## பாகம்-D இன் முதல் வளைய அமைப்பு (104–121)

நம்பிக்கையாளர்களை நோக்கியே இப்பாகத் தின் முதல் வசனம் ஆரம்பிக்கிறது. மூஸா நபியிடம் கேள்வி கேட்கப்பட்டதைப் போன்று நீங்களும் கேட்காதீர்கள் என்ற அறிவுரை. 111 லிருந்து 115 வரை உள்ள வசனங்களில் யூதர் களும் கிறிஸ்தவர்களும் கூறிய கூற்றான ’ஒருவர் யூதராகவோ கிறிஸ்தவராகவோ மாறவில்லை என்றால் சுவனம் புக மாட்டார்கள்’ என்பதற்கான பதில். மேலும் மக்காவில் வாழ்ந்த சிலை வணங் கிகள் க அபாவில் முஸ்லிம்கள் தொழுவதை தடுத்துக் கொண்டிருந்தனர். மறுமையில் அவர் களுக்கு பெரும் வேதனை உண்டு என்று அவர் களையும் சேர்த்து இவ்வசனங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. இப்பாகத்தின் முதல் வளையத்தின் மத்திய பகுதியில் இறைவனுக்கு ஒரு மகன் உண்டு என்ற கிறிஸ்தவர்களின் கூற்றுக்கான பதில். அடுத்ததாக, இதுவரை கூறிவந்த வசனங்களின் தன்மைகளை ஒத்திருக்கும் வசனங்கள் ஆரம்பிக் கின்றன. அதாவது சிலை வணக்கம் புரிபவர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், நம்பிக்கையாளர்கள்.

*--->104–110:* நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரை – இரு பொருள் கொள்ளும் சொல்லை கொண்டு நபியை அழைக்காதீர்கள். மூசா நபியிடம் யூதர்கள் கேள்வி கேட்டதை போன்று நீங்களும் கேட்காதீர்கள். இறை நம்பிக்கையை விட்டு விடாதீர்கள்.

*---->111–113:* யூதர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் சுவனம் புக மாட்டார்கள் என்று யூதர்கள், கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர்.

---->*114-115:* சிலை வணக்கம் புரிபவர்கள் கஅபாவில் தொழுவதை தடுக்கின்றனர்.

------>*116-117:* இறைவனுக்கு ஒரு மகன் உண்டு என்று கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள்.

---->*118-119:* சிலை வணக்கம் புரிபவர்கள் அத்தாட்சியை கேட்கின்றனர். நரகத்துடனேயே தங்களை இணைத்துக் கொண்டு அவர்களைப் பற்றி நீர் வினவப்பட்ட மாட்டீர்.

--->*120:* அவர்களுடைய வழியைப் பின்பற்றாத வரை யூதர்களும் கிறிஸ்தவர்களும் திருப்தியடைய மாட்டார்கள்.

->*121:* யாருக்கு இறைவன் வேதத்தை வழங்கினானோ அவர்கள் அதை முறைப்படி ஓதுகின்றார்கள். அவர்களே நம்பிக்கையாளர்கள்.

## பாகம்-D இன் இரண்டாவது வளைய அமைப்பு (122-133)

இஸ்ராயீலின் சந்ததிகள் பற்றியே இப்பாகத்தின்வசனங்கள் பேசுகின்றன.

இப்ராஹீமும் இஸ்மாயீலும் இறைவனிடம் இப்படி பிரார்த்தித்தார்கள்.' வேத வசனங்களை கற்றுக் கொடுப்பதற்கும், மக்களை தூய்மைப்படுத்திடவும் எங்கள் வழித்தோன்றல்களிருந்தே ஒரு தூதரை அனுப்புவாயாக'. இப்பாகத்தின் மத்தியில் வரும் இந்த வளைய அமைப்பு இப்ராஹிமும் இஸ்மாயிலும் இஸ்ரவேலர்களுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதையும், அவர்களுக்கும் இஸ்லாமிற்கும், மக்காவிற்கும் உள்ள தொடர்பையும் குறிப்பிடுகிறது.

--->*122-123:* இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு அறிவுரை - இறைவன் உங்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை நினைவு கூறுங்கள். தீர்ப்பு நாளை அஞ்சிக் கொள்ளுங்கள்.

----->*124:* இப்ராஹிமிடம் இறைவன் கூறுகிறான்: உண்மை மக்களுக்கு இமாமாக (தலைவராக) ஆக்குகிறேன்.

-------->*125:* கஅபாவை இறைவன் வழிபடக்கூடிய இடமாக ஆக்கினான். அதனை தூய்மையாக வையுங்கள் என்று இப்ராஹிமுக்கும் இஸ்மாயிலுக்கும் கட்டளையிட்டான்.

---------->*126:* மக்காவை அபயமளிக்கும் இடமாகும், நம்பிக்கை கொள்கின்ற மக்களுக்கு வெகுமதிகளை வழங்கவும் இறைவனிடம் பிரார்த்திக்கிறார் இப்ராஹிம்.

-------->*127:* கஅபாவின் அடித்தளங்களை உயர்த்தினர் இப்ராஹீமும் இஸ்மாயிலும்.

----->*128-129:* இறைவனுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து ஞானத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக தூதரை அனுப்புவாயாக என்று இறைவனிடம் கூறுகின்றார் இப்ராஹிம்.

--->*130-133:* கேள்வி- இப்ராஹிம் உடைய வழிமுறையை புறக்கணிப்பவன் மடையனை தவிர வேறு யாராக இருக்க முடியும்? யாக்கூப் (இஸ்ரவேலர்) தன்னுடைய மகன்களிடம் கூறினார், இறைவன் இம்மார்க்கத்தையே உங்களுக்கு தேர்ந்து எடுத்துள்ளான்.

## பாகம்-D இன் மூன்றாவது சிறிய வளைய அமைப்பு (134-141)

யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இப்பாகத்தில் பதில் கூறப்படுகிறது. இதன் மத்தியில் இஸ்லாமிய சமய நம்பிக்கை தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

--->*134:* அவர்கள் (இப்ராஹிம், இஸ்மாயில், இஸ்ஹாக் மற்றும் அவர்களின் சமூகத்தினர்) சம்பாதித்தவற்றின் பலன் அவர்களுக்கு. நீங்கள் சம்பாதித்த வற்றின் பலன் உங்களுக்கு.

---->*135:* வேதம் வழங்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்: யூதர்களாகவோ அல்லது கிறிஸ்தவர்களாகவோ மாறிவிடுங்கள்.

---->*136-138:* சமய நம்பிக்கை: அல்லாஹ்வை நம்புகின்றோம், எங்களுக்கு இறக்கப்பட்ட தையும், அனைத்து நபிமார்களுக்கு இறக்கப்பட்டதையே நம்புகின்றோம். நபிமார்களிடத்தில் எந்த வேறுபாட்டையும் நாங்கள் காட்டுவதில்லை. இறைவனுக்கே கீழ் படுகின்றோம்.

--->*139-140:* யூதர்கள், கிறிஸ்தவர்களை நோக்கி கேள்வி: எங்களின் அதிபதியும் உங்களின் அதிபதியுமான அல்லாஹ்வின் விஷயத்தில் எங்களுடன் நீங்கள் தர்க்கம் புரிகின்றீர்களா? நாம் எல்லோரும் நம்முடைய செயல்களுக்கு பொறுப்பாவோம்.

*--->141:* அவர்கள் (இப்ராஹிம், இஸ்மாயில், இஸ்ஹாக் மற்றும் அவர்களின் சமூகத்தினர்) சம்பாதித்தவற்றின் பலன் அவர்களுக்கு. நீங்கள் சம்பாதித்த வற்றின் பலன் உங்களுக்கு.

இப்பாகத்தின் முதல் வளைய அமைப்பிற்கும் கடைசி வளைய அமைப்பிற்கும் எப்படி தொடர்பு ஏற்படுகிறது என்பதை பார்ப்போம்.

*--->104–121:* .... 'அவர்கள் கூறுகின்றனர்....'; '(நபியே நீங்கள்) கூறுங்கள்....'(பதிலுக்கு)
இறைவனுக்கு ஒரு மகன் உண்டு என்று கிறித்தவர்கள் கூறுகின்றனர்.
யூதர்களும் கிறிஸ்தவர்களும் தர்கிக்கின்றனர்: நீங்கள் எங்களுடைய வழியை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று.

*------>122–133:* இப்ராஹிம், மக்கா/க அபா

*--->134–141:* .... 'அவர்கள் கூறுகின்றனர்....'; '(நபியே நீங்கள்) கூறுங்கள்....' (பதிலுக்கு)
சமய நம்பிக்கை: இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களின் மத்தியில் நாங்கள் எந்த வேறுபாட்டையும் காட்டுவதில்லை. யூதர்களும் கிறிஸ்தவர்களும் தர்கிக்கின்றனர்: நீங்கள் எங்களுடைய வழியை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று.

## பாகம் E (142-152)

இந்த அத்தியாயத்தின் (அல் பகராவின்) மத்தியில் கிப்லாவை பற்றிய வசனத்தைக் காணலாம். ஒட்டுமொத்த குர்ஆனிலும் இந்த இடத்தில் மட்டுமே கிப்லாவை பற்றி பேசப்பட்டுள்ளது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் முன்னோக்கும் திசையான ஜெருசலேமே கிப்லாவாக ஆரம்பத்தில் இருந்தது. இப்பொழுது முஸ்லிம்கள் மக்காவை முன்னோக்கி தொழ வேண்டும். குறிப்பாக கஅபாவை. இப்ராஹீமும் இஸ்மாயீலும் எழுப்பிய வணக்கதலம் இஸ்லாமிய மார்க்கத்தின் ஆன்மீக துருவமாக மாறியது. நபியை யார் பின்பற்றுகிறார்கள் என்பதை இந்த கிப்லா மாற்றம் சோதித்தது. யூதர்கள் கிறிஸ்தவர்களிடத்திலிருந்து முஸ்லிம்களை வேறுபடுத்திற்று.

மேலும், முஸ்லிம்களை நடுநிலையான சமுதாயம் என்று **143** வது வசனம் எடுத்தியம்புகிறது. (இந்தப் பக்கமும் இல்லை, அந்தப் பக்கமும் இல்லை. சரியாக நடுநிலை. வசனம் இடம்பெற்றுள்ள எண்ணும் சரியாக அத்தியாயத்தின் நடுப்பகுதி. (மொத்த வசனங்கள் **286**. இதன் மையம் **286/2=143**)).

***147, 148*** வது வசனங்களில் புதிய கிப்லா பற்றிய வசனம் இறைவனிடமிருந்து வந்ததுதான் என்று வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. இதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்கிறது. அதன்பின்பு, மனிதகுல முழுமைக்குமான செய்தி: ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு திசை இருக்கின்றது. எனவே நன்மை செய்வதில் முந்துங்கள். உலகத்தில் வாழும் அனைத்து சமுதாய மக்களுக்குமான பதில் இது.

*-->142–143:* கிப்லா மாற்றம் தொடர்பாக: நாடியவர்களை இறைவன் நேர்வழியில் செலுத்துகிறான். முஸ்லிம் சமுதாயத்திற்கு செய்தி: தூதர் உங்களுக்கு சாட்சியாக இருக்கிறார்.

*---->144–146:* தூதருக்கு கட்டளை: புனித பள்ளிவாசல் இருக்கும் திசையை நோக்கி உம்முடைய முகத்தை திருப்புவீராக.

*------>147–148:* அறுதியிட்டு கூறுதல்: (கிப்லாவை பற்றிய வசனம்) உம்முடைய இறைவனிடமிருந்து வந்த சத்தியம். எனவே சந்தேகம் கொள்ள வேண்டாம். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு திசை உண்டு. எனவே நன்மை செய்வதில் முந்துங்கள். உங்கள் அனைவரையும் இறைவன் ஒன்று சேர்ப்பான்.

*---->149–150:* தூதருக்கு கட்டளை: புனித பள்ளிவாசல் இருக்கும் திசையை நோக்கி உம்முடைய முகத்தைத் திருப்புவீராக. முஸ்லிம்களுக்கு கட்டளை: உங்களுடைய முகத்தையும் புனித ஆலயத்தை நோக்கி திருப்புங்கள்.

->151–152: முஸ்லிம் சமுதாயத்திற்கு செய்தி: வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்க உங்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பியுள்ளோம்.

**பாகம்** D'(153-177):

--->153–158: நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரை – பொறுமையை கொண்டும் தொழுகையும் கொண்டும் உதவி தேடுங்கள்.துன்பத்தை கொடுத்து இறைவன் சோதிப்பான்.

------>159–160: வழிகாட்டுதலை மறைக்கின்ற யூத கிறிஸ்தவர்கள் சபிக்கப்படுகிறார்கள்

--------->161–173: இறைவனை தவிர மற்றவர்களை வணங்கி நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள், நரக நெருப்பிலேயே கிடப்பார்கள்.

------>174–176: வேதத்தை மறைக்கின்ற யூதர்களும் கிறிஸ்தவர்களும் வேதனையை எதிர்கொள்வார்கள்.

------>177: தொழுகையை நிலைநிறுத்துபவர்களே நற்செயல் புரிபர்கள். அவர்கள் துன்பத்தில் பொறுமையை கடைபிடிப்பார்கள்.

மேலும் இப்பாகத்தின் மத்திய பகுதி வசனங்கள் இணை வசன அமைப்பிற்கு உதாரணமாக அமைகிறது. அதாவது முதல் நான்கு வசனங்கள், கடைசி நான்கு வசனங்கள் இவற்றிக்கு இடையில் வருபவையை எடுத்துக் கொண்டால். இணை அமைப்பின் முறை பின்வருமாறு:

-->165–167: சிலர் தங்களுடைய மூதாதையர்களை பின்பற்றி இறைவனுக்கு நிகராக மற்றவர்களை வணங்குவார்கள். அவர்கள் கடுமையாக தண்டிக்க படுவார்கள்.

---->168–169: கட்டளை: பூமியிலிருந்து அனுமதிக்கப்பட்டதையும் நல்லவற்றையும் புசியுங்கள்.

-->170–171: நம்முடைய தந்தையர்களின் வழிகளையே நாம் பின்பற்றுகிறோம் என்று நிராகரிப்பவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் நேர்வழி பெறாதவர்களாக இருந்தாலுமா?

----->172–173: கட்டளை: இறைவன் வழங்கிய நல்லவற்றையே புசியுங்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்

–அபூஹாசின்

## வி.சி.க. பொருளாளர் யூசுப் ஹாஜியார் - மரணம்



இல்லாலில்லாஹி வா இன்னா இலைஹி ராஜிவூன்

கடந்த 15–5–2021 அன்று அவரை அல்லாஹ் அழைத்துக் கொண்டான். நீண்ட நாள்களாகவே அவர் மருத்துவமனையளில் கொரோனாவுக்கு சிகிச்சைப் பெற்று வந்தார். MSA - Muslim Student Association of India இந்திய முஸ்லிம் மாணவர் அமைப்பு என்ற அகில இந்திய அமைப்பின் தமிழகக் கிளையை நாம் நடத்திக் கொண்டிருந்தோம்.

அப்போதுதான் ஆனந்தூர் ஷேஹ் ஷம்சுதீன் அவர்ளின் தம்பி யூசுப்–ஐ அறிமுகப்படுத்தினார் ஷேஹ் ஷம்சுதீன். அமைப்பின் மாநிலப் பொறுப்பாளர்களில் ஒருவர், நான் குமரி மாவட்டத்தின் பொறுப்பாளர், மாநில அளவில் பொறுப்பாளர்களைச் சந்திக்க வரும் போதெல்லாம் தம்பி முஹம்மத் யூசுப் அவர்களையும் சந்திப்பேன். அவர் எப்போதும் ஷேஹ் ஷம்சுதீன் அவர்களுடன் இருப்பார். அன்று ஏற்பட்ட நட்பு இன்ற ளவும் தொடர்ந்தது. பல நேரங்களில் அவரும் தொடர்புகொள்வார். நானும் பேசுவேன்.

இந்திய முஸ்லிம் மாணவர் அமைப்பு பின்னர் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் என மாறிய போது, ஷேஹ் ஷம்சுதீன் அதிலும் அங்கம் வகித்தார். தம்பி முஹம்மத் யூசுப் அவர்கள், அதில் அங்கம் வகிக்கவில்லை என்றாலும், அதன் ஆதரவாளர்களாக இருந்தார். அதில் தொடங்கி, மனித நீதிபாசறை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இப்படி எல்லாவற்றிற்கும் அவர் புரவலராக இருந்தார்.

இன்றைய விடுதலை சிறுத்தைகள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் என சமுதாய அமைப்பாக இருந்த காலம் தொட்டே அதில் சிறப்பாகப் பணியாற்றி வந்தார். பொருளாதாரம் இறுதி மூச்சுவரை இருந்தவர்.

அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக! சுவர்க்கத்தில் அவருக்கு சிறந்த இடத்தைத் தருவானாக!




# ஔரங்கசீப் ஆட்சியில் துப்பறியும் இலாகாவின் திறமை

ஔரங்கசீப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பலவாறு எழுதினாலும் அவர் தன் வாழ்க்கை எளிமையாக வாழ உழைத்து வாழ்ந்தார் என்பதில் கருத்து மாறுபாடில்லை. அவர் தன் வாழ்க்கையை செம்மையுற நடத்த திருக்குர்ஆன் கைப்பிரதி எழுதியும், தொப்பி செய்வதும், மாறு வேடத்தில் சென்று கூலி வேலை செய்தும் வாழ்ந்தார் என்பதை அன்னார் வரலாறு பறை சாற்றுகிறது. அத்தோடு அவர் ஆட்சியில் குடிமக்கள் நீதியுடனும், பாதுகாப்புடனும் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

இதுபற்றி (Maheshwar Dayal Rediscovering Delhi) எழுதிய புத்தகத்தில் ஔரங்கசீப் ஆட்சி பற்றி குறிப்பிடுகிறார்.

ஆலம்கீர் மக்கள் தன்னிடம் வந்து நீதிக்கு முறையிடும்படி இல்லாமல் நீதி மீறப்பட்டால் உடனே அதுபற்றி அரசு அதிகாரிகள் மூலம் தவறை கண்டறிவர்.

மழை காலத்தில் ஒருநாள் ஆலம்கீர் ஜாரோகா தர்ஷன் என்ற அரசவையில் இருந்து கொண்டு கொந்தளித்துக் கொண்டிருக்கும் யமுனை ஆற்றின் நீர் பெருக்கினை பார்த்த வண்ணம் இருந்தார். அப்பொழுது ஒரு பெரிய மண் ஜாடி மேலே போவதும் கீழே வருவதுமான காட்சியைப் பார்த்து தலை சிறந்த நீச்சல்காரர்களை வரவழைத்து ஜாடியை நீரிலிருந்து எடுக்க ஆணையிட்டார்.



**ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்**

ஆலம்கீர் முன்னிலையில் ஜாடி திறந்து பார்த்த போது ஒரு முழு மனிதன் உடல் கழுத்து நெரிக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. வேறு ஆட்சியானால் மரண மடைந்த உடல் புதைக்கப்பட்டு ஜாடி உடைத்தெரியப் பட்டிருக்கும். ஆனால், நீதியின் உறைவிடம் ஆலம்கீர் பாதுஷா தன் அரசின் துப்பு அறியும் இலாகாவிடம் இக்கொலை குற்றம் யார் செய்தார்களென்பதை கண்டறிய ஆணைப் பிறப்பித்தார்கள்.

மன்னர் மனப்பாங்கை அறிந்த துப்பறியும் இலாகாவினர் மன்னர் இந்த கொலை குற்ற வழிகளை கண்டறியாமல் விட மாட்டார் என்பதை அறிந்து கொலைக்குரிய குற்றவாளிகளைக் கண்டறிவதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

மண் ஜாடியை வைத்து தலிவாரா என்னும் பகுதியில் ஜாடி செய்யும் குயவரைப் போய் பார்த்து இதுபற்றி விசாரித்தனர். அவர் இம்மாதிரி ஏழு ஜாடி செய்ததாகவும், இந்த ஏழு ஜாடிகளும் யார் யாருக்கு விற்றேன் என்றும் விபரத்தைச் சொன்னார். இதை வைத்து விசாரித்ததில் சாந்தினி சவுக்கில் உணவு விடுதி வைத்திருப்பவர் வாங்கிய விபரமே அறிய வந்தது.

உணவு விடுதி நடத்துபவரிடம் விசாரித்ததில் நானும் என் மகனும் அம்மனிதனின் உடலை மண் ஜாடியில் வைத்து யமுனையில் போட்டதாகவும் நாங்கள் இருவரும் கொலை செய்ய

வில்லை என்ற விபரத்தைச் சொன்னார்கள்.

தவறிழைத்தோரை எவ்வாறு ஆலம்கீர் பாதுஷா தண்டிக்காமல் விடமாட்டாரோ அதே போன்று தவறிழைக்காதவரை தண்டிப்பதை மன்னர் விரும்ப மாட்டார் என்பதை அரசு துப்பறியும் இலாகாவிற்கு நன்கு தெரியும். கொலை குற்றத்திற்கு கைது செய்த தந்தையையும் மகனையும் விடுதலை செய்து உண்மைக் குற்ற வாளிகளை கண்டறிய முனைந்தனர்.

அவர்களில் இருவர் தான் கொலை செய்தார்களென்பதை துப்பறியும் அதிகாரிகள் அவர்களோடு நட்புடன் பேசி கண்டுபிடித்தனர். இரு குற்றவாளிகளும் மன்னர் ஔரங்கசீப் முன் கொண்டு நிறுத்தப்பட்டு தக்க தண்டனை நிறை வேற்றப்பட்டார்கள்.

நவீன இக்காலத்தில் எத்தனையோ வழக்குகள் துப்பு துலங்காமல் போவது வழமையானது. ஆனால், அக்கால மன்னர்கள் நாட்டு மக்களின்



தந்தை ஓரிரவு வழிப்போக்கர் ஒருவன் இங்கு வந்து கடை அடைந்த பின் கதவினை தட்டி உணவு தர வேண்டினார். நான் கதவினை திறந்து மகனிடம் இவருக்கு உணவு சமைத்து கொடுக்க ஏற்பாடு செய்தேன் என்றார்.


மகன் சொன்னார் நான் வழிப்போக்கனுக்கு உணவு சமைத்து பரிமாறும் போது இருவர் கடையில் வந்து இங்கு வந்தவர் எங்கே எனக் கேட்டு கடை உள்ளே வந்து அவரிடமிருந்த பணங்களை பிடுங்கிக் கழுத்தை நெரித்து கொலை செய்து போட்டு விட்டுச் சென்றார்கள் என்றார்.

தந்தைக்கு மகன் வாக்கு மூலங்களை கேட்டறிந்து துப்பு அறியும் அதிகாரிகள் மேலும் இவ்வழக்கு பற்றி அறிய முயற்சித்து காசிக்கு பக்கத்தில் ஒரு காட்டில் நீண்ட அங்கி அணிந்த ஒட்டகம் ஒட்டி எழுவரை அணுகி விசாரித்தனர்.

உயிருக்கும் உடலுக்கும் போதிய பாதுகாப்பான ஆட்சி நல்கினர் என்பதை வரலாற்றில் பார்க்கும் பொழுது அவர்கள் ஆட்சியில் நீதி எவ்வாறு பாதுகாக்கப்பட்ட தென்பது நனி விளங்கும் மன் னர்கள் துப்பறியும் இலாகா மெச்ச வேண்டியதே.

ஔரங்கசீப் இமயம் முதல் குமரி வரை இன்றைய பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மாவை ஒட்டிய சில பகுதிகள் அவர் ஆட்சிக்கு உட் பட்டே இருந்தது என்பது வரலாறு சொல்கிறது. நவீன கண்டுபிடிப்பு இல்லாத அக்காலத்தில் ஒருபெரும் நிலம் பகுதியை ஆண்ட நீதியான அரசரென்றால் அது மிகையாகாது.

**இதற்கு முக்கியக் காரணம் அவரின் எளிமையும் நீதியும் நாட்டு நலனும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிவான கருத்தாகும். இதற்கு மேலாக நம் மார்க்கப்படி அவர் தக்வாதாரி என்பதாகும்.**




# 2 வது சிலுவைப்போருக்கு நாங்கள் கண்டுபிடித்த காரணங்கள்..?

இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை உண்டாக்கும். இந்த இரண்டாவது அலைக்கு நாங்கள், இஸ்லாமோ ஃபோபியோ யூனிவர்ஸ் "Islamophobia Universe" உலகம் தழுவிய இஸ்லாமோ ஃபோபியா எனப் பெயர் வைத்தோம்.

அதில் ''இந்த மொத்த உலகையும் இஸ்லாம் கைவசப்படுத்திடும் பேராபத்து ஒன்று காத்திருக்கின்றது. அதற்காக பல்வேறு இயக்கங்களும் அமைப்புகளும் உலகமெங்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அல்காயிதா, மட்டுந்தான் உலகை ஆட்கொள்ள, உலகை இஸ்லாமிய மயமாக்கிட வந்த இயக்கம் என்றில்லை ; எகிப்தைச் சார்ந்த அல்இஹ்வான் அல் முஸ்லிமீன் என்ற இயக்கமும், இதற்காகத் தொடங்கப் பெற்றதே. இந்த இயக்கம் உலகெங்கும் பல்வேறு பெயர்களில் தொடங்கப்பெற்று பணியாற்றி வருகின்றது. முஸ்லிம் சகோதரத்துவம் என்ற இந்த அல்இஹ்வான் அல்முஸ்லிமீன் இயக்கத்தின் இப்போதைய நோக்கம்.

மேலை நாட்டு சமுதாயக் கட்டமைப்பிற்குள் ஊடுருவி இஸ்லாமியக் கலாச்சாரத்திற்குள் அவர்களைக் கொண்டு வருவதாகும்.

இவர்களின் (இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தின்) பணிகள் உலகில், அங்கிங்கொனாதபடி எங்கும் வியாபித்து நிற்கின்றது.

இத்தோடு சவூதி அரேபியா தன்னுடைய

## அன்பார்ந்த வாசகர்களே!

சென்ற 2021 ஏப்ரல் இதழில், ஜான் பெஃபர் நாங்கள் அதாவது, அமெரிக்காவின் தலைமையின் கீழ் முஸ்லிம்கள் மேல் நடத்திவரும் இப்போதைய தாக்குதல்கள்தாம் சிலுவைப்போர் 2.0

முதல் சிலுவைப் போரை நடத்திட நாங்கள் பல்வேறு பொய்களைச் சொல்லித்தான் கிருஸ்தவ உலகை உசுப்பி விட்டோம். அந்தப் பொய்களின் வழி ஒவ்வொரு கிருஸ்தவரும் முஸ்லிம்கள் மேல் ஓர் இனம் புரியாத வெறுப்பை வளர்த்துக் கொண்டார்கள். ஒரு கொலை வெறியையும் வளர்த்துக் கொண்டார்கள்.

அதேபோல் சிலுவைப் போர் 2.0வுக்காகவும் நாங்கள் பல்வேறு பொய்களையும் புனைந்துரைகளையும் உலக மக்களிடம் பரப்பினோம். இதற்காக இடைவிடாமல் முயற்சிகளை செய்து வந்தோம்.

இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் நாம் செய்து வரும் இந்த வெறுப்புப் பிரச்சாரம் முதலில் ஒரு குடிசைத் தொழிலாகத்தான் தொடங்கியது. (அதாவது முதலில் குறுகிய வட்டத்திற்குள்தான் தொடங்கியது) பின்னர் அதுபல பெரிய தொழிற்சாலைகளாக வளர்ந்துள்ளது என்கின்றார் ரம்ஸ் பரோடி.

அதாவது பல பெரிய நிறுவனங்கள் பயங்கர பண பலத்தோடும், பிரச்சாரப் பலத்தோடும் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை சதா சர்வ காலமும் வளர்த்துக் கொண்டே இருக்கின்றன.

இதுபற்றிய தகவல்கள் பலவற்றை இதே தலைப்பில் முந்தைய தொடர்களில் நாம் தந்திருக்கின்றோம். - வாசர்கள் அதை நினைவு கூறவும், இன்னும் ஜான் பெஃபர் சொல்வதைக் கேட்போம்....

அதாவது புது சிலுவைப்போரை (2.0)த் தொடங்குவதற்கு சொன்ன பொய்களை, வெறுப்புப் பிரச்சாரத்தைச் சொல்கின்றார் படிப்போம்...

வகாபிஇசத்தைப் பரப்பிடுவதற்காக ஆயிரக் கணக்கான பெட்ரோல் டாலர்களைச் செலவு செய்து கொண்டிருக்கின்றது. இந்த வகாபிக இசம்தான் 18ஆம் நூற்றாண்டுகளில் இதர மதத்தைச் சகித்துக்கொள்ளாது என அறியப் பட்டது. அது செய்த அலம்பல்கள் ஆயிரமா யிரம். அது முற்றிலும் சகிப்புத் தன்மையற்ற ஓர் இஸ்லாமியப் பிரிவு.

ஆனால் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த "வகாபி இசம்" நமது மேலை நாட்டு கலாச்சாரத்தோடு மோதுவதைவிட, தன் சொந்த கலாச்சாரத்தோடுதான் (இஸ்லாமியக் கலாச்சாரத்தோடும்) அதிகமாக மோதியது. இந்த மோதலை நாங்கள் (இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்கள்) ஒன்றிலேவளர்த்தோம். அல்லது ஒதுங்கி நின்று பார்ப்பவர்களாக இருந்தோம். கிடையே நடக்கும் இந்தப் போர்) முஸ்லிம் களின் மனங்களை வென்றிட நடக்கும் போர். அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத் தின் மேல் நடக்கும். போரைவிட இந்தப் போர் வெற்றிகரமானது. அமெரிக்காவின் தலைமை யின்கீழ் இஸ்லாத்தின் மேல் தொடுக்கும் போர் பல நேரங்களில் அல்லது பெரும்பாலான நேரங்களில், தோற்று விடுகின்றது.

இந்தப் போர் அதாவது, முஸ்லிம்களுக் கிடையே நடக்கும் போர் நிரந்தரமானது. தொடர்ந்து முஸ்லிம் சமுதாயத்தைக் கொந்த ளிப்புகளுக்குள் தள்ளிவிடும் போர். இதனை வெளிநாட்டு விவகாரங்களை விவாதிக்கும் வில்லியம் பிளாப் என்பவர் தனது ஆய்வுகளின் வழி முடிவு செய்கின்றார்.




இந்தக் கூற்றை "டேனியல் பைப்ஸ்" அவர்களும் "ரிளா அஸ்லன்" அவர்களும் ஒத்துக்கொள் கின்றார்கள். (ஆதாரம் : Daniel Pipes Rela Aslan - Page-68)

சுன்னத்துல் ஜமாஅத்−ஐ சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு வகாபிகள் தரும் விளக்கத்தை எதிர்க்கின்றார்கள். அதேபோல், அல்காயிதா இஸ்லாத்திற்கு தரும் விளக்கத்தையும் சுன்னி வகாபிகள் (சுன்னத்துல் ஜமாஅத்தைச் சார்ந்த வர்கள்) எதிர்க்கின்றார்கள். அதேபோல் இந்த சுன்னி வகாபிகள் ஷியாக்களையும் எதிர்க்கின் றார்கள். அதேபோல் அவர்கள் இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் எதிர்க்கின்றார்கள். இந்த போர் (முஸ்லிம்களுக்

அவர் கூறுகின்றார் :

''இஸ்லாமிய இயக்கங்களின் நோக்கம் இஸ்லாத்தில் விரவி விட்ட இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் களைந்து இஸ்லாத் தைத் தூய்மைப்படுத்துவது. அத்தோடு முஸ்லிம் களிடம் படிந்துவிட்ட மேலை நாட்டுத் தாக்கங் களை அப்புறப்படுத்துவது அல்லாமல் மேலை நாடுகளை வெற்றிகொள்வது அல்ல" − **69.**

ஆனால், நாம் இஸ்லாமோஃபோபியாவை வளர்ப்பவர்கள் இஸ்லாம் எந்த நிலையிலும் தலையெடுத்து விடக்கூடாது என்றே விரும்பு கின்றோம். அந்த இலக்கில் எண்ணிலடங்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்..



# முஸ்லிம்களுக்கு உதவியதால் அச்சத்தில் இந்துக்கள்

இந்த நாட்டை எந்தளவுக்கு இவர்கள் கொடூரமானதாக மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு இந்த சம்பவங்கள் தான் சாட்சி. உண்மையில் நீங்கள் மனிதராக இருந்தால் இந்த நிலைக்கு வெட்கப்பட வேண்டும்.

எப்போதும் ஒருவர் இன்னொருவரின் உயிரை பாதுகாத்திருந்தால் அதனை வெளியில் சொல்வதில் பெருமிதம் இருக்கு. அவருக்கு புகழ்ச்சி கிடைக்கும். இவரால் ஒரு உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று உலகம் கொண்டாடும். ஆனால், நான் முஸ்லிம்களை காப்பாற்றினேன் என்று சொன்னால் எனக்கு பிரச்சனை என்று இந்துக்கள் புலம்பும் சூழல் இந்தியாவில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

என் பெயரை மட்டும் வெளியில் சொல்ல வேண்டாம். ஒரு வருடத்திற்கு முன்னர் தான் நான் தான் அந்த குடும்பத்தை காப்பாற்றினேன் என்று தன் பெயரை மறைத்து ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள் இந்து சகோதரர்கள்.

இந்த சம்பவம் தான் இப்பதிவு!

டெல்லியில் 2020ன் தொடக்கத்தில் முஸ்லிம்கள் சிஏஏ போராட்டத்தை எதிர்த்து அமைதியாக போராடிக் கொண்டிருந்தார்கள். அப்போது பாஜக தலைவர் கபில் மிஸ்ராவின் வெறுப்பு பேச்சுக்கு பிறகு பெரிய கலவரம் உருவானது.

முஸ்லிம் வீடுகள் கொழுத்தப்பட்டன, மசூதிகள் கொழுத்தப்பட்டது. மொத்தம் 53 உயிர்கள் பறிபோனது. அந்த கொடூர காட்சிகள் ஒரு வருடம் கடந்தும் கூட இன்னும் டெல்லியை விட்டு அகலவில்லை.

நம் நாட்டின் தலைநகரில் முஸ்லிம்களின் நிலையை 2020ல் நடைபெற்ற கலவரத்திற்கு பிறகு ஒருவருடம் கழித்து பட்ங் ஜ்ண்ழ்ங் செய்தி நிறுவனம் பதிவு செய்தது.

அதில்,

முஸ்லிம்களை காப்பாற்றிய இந்துக்களை பற்றியும், இந்துத்துவ பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட கலவரத்தில் இன்றும் பாதிப்புக்குள்ளாகி கொண்டிருக்கும் முஸ்லிம்களை பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு வருடம் கடந்தும் கூட முஸ்லிம்களின் நிலை மாறவில்லை. கலவரம் நடந்த இடத்தில் இருந்து வந்த முஸ்லிம்கள் இன்று மொத்தமாக தங்கள் சொந்த வீடுகளை விற்று விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

அதில் அக்தர் என்ற முஸ்லிம் இளைஞர் கலவரத்தின் போது தன் உயிரை காப்பாற்றிய சுனில் என்ற இந்து சகோதரரை பற்றி பேசுகிறார்.

*26 பிப்ரவரி 2020* அன்று எனது வீட்டு மாடியிலிருந்து பார்க்கும் போது ஒரு கும்பல் ஜெய் ஸ்ரீராம் கோசத்துடன் முஸ்லிம் பெயர் கொண்ட கடைகளையும், முஸ்லிம்களின் வீடுகளையும் அடித்து கொளுத்திக்கொண்டிருந்தார்கள்.

அந்த இரவு எப்படியோ தப்பித்து விட்டேன். அடுத்த நாள் இரவு தய்யிபா என்ற மசூதிக்கு அருகில் சென்று ஒளிந்து கொண்டேன். ஆனால், மசூதியும் எரிக்கப்பட்டது தெரிய வந்தது.

பிப்ரவரி *26*ம் தேதி மொத்தமாக எல்லாம் எரித்து விட்டு பிறகு வீடு வீடாக சென்று தாக்க தொடங்கினார்கள்.அந்த நேரத்தில் என் இந்து சகோதரர் சுனில் வந்து உங்கள் வீட்டு கதவில் கலவரக்காரர்களிடம் இருந்து பாதுகாக்க ஜெய் ஸ்ரீராம் என்று எழுதிக்கொள்ளலாமா என்று கேட்டார்!. எனக்கு யோசிக்கவெல்லாம் ஏது நேரம் எழுதுங்கள் என்றேன்.

அதன் பிறகு எனது கதவில் அவரது பெயரை எழுதி கீழே ஜெய் ஸ்ரீராம் என்று எழுதி வைத்தார். அதனால் தான் அன்று உயிர் பிழைத்தேன். என்றார்.

இதைப்பற்றி சுனிலிடம் கேட்ட போது, அக்தர் மிகவும் நல்ல மனிதன். ஒவ்வொரு கஷ்ட காலங்களிலும் என்னுடன் நின்றிருக்கிறான். ஆனால் இந்த நிகழ்வுக்கு பிறகு நான் செய்த காரியம் வெளிவந்து என்னை இந்துத்துவ கும்பம் ''இந்துவாக நடந்து கொள்'' என்று மிரட்டி அனுப்பினார்கள் என்றார்.

இதைப்போலவே தான் இந்து சகோதரர் ஒருவரால் காப்பாற்றப்பட்ட நிகழ்வை பகிர்ந்து கொள்கிறார் அஃப்சல் கான்.

அஃபசல் கானும் அவரது இரண்டு மகன்களும் கலவரம் நடந்த போது கலவரக் காரர்களுக்கு பயந்து கதவை மூடிவிட்டு மறைந்து கொள்கிறாரகள். கலவரக்கும்பல் வீட்டின் வெளியே முழுக்க நெருப்பை வைத்து விட்டு சென்று விடுகிறார்கள்.

நெருப்பில் இருந்து காயங்களுடன் தப்பித்த அப்சல் கான் குடும்பத்தை ஒரு இந்து சகோதரனின் குடும்பம் தான் காப்பாற்றியது. அவரை பற்றி குறிப்பிடும் போதே அவர் பெயரை போட வேண்டாம் என்று சொல்கிறார் அப்சல் கான்.

இதைப்பற்றி அந்த இந்து சகோதரரிசம் ஜ்ண்ழ்ங் நிறுவன செய்தியாளர் கேட்ட போது, “நீங்கள் என்னிடம் பேசாமல் இருப்பதே சிறந்தது. நான் அப்சலை காப்பாறியதற்கான காரணம், அவர் எந்த தவறும் செய்யாதவர். என் நண்பர் அவ்வளவு தான். இந்த தகவல் வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது. தெரிந்தால் தன் குடும்பத்திற்கும் தனக்கும் தொந்தரவு இருக்கும்” என்று கூறுகிறார் அவர். இத்தனைக்கும் அவரது மகன் டெல்லி காவல்துறையில் பணிபுரிகிறார்.

இந்த சூழலை தான் நாம் இந்தியாவின் தலைநகரில் உருவாக்கியிருக்கிறோம் என்று நினைக்கும் போதே எதிர்கால இந்தியாவின் மீது பயம் உருவாகிறது.

இந்த டெல்லி கலவரத்தில் முஸ்லிம்கள் மீது மிக மோசமான தாக்குதல் நிகழ்த்தப்பட்ட போதும் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதி களில் கோவில்களின் பாது காப்பை உறுதி செய்ய முஸ் லிம்கள் முன்னனியில் நின்று பாதுகாத்தனர் என்று உண்மை கண்டறியும் குழு தனத் அறிக்கையில் குறிப்பிட்டது.



இந்தியாவில் மக்கள் மதம் கடந்து மனித நேயத்துடன் ஒற்று மையாக தான் வாழ்கிறார்கள். ஆனால், இந்துத்துவ சிந்தனை யை பரப்பும் சங்பரிவார கும்பல் மக்களுக்குள் மதவெறியை புகுத்தி நாட்டை சுடுகாடாக மாற்ற

நினைக்கிறார்கள்.

எங்கெல்லாம் இந்துத்துவம் பலமாக இருக்கிறதோ அங்கெல்லாம் மதப்பிரிவைனை உருவாகிறது, மக்களின் அமைதி நாசமாகிறது.

இது போலான சம்பவம் ஒன்று தற்போது அஸ்ஸாம் மாநிலத்தில் நடந்திருக்கிறது.

எந்த பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்து வந்த மக்களை இந்து – முஸ்லிம் என பிரித்து தற்போது முஸ்லிம்கள் கிராமங்களை விட்டே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

அஸ்ஸாமில் உள்ள தாரங்க என்ற மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இருந்து மொத்தம் 49 முஸ்லிம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டிருக் கிறார்கள்.

1980களில் இந்த கிராமம் உருவாக்கப் பட்டது. அதாவது அஸ்ஸாம் ஒப்பந்தம் போடப் பட்ட கலவர சூழலில் இங்கே மக்கள் குடியேறின ார்கள். இப்பகுதியில் இரு பழமையான கோவில் ஒன்று இருக்கிறது.

இந்த கிராமத்தில் மிகவும் அமைதியாவும், இணக்கத்துடனுமே வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அஸ்ஸாமில் பாஜக ஆட்சி அமைத்த வுடன் அனைத்தும் மாறியது. பிரச்சனைகள் உருவாக தொடங்கியது.

முஸ்லிம்கள் இங்கு வந்து ஆக்கிரமித்திருக் கிறார்கள் என்று குரல் எழும்ப ஆரம்பித்தது. இந்து கோவில் நிலம். இதற்குள் முஸ்லிம்கள் இருக்கக் கூடாது. என்று இந்துத்துவவாதிகள் குரல் எழுப்ப தொடங்கினார்கள்.

பிஜேபியின் தலையீட்டில் இந்த பிரச்சனை பெரிதாக்கப்பட்டு முஸ்லிம் குடும்பங்கள் இந்த கிராமத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இத்தனைக்கும் அந்த கிராமத்தின் முஸ்லிம் கள் தாங்கள் இந்தியாவின் குடியுரிமை பெற்ற வர்கள் என்று சமீபத்தில் சதஇ பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெற்றிருப்பதை காட்டுகின்றனர்.

இதனை உண்மை கண்டறியும் குழு ஆய்வு செய்து பதிவு செய்திருக்கிறார்கள்.

இதுவெல்லாம் சமீபத்தில் வெளிவந்த தகவல் களை மட்டும் தொகுத்த செய்திகள் மட்டும் தான்.


இதுபோல் இந்தியாவில் இந்துத்துவ சிந்தனைகள் மூலம் உடைந்து போன இந்து – முஸ்லிம் உறவுகள் கொட்டிக்கிடக்கின்றன.

“பூமியில் உள்ளவர்களை நேசியுங்கள். விண்ணில் உள்ளவன் உங்களை நேசிப்பான்.” என்பது நபிமொழி. மேலும் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒரு ஆண் – பெண் ணிலிருந்து உருவானது தான். அதனால் ஒவ் வொருவரும் சகோதரர், சகோதரிகள் என்பதும் குர் ஆனின் வழிகாட்டல்.

இதை மனதில் ஏற்றுக்கொண்டால் போதும் உலகில் மதங்களிக்கிடையே ஏற்படும் பிரிவுகள் இருக்காது.


இதனை மீறி உங்களுக்குள் பிளவுகளை உண்டாக்க நினைப்பவர்களை வெறுத்து ஒதுக்குங்கள். அவர்களில் முதலானவர்கள் தான் இந்த இந்துத்துவ வாதிகள்.

– அபூ சித்திக்.



- எஸ்.எம். முஷ்ரிப்

பாகம்-12




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

கடந்த 2021 பிப்ரவரி மாதஇதழின் தொடர்ச்சி...

## பொய் வழக்குகளும் தவறான புலன் விசாரணையும்

## மத்திய உளவுத் துறைதான் அப்பாவி முஸ்லிம்கள் மீது, பொய் வழக்குகளை புனைந்த குற்றத்தைச் செய்தது

– மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு
– அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு
– சம்சவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு
– மாலேகான் 2006 குண்டு வெடிப்பு

இவை அனைத்திலும் நடந்த முதல் விசாரணையும், அவற்றில் காட்டப்பட்ட சாட்சியங்களும் இவற்றில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகைகள் அனைத்தும் பெரும் திருடுகளும் தகிடு தத்தங்களும்தான்.

அதேபோல் இவற்றில் (இந்தக் குண்டு வெடிப்புகளில்)

1) வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள்

2) இந்த குற்ற முறைமை பிரிவு 165–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் வாக்கு மூலங்கள்

3) ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருட்களைக் கைப்பற்றியது.

4) பாகிஸ்தானுக்கும், இதர நாடுகளுக்கும் தீவிரவாத பயிற்சி எடுப்பதற்காகப் பயணம் செய்தது எனப் புனையப்பட்டது. அதற்காக தரப்பட்ட பதிவுகள்

5) குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் பெயர் தெரிந்த தெரியாத அமைப்புகளோடு தொடர்புடையதாகத் தரப் பட்ட சாட்சியங்கள்.

## இவை அனைத்தும் பொய் :

மேலே நாம் சொன்ன நான்கு வழக்குகளையும், நான்கு மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறையினர் ஏற்கெனவே விசாரணை செய்திருந்தனர். அதாவது,

1) மக்கா மஸ்ஜித் குண்டு (ஹைதராபாத்) வெடிப்பை ஆந்திர மாநில காவல் துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

2) அஜ்மீர் ஷெரீஃப் (இராஜஸ்தான்) குண்டு வெடிப்பை இராஜஸ்தான் மாநில காவல்துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

3) சம்சவ்தா, ரெயில் குண்டு வெடிப்பு வழக்கினை (ஹரியானா) ஹரியான மாநிலக் காவல்துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

4) மாலேகான் (மராட்டிய மாநிலம்) 2006 குண்டு வெடிப்பினை (மராட்டிய) மாநில காவல்துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

பின்னர், (CBI) என்ற மத்திய புலனாய்வுத் துறையும் விசாரணைச் செய்திருந்தனர்.

இந்த விசாரணைகள் பற்றி ஊடகங்கள் தந்திடும் செய்திகளைப் பார்த்திடும்போது IB என்ற மத்திய உளவுத்துறை தவறான வழிகாட்டு தல்களையும், தகவல்களையும் தந்து வழக்கை திசை திருப்பி இருக்கின்றன. இந்தத் திசைத் திருப் பிடும் பணியை குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த உடனேயே செய்திருக்கின்றன.

ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பைப் பொறுத்த வரை குண்டு வெடிப்பு நடந்த அன்றே இந்தத் திசை திருப்பும் பணியை மேற்கொண்டது. அன்றே 'பிலால்'என்பவரின் பெயரை யும், அவர் ஹூஜி – லஷ்கரே தய்பா ஆகிய அமைப்புகளைச் சார்ந் தவர் என்றும் ஊடகங்களுக்கு முந்திக் கொண்டு செய்திகளைத் தந்தது. (ஆதாரம் – Times of India Pune, 20 May-2007)

அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பைப் பொறுத்தவரை IB என்ற மத்திய உளவுத்துறை லஷ்கரே தய்பாவும், ஹூஜியும்தான் என அறிவித் தது. (ஆதாரம் – Times of India Pune, 12-October-2007)

''சம்சவ்தா எக்ஸ்பிரஸ்'' ரெயில் குண்டு வெடிப்பை பொறுத் தவரை நமது IB என்ற மத்திய உளவுத்துறை, இந்தக் குண்டு வெடிப்பை பாகிஸ்தான் உளவுத்துறையாகிய ஐ.எஸ்.ஐ. தான் செய்தது என்று நேரான பாதையில் சென்று கொண்டிருந்த விசாரணையை திசை திருப்பியது.

மாலேகான், 2006 குண்டு வெடிப்பை IB மத்திய உளவுத் துறையும், மராட்டிய மாநிலத் தின் காவல்துறை அதிகாரி கே.பி. ரகுவான்சியுவும் சேர்ந்து ஜெய்சே முஹம்மத் என்றார்கள்.

(ஆதாரம் – TImes of India, Mumbai. 9-Sep. 2006, Afternoon Mumbai : 11-Sep, 2006, மராத்தி மொழி நாளிதழ், Pudhari, Pune, 10 Sep-2006 and 12-Sep-2006 Indian Express Mumbai 13-Sep, 2006)

இந்த விவகாரத்திலும் நமது மனதை வருடுவது என்னவெனில், சரியான திசையில் சென்று கொண்டிருக்கும் புலன் விசாரணைகளை திசை திருப்புவது நமது மத்திய உளவுத்துறை தான். 'IB' Intelligence Bureau. இந்த மொத்த விவகாரத்திலும் விசாரணைகளைத் திசை திருப்பி அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து, உண்மை யான குற்றவாளிகளைத் தப்பிக்கவிட்டது மத்திய உளவுத்துறைதான். இதில், உண்மையான தீவிர வாத அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ்., வந்தே மாதரம், அபிநவ் பாரத் போன்றவை தப்பித்துக் கொண்டன. இந்த அமைப்புகள், நமது அரசியல் சாசன சட்டத்தையும், ஜனநாயகத்தையும் தூக்கி வீசுவதை இலக்காகக் கொண்டவை. அந்த இடத் தில் ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை அமைத்திட தயாராகி வருகின்றன. (இதனை பிராமிண ராஷ்டிரா எனலாம்)

## இதர வழக்குகளில் 'IB' என்ற மத்திய உளவுத் துறையின் தவறான தகவல்கள்

மத்திய உளவுத்துறை நாம் மேலே குறிப்பிட்ட நான்கு வழக்குகளில் மட்டுந்தான், தவறான தகவல்களைத் தந்தார்கள் என்றில்லை. 2003–க்குப் பின் 2008 வரை உள்ள எல்லா குண்டு வெடிப்புகளிலும் தவறான தகவல்களைத் தந்திருக்கின்றார்கள்.

## மும்பை ரெயில் குண்டு வெடிப்பு 2006

1) குண்டுகள் வெடித்தவுடனேயே இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் தான் இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியது என IB என்ற மத்திய உளவுத்துறை கூறியது.

(ஆதாரம் – Afternoon, Mumbai 12th July - 2006)

(நம்முடைய கணிப்பின்படி 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடந்த குண்டு வெடிப்புகள் ஒன்றிலே IB செய்தது அல்லது IB யின் ஏற்பாட் டில் நடந்தது)

2) IB மத்திய உளவுத்துறை விசாரணையை பயங்கர இரகசியமாக நடத்தியது மராட்டிய மாநிலத்தின் 'ATS' தீவிரவாத தடுப்புப் படைத் தலைவர் K.P. இரகுவான்சியை தவிர, வேறு யாருக்கும் விசாரணையைப் பற்றித் தெரியாது.

(ஆதாரம் – மராத்தி நாளிதழ், Sakal Pune, 22-July 2006)

(இந்த இரகுவான்சிதான், ஹேமந்த் கர்க ரேயை அவர் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு கொண்டு வந்தவர்)

## அஹ்மதாபாத், சூரத் – வழக்கு 2008

1) இந்த குண்டு வெடிப்புகளையும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர் கள்தாம் செய்தார்கள் என மத்திய உளவுத்துறை அறிவித்தது. லஷ்கரே, தைய்பா, ஹரக்கத்துல் இஸ்லாமிய என்ற அமைப்புகளெல்லாம் இணைந்து இந்திய முஜாஹிதீன் என்றொரு அமைப்பை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இதற் கான பணம் வெளிநாட்டிலிருந்து வந்திருக் கின்றது. என்றெல்லாம் 'IB' மத்திய உளவுத்துறை எடுத்த எடுப்பிலேயே கதை கட்டிவிட்டது.

(The Telegraph, Mumbai, 28-July-2008)

*2) குஜராத்தில் 2002 ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலைகளுக்கு பின் நடந்த "தீவிர வாதிகள் கைது" என்பவை யெல்லாம், மத்திய உளவுத்துறை தந்த தகவல்களின் அடிப்படையில் நடந்தவைதாம்.* (TOI- Mumbai, 27-July-2008)

## டெல்லி வெடிகுண்டு வெடிப்பு வழக்கு – 2008

*"இந்த வழக்கின் விசாரணையின்போது, உளவுத்துறையினர் மூன்று கைப்பேசி எண் களைத் தந்தார்கள். 97123 98204, 97145 52899, 97247 64196, இந்த கைப்பேசி எண்களைத்தான் தீவிரவாதிகள்பயன்படுத்தினார்கள்என்றார்கள்."*

(ஆதாரம் – The Chargesheet Filed by the Special Cell of Delhi Police on 27th Feb - 2009)

*2) செப்டம்பர் – 18, 2008 ஆம் ஆண்டு மத்திய உளவுத் துறையினர் பின்வரும் தகவலைத் தந்தார். அத்திப் என்ற பஷீர், இவர் டெல்லியில் வசித்துவருபவர். இவர்,11 நபர்களுடன் அஹமதா பாத் (குஜராத்)இல் ஒரு வீட்டில் வைத்து சில* IED *வகை குண்டுகளைத் தயார் செய்தார். இந்தக் குண்டுகள் அஹமதாபாத்–இல் வெடிக்கச் செய் வதற்காககச் செய்யப்பட்டவை. மேலும் உளவுத் துறைத் தந்த தகவல், இந்த அத்திப் என்ற பஷீர், 12 பேருடன் இரஜதானி எக்ஸ்பிரசில் டெல்லிக்கு ரிஸ்வான் என்பவரையும் அழைத்துக் கொண்டு 26, ஜூலை 2008 – இல் வந்து சேர்ந்தார். 19, செப்டம்பர் 2008 இல் குறிப்பிட்ட துல்லியமான தகவல்களின் அடிப்படையில் டெல்லியின் சிறப் புக் காவல் பிரிவு /* NDR *- பாட்லா ஹவுஸ்–இல் அடுக்குமாடி குடியிருப்பு எண். 108 – ஐ நோக்கி விரைந்தது. இங்கு சென்றுதன் நோக்கம், கைப் பேசி எண். 981100 4309–ஐ யார் பயன்படுத்து கின்றார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இந்தக் கைப்பேசிக்கும், கைப்பேசி எண் 97123 98204 –க்கும் தொடர்பிருந்ததாகத் தகவல்கள் கிடைத்தன.*

*இதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை ஒன்று அந்த அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த வர்களுக்கும், டெல்லி சிறப்புக் காவல் பிரிவுக்கு மிடையே நடந்தது.*

(ஆதாரம் – The Charge Sheet, Filed by the Special Cell of Delhi Police on 27th Feb-2009)

*(இங்கே நாம் ஓர் விஷயத்தைக் கவனிப்பது மிகவும் முக்கியம். இந்த இடத்தில் கண்டு பிடிக் கப்பட்ட கைப்பேசி எண். 98908 48720 என்ப தைப் பற்றிய விசாரணையை மேற்கொள்ளவே இல்லை. நாம் இந்தக் கைப்பேசி எண்ணை விசாரித்தபோது, மராட்டிய மாநிலம், அவ்ரங்கா பாத்க்குப் பக்கத்திலுள்ள ஓர் கிராமத்தைச் சார்ந்தது என்பது தெரியவந்தது.)*

## 4) 2007 உத்திரப்பிரதேச நீதிமன்றத் தொடர் குண்டு வெடிப்புகள்

*1) இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்த உடனேயே 'ஹூஜி' (ஹரக்கத்துல் முஜாஹிதீன்) என்ற அமைப்பைச் சார்ந்த குரு என்பவர் இந்தத் தாக்குதலை திட்டமிட்டார் எனஅறிவித்தார்கள் உளவுத் துறையைச் சார்ந்தவர்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்தியவர்கள் லஷ்கரே தொய்பா, ஜெய்ஷே முஹம்மத் ஆகிய அமைப்பு களைச் சார்ந்தவர்கள். (ஆதாரம்* – Times of India, Pune, 25-Nov, 2007)

*2) புலன் விசாரணையை மேற்கொண்ட வர்கள் மத்திய உளவுத் துறை அல்லது எஸ்.டி. எஃப்–ஐ சார்ந்தவர்கள் இன்னும் அதிகமான தகவல்களைத் தருவார்கள் எனக் காத்திருந் தார்கள். (ஆதாரம்* – The Times of India, Pune, 26-Nov.2007)

*3) மத்திய உளவுத்துறைத் தந்த தகவல் களின் அடிப்படை யில், உத்திரப்பிரதேசத்தின் தீவிரவாத தடுப்புப்படை, சனிக் கிழமை காலை யில் அதாவது, 22 டிசம்பர் 2007 அன்று சந்தேகத் திற்கிடமான இரண்டு தீவிரவாதிகளை பாரபங்கி ரெயில் நிலையத்தில் கைது செய்தார்கள்.*


(ஆதாரம் – Times of India, Pune, 23-Dec. 2007)

## 5. ஜெய்ப்பூர் குண்டு வெடிப்புகள் 2008

*1) உளவுத்துறை ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள் பங்களாதேஷிலிருந்து கடத்தி வரப் பட்டவை என்றது.* (Times of India, Pune, 15th May 2008)

*2) புலனாய்வோடு சம்மபந்தப்பட்ட அதி காரிகள், மத்திய உளவுத்துறையிடமிருந்து தகவல் கிடைத்தால் மட்டுமே மேற்கொண்டு விசார ணையைத் தொடர முடியும் என்றார்கள். காரணம், தீவிரவாதிகளின் தொடர்பு தேசிய அளவிலும், சர்வ தேசிய அளவிலும் இருக்கின் றன என்றார்கள்.* (The Milligette 1-15, June 2008)

– இன்ஷா அல்லாஹ் தொடரும்...



# தீவிரவாத முத்திரையில் இருந்து விடுதலை செய்யப்படும் முஸ்லிம்கள்

கடந்த (21.06.2021) ஒரு வாரத்தில் மட்டும் இந்தியாவில் மிக மோசமான தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட தீவிரவாதிகள் என்று கைது செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில் இருந்து 9 வருட சிறைக்காலத்திற்கு பிறகும், 5 வருட சிறைக்காலத்திற்கு பிறகும் அப்பாவி முஸ்லிம்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த செய்தி எந்த பொது ஊடகத்திலாவது பார்த்தீர்களா..? ஆனால், இதுவே இவர்களை கைது செய்த போது இந்த ஊடகங்கள் எவ்வளவு வேகமாக முதல் பக்கத்தில் தீவிரவாதிகள் கைது என்று வேகவேகமாக பரப்பினார்கள்..? ஆனால், அவர்கள் அப்பாவிகள் என்று நீதிமன்றத்தால் விடுதலைசெய்யப்பட்டசெய்திகளைமக்களிடம் கொண்டு செல்வ தில்லை. சரி, நாம் கொண்டு செல்வோம்.

## 9 வருட சிறைக்காலத்திற்கு பிறகு அப்பாவிகளுக்கு விடுதலை

மஹாராஷ்டிராவில் லஷ்கரே தொய்பா வுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் என்று கைது செய்யப்பட்ட முஹம்மது இல்யாஸ் மற்றும் முஹம்மது இர்ஃபான் என்ற இரண்டு பேரையும் 9 வருட சிறைக்காலத்திற்கு பின், இவர்கள் அப்பாவிகள் என்று NIA நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது.

2012ல் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது UAPA உட்பட பல தீவிரவாதத்துடன் தொடர் புடைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

கைது செய்யப்படுவதற்கு முன் இல்யாஸ் ஒரு பழக்கடையையும், இர்ஃபான் ஒரு பேட்டரி கடையையும் நடத்தி வந்தனர்.

இந்த 9 வருடத்தில் தனக்கான பிணைக்கு பலமுறை நீதிமன்றத்தை நாடியும் இவர்கள் மீது எந்த வித ஆதாரமும் இல்லாமலும் கூட பிணை மறுக்கப்பட்டது. அதனால் வழக்கின் தீர்ப்பு வரும் வரை இவர்கள் சிறையில் இருந்தார்கள்.

இர்ஃபானின் 62 வயது தந்தை ஒவ்வொரு முறையும் வழக்கு விசாரணைக்காக தனது கிராமத்தில் இருந்து மும்பை நீதிமன்றத்திற்கு வர வேண்டும். இல்யாஸ் கைது செய்யப்படும் போது அவருக்கு இரண்டு மாத குழந்தை. இந்த 9 வருடத்தில் தனது மனைவியையும், குழந்தை யையும் ஒரே ஒரு முறை தான் சிறையில் பார்த் திருக்கிறார்.

இப்போது இவர்கள் இருவருக்கும் வெளியில் எந்தத் தொழிலும் இல்லை. அனைத்தையும் இழந்து நிற்கிறார்கள்.

அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட் டாலும். இந்த 9 வருடங்களில் இழப்பு அவர்களின் வாழ்க்கையை நாச மாக்கியிருக்கிறது.

5 வருட சிறைக்காலத்திற்கு பிறகு விடுதலை ஆட்டோ டிரைவராக இருந்த ஹபீப் கர்நாட காவில் உள்ள IITல் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு மூளையாக இருந்தவர் என்று கைது செய்யப்பட்டார்.

மிக மோசமான தீவிரவாதி இவருக்கு பல

தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பிருக்கிறது என்று காவல்துறையினர் தொடர் அறிவுப்பு களை கொடுத்து படு மோசமான மனிதராக அவரை சித்தரித்தனர்.

இவர் இந்தியாவிற்கு எதிராக ஜிஹாத் செய்ய வேண்டும் என்று கூறி செயல்பட்டதாகவும், அதற்காக பங்களாதேசில் இருந்து வந்த தீவிர வாதிகளுக்கு உதவியதாகவும் நீதிமன்றத்தில் காவலர்கள் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினர். இந்த வழக்கு NIAன் விசாரணைக்கு கீழ் மாற்றப் பட்டது.

கைது செய்யப்பட்ட ஹபீப் மீது தீவிரவாத வழக்குகள் அனைத்தும் போடப்பட்டது. IPC Sections 120-B, 121, 121-A, 122, 123, 307, 302 of the IPC, Sections25, 27 of the Indian Arms Act, Sections 3, 4, 5 and 6 of the Explosives Substance Actand Sections 10, 13, 16, 17,18 and 20 of the Unlawful Activities (Prevention) Act, 1967

ஆனால், ஐந்தாண்டு கால ஹபீபின் போராட் டத்திற்கு பிறகு நீதிமன்றம், ஹபீப் மீது சொல்லப் பட்ட எந்த குற்றச்சாட்டுக்கும் ஆதாரம் கிடை யாது. எந்த ஆதாரமும் நீதிமன்றத்தின் முன்னால் சமர்பிக்கப்படவில்லை என்று கூறி NIA நீதி மன்றம் ஹபீபை விடுதலை செய்தது.

கடந்த வெள்ளிக்கிழமை (18.06.2021) விடு தலையான ஹபீப் கூறும் போது, எனக்கு IITல் இப்படியொரு துப்பாக்கி சூடு நடந்தது என்பதே தெரியாது. ஆனாலும், நான் செய்யாத குற்றத் திற்காக ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்க நேர்ந்தது என்று குறிப்பிட்டார்.

எந்த தவறும் செய்யாத போதும் ஹபீபின் நீண்ட கால சிறை வாழ்க்கைக்கு காரணமாக அமைந்தது ஹபீப் மீது போடப்பட்ட UAPA வழக்குகள் தான் என்று வழக்கறிஞர்கள் குறிப் பிடுகிறார்கள்.

ஹபீப் சிறைக்கு சென்ற பின் அந்த வருத்தத் திலும் வேதனையிலும் ஹபீபின் தந்தை இறந்து விட்டார், அவரது குடும்பமும் கடந்த ஐந்து ஆண்டு காலத்திலும் மோசமான நிலைமைக்கு தள்ளபட்டிருக்கிறது.

இப்போது ஹபீப் அப்பாவி என்பது நீதிமன் றத்தாலேயே நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால், ஹபீப் இழந்த அவரது தந்தையின் உயிரோ, குடும்ப வாழ்க்கை யின் நிலைமை?..

இதற்கு யார் பதில் சொல்வது?..

இந்த இரண்டு வழக்கு மட்டுமல்ல இந்தியா வில் இப்படி நூற்றுக்கணக்கான வழக்குகள் இருக் கிறது. இதற்கு யார் பொறுப்பேற்பது.

இன்றைய சமூகத்தில் ஒரு திருட்டு குற்றத் தில் சிறைக்கு சென்றாலே அவர்கள் மீதான சமூ கத்தின் மதிப்பு மோசமாக மாறி விடுகிறது. ஆனால், முஸ்லிம்கள் மீது மிகச்சாதாரணமாக எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் குற்றச் சாட்டுகளை அடுக்கி சிறை வைப்பதன் மூலம் அவர்களுக்கு சமூகத்தின் நிலை என்னவாக மாறும் என்று யோசித்து பாருங்கள்!

ஒரு முஸ்லிம் தீவிரவாதி என்று கைது செய் யப்படும் போது ஊடகங்கள் காட்டும் ஆர்வத்தை அவர்களை விடுவிக்கும் போது காட்டுவதில்லை. விடுதலை செய்திகள் எல்லாம் பொது மக்களின் காதுகளில் போய் சேருவதே இல்லை. அதனால், நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டாலும் பொது சமூகத்தில் அவர்கள் மீதான பார்வை மாறுவதில்லை.

ஒரு தீவிரவாத வழக்கு புனையப்பட்டதும் அவர்கள் தங்கியிருப்பது வாடகை வீடென்றால் உடனே காலி செய்யப்படும், காலி செய்யாத பட்சத்தில் வீட்டு முதலாளிகளுக்கு காவல் துறையின் தொந்தரவு இருக்கும். தங்கியிருப்பது சொந்த வீடாக இருந்தால் கூட பொதுச் சமூகத்துக்கு நடுவில் குற்றவாளியாக நடமாட வேண்டும்.



Discharged accused Mohammed Habeeb with his lawyer Mohammed Tahir

*சொந்த தொழில்கள் முடக்கப்பட்டு விடும். குடும்பத்தின் வாழ்வாதாரம் மொத்தமும் பாதிக் கப்படும். குழந்தைகளின் கல்வி நிறுத்தப்படும். வீட்டின் பெண்கள் தங்கள் தேவைக்காக வேலைக்கு செல்ல வேண்டும்.*

*இந்த அத்தனை கொடுமைகளுக்கு ஊடாக தன் மகனுக்காக வயதான தந்தை, வயதான தாய், தன் கணவனுக்காக மனைவி என அப்பாவி என்று நிரூபித்து வெளிக்கொண்டு வருவதற்காக ஒரு பெரிய தொகையை வழக்குகள் நடத்துவதற்கு சம்பாதிக்க வேண்டும்.*

*இதுபோலான வழக்குகளில் வழக்குரைஞர் கள் கூட ஆஜராக மாட்டார்கள். இப்படியான வழக்குகளில் ஆஜராகும் வழக்குரைஞர்களுக்கு தொடர் அச்சுறுத்தல்கள் இருக்கும். இப்படி சாஹித் அஷ்மி என்ற வழக்கறிஞர் தன் வாழ் நாளில் 17 முஸ்லிம்களை தீவிரவாத வழக்கில் இருந்து காப்பாற்றினார். ஆனால், அவர் இறுதி யில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது கொலை குற்றவாளிகள் கூட தண்டிக்கப்படவில்லை. (அவரை குறித்தும் நாம் வைகறையில் எழுதியிருக் கிறோம்) இந்த சூழலில் ஒரு வழக்கை நடத்த ஒரு வழக்குரைஞர் கிடைப்பதே கடினமானது.*

*இத்தனை சூழல்களையும் விடுதலை செய் யப்படும் அப்பாவிகள் சந்திக்க வேண்டியிருக் கிறது. ஆனால், இதற்கு எந்த விதமான இழப் பீடோ, ஆறுதலோ இவர்களுக்கு கிடைப்ப தில்லை.*

*விடுதலைக்கு பிறகும் இவர்களால் நிம்மதி யாக தொழில் செய்ய முடியாது. இந்த காரணத்தை கூறி வேலை மறுக்கப் படும் இப்படி பல பிரச்சனைகள் இருக் கிறது.*

## அப்பாவி என்று விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் சில,

*இந்தியாவில் இது போல் 2017 வரை தீவிர வாதிகள் என்று கைது செய்யப்பட்டு பல ஆண்டு களுக்கு பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்ட வழக்கு களை 2017ல்* Times of india *பத்திரிக்கை வெளியிட்டது.*

*அதில்,*

*நஸ்ருதின் அஹ்மத் – 23 வருட சிறை.*
*கைது செய்யப்பட்டது – 1994.*
*விடுதலை செய்யப்பட்டது – 2015*
*கைது செய்யப்படும் போது வயது – 19.*

*வழக்கு – பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத் தின் போது நடந்த ஐந்து இரயில் குண்டு வெடிப்பு, இரண்டாம் ஆண்டு மருத்துவ படிப்பின் போது குற்றம் இழைக்கப்பட்ட தாக கைது செய்யப்படார்.*

*குல்சார் அஹ்மத் பானி , 16 வருட சிறை.*
*கைது செய்யப்பட்டது – 2001*
*விடுதலை செய்யப்பட்டது – 2017*
*கைது செய்யப்படும் போது வயது– 28.*

*வழக்கு – சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பு வழக்கு.*

*ஜாஹீருதீன் அஹ்மத் , 23 வருட சிறை.*
*கைது செய்யப்பட்டது – 1994*
*விடுதலை செய்யப்பட்டது – 2016*

*வழக்கு – மும்பையில் சிவில் பொறி யாளராக இருக்கும் போது தீவிரவாத செயலில் ஈடுபட்டதாக கைது செய்யப் பட்டார்.*

Md *ஆமிர் கான், 14 வருட சிறை*
*கைது செய்யப்பட்டது – 1998*
*விடுதலை செய்யப்பட்டது – 2012*
*கைது செய்யப்படும் போது வயது– 20.*

*வழக்கு – டெல்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்.*

*ஹபீப் பாவா மற்றும் ஹனிப் பாகிட் வாலா, 14 வருட சிறை.*

*கைது செய்யப்பட்டது – 2003*
*விடுதலை செய்யப்பட்டது – 2017*

*வழக்கு – 2002 ல் டிபன் பாக்ஸ் குண்டு பேருந்தில் வெடித்த வழக்கு.*

*ஹுசைன் பாசிலி மற்றும் ராபிக் ஷாஹ் , 12 வருட சிறை.*

*கைது செய்யப்பட்டது – 2005*
*விடுதலை செய்யப்பட்டது – 2017*

*வழக்கு – ஷாஹ் இஸ்லாமிய மாணவராக இருக்கும் போது கைது செய்யப்பட்டார், டெல்லி தொடர் குண்டு வெடிப்பின் குற்றவாளி கள் என கைது செய்யப் பட்டார்.*

*ஆறு பேர், 11 வருட சிறை.*
*கைது செய்யப்பட்டது – 2003*



After their release from Taloja Jail, both reached office of Jamiat Ulama E Maharashtra and met Gulzar Azmi, Secretary of Legal Cell and thanked for extending legal help to them. (L: Mohammed Irfan, M: Mohammed Ilyas; R: Gulzar Azmi)

விடுதலை – 2014

வழக்கு – 2002 அக்ஸர்தம் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட் டவர்கள்.

இர்ஷத் அலி மற்றும் மௌரிப் கமர், 11 வருட சிறை.

கைது – 2005, விடுதலை – 2017

வழக்கு – அல்–பத்ர் எனும் குழுவில் உறுப்பி னர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள்.

ஒன்பது பேர் , 10 வருட சிறை.
கைது – 2006, விடுதலை – 2016

வழக்கு – மாலேகான் குண்டுவெடிப்பு.

அப்துல் வாகித் செய்க் , 9 வருட சிறை
கைது – 2006, விடுதலை– 2015

வழக்கு – 11/07 மும்பை ரயில் குண்டு வெடிப்பு,

ஐந்து பேர், 9 வருட சிறை.
கைது – 2007, விடுதலை – 2016.

வழக்கு – தடைப்பட்ட ஹுஜி குழுவை சார்ந்தவர்கள் என்றும், பாகிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள்.

சொஹெப் ஜாஹிர்தார், அப்துல் நய்யிம், md இம்ரான் கான் மற்றும் சையத் கான். 7 வருட சிறை.

கைது – 2007, விடுதலை– 2014
வழக்கு – மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு.

ரியாஸ் கான் மற்றும் அப்துல் சையத் , 7 வருட சிறை.
கைது – 2010, விடுதலை – 2017
வழக்கு – மக்கா குண்டுவெடிப்பு வழக்குக்கு பழிவாங்க காவலதிகாரியை கொலை செய்ததாக கைது.

17 பேர், 7 வருட சிறை.
கைது – 2008. விடுதலை – 2015
வழக்கு – சிமி அமைப்பில் இருந்து நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்ட வர்கள்.

ஹாரூன் ரஷீத், Md. இஃப்திகார், மசூத் அஹ்மத், திலாவர் கான் , 5 வருட சிறை.
கைது – 2005, விடுதலை – 2010
வழக்கு – டெஹ்ராடூனில் இருக்கும் மிலி ட்டரி பள்ளியில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.

மஹ்பூப் இப்ராகிம், சபாப் சோப்தார் , 5 வருட சிறை
கைது – 2006, விடுதலை– 2011
வழக்கு – டெல்லியில் உள்ள IIT மீது தீவிரவாத தாக்குதலை நடத்த முயற்சித் தார்கள் என்று கைது.

இப்படி கைது செய்யப்பட்டு அப்பாவி என்று கூறி விடுவிக்கப்பட்ட எவருக்கும் எந்தவித

இழப்பீடும் கிடையாது. பொய்யான குற்றச்சாட்டின் பெயரில் 23 வருடங்கள் வரை தங்கள் வாழ்வை இழந்தவர்கள் கூட இருக்கிறார்கள். இந்த நிலையை கொண்டு வந்ததற்கே நமது நீதிமன்றங்கள் குற்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உச்ச நீதிமன்றத்தில் அக்ஸர்தம் குண்டுவெடிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேர் இழப்பீடு கேட்டு தொடர்ந்த வழக்கில் இது 'ஓர் மோசமான முன்மாதிரியாக' மாறிவிடும் என நீதிமன்றம் சொல்லியது. (TOI 11/08/17)

## UAPA கொடூரம்

இன்று இப்படி பலி கொடுக்கப்படும் முஸ்லிம்களுக்கு ஆபத்தாக இருந்து வருவது UAPA சட்டம் தான். இந்த சட்டத்தின் கீழ் தான் ஒருவருக்கு ஜாமீன் வழங்காமல் நீண்ட காலத்திற்கு சட்டத்தின் வழியாகவே சிறை வைக்க முடிகிறது என்று வழக்குரைஞர்கள் கூறுகிறார்கள்.

மத்திய அமைச்சராக இருக்கும் பாஜகவை சேர்ந்த கிருஷ்ண ரெட்டி நாடாளுமன்றத்தில் UAPA தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போது, "2016 முதல் 2019' வரை UAPA சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் நீதிமன்றத்தால் 2.2% வழக்குகளுக்கு மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு குளறுபடிகள் இருந்தும் தொடர்ச்சியாக UAPA மீது கைது நடவடிக்கை தொடர்ந்து வருகிறது. (UAPA குறித்து விரிவாக நாம் வைகறையில் தொடர்ச்சியாக எழுதி வருகிறோம்.)

சமீபத்தில் கூட டெல்லி கலவரத்தில் அநியாயமாக கைது செய்யப்பட்ட மூன்று மாணவர்களான ஆசிப் இக்பால் தன்ஹா, தேவகானகலிதா, நடாஷா நர்வால் ஆகியோருக்கு டெல்லி உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கி UAPA சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்று தனது உத்தரவில் குறிப்பிட்டது.

இதுபோல் இன்னும் பல்வேறு வழக்குகள் இருக்கிறது. தொடர்ச்சியாக பேசுவோம்.

– அபூ சித்திக்

# சீனாவின் பிடியில் சிக்கித் தவிக்கும் உகியூர் முஸ்லிம்களின் மேல் ஜப்பான் நிறுவனங்களின் அனுதாபம்...




உகியூரில் உள்ள முஸ்லிம்களைப் பிடித்து சித்திரவதைச் செய்து வருகின்றது சீனாவின் பொதுவுடமை அரசு. சொந்த குடிமக்களையே கொலை செய்கின்றது. இந்தச் சித்திரவதைகளுள் ஓர் அம்சம். உகியூர் முஸ்லிம்களை ஆலைகளில் கட்டாய வேலைகளுக்கு அமர்த்துவது, அவர்கள் அதிக நேரம் உழைக்க வேண்டும். அவர்கள் மூர்ச்சையாகி விழும் வரை உழைக்க வேண்டும். உயிர் உடலோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அளவுக்கு மட்டுமே உணவு வழங்கப்படும். கூலி கிடையாது. அவர்கள் வேலைப்பளு தாங்கிடாமல், செத்து மடிந்திட வேண்டும் என்பதே இலக்கு. இதையே (Forced Labour) கட்டாயமாக 'வேலை வாங்குதல்' என்று ஹிட்லர் முசோலினி ஆகிய பாஸிட்டுகள், வகையறாக்கள் கூறி வந்தார்கள். வரலாறு நமக்குக் கூறுகின்றன.

இப்படி இந்த மக்களை அளவுக்கதிகமாக வேலை வாங்குவதால் மிகவும் குறைந்த விலையில் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் சீன நிறுவனங்கள், அதிகமான இலாபங்களைச் சம்பாதிக்கின்றன. ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

இந்தப் பொருள்களில் பெரும்பாலானவை ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜப்பான் நாடு இப்போது உகியூர் முஸ்லிம்களின் கட்டாய (சித்திரவதை) உழைப்பில் பொருள்களைத் தயாரிக்கும் கம்பெனிகளிடமிருந்து பொருங்களை வாங்குவதில்லை என முடிவு செய்துள்ளது. இதனால் சீன நிறுவனங்கள் மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன. ஜப்பான் இத்தோடு நிறுத்தாமல், உகியூர் முஸ்லிம்களை "வேலை" என்ற பெயரில் கொடுமைப்படுத்திடும் நிறுவனங்கள் மீது, மனித உரிமை மீறல், உழைப்பாளர்கள் பாதுகாப்பு விதிகளை மீறுவது போன்ற சர்வதேச விதிகளின்படி நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது. அமெரிக்காவும், ஆங்கில நாடும் இதுபோன்ற வியாபார தடைகளை சீன நிறுவனங்களின் மீது விதித்துள்ளன.

மேலும் விரிவான வரலாற்றுச் செய்திகளுக்கு படியுங்கள், 'சீனாவின் பிடியல் உகியூர் முஸ்லிம்கள்"
வெளியீடு வேர்கள். MGM

Source : Radiance Views, Weekly, 14-20, March-2021, Based on Kyodo News Report

சீனாவில் புழக்கத்திலிருக்கும் இலக்கியங்களில் பெண்களை "Waters of Woes" துன்பங்களின் தடாகம் என அழைக்கின்றார்கள். பெண்கள் செல்வங்களை சீரழிக்கும் ஷைத்தான்கள் என்றே பார்க்கப்படுகின்றார்கள்.

சீனாவின் சமூக வாழ்க்கை ஓட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்களாகவே கருதப்படுகின்றார்கள். அதனால் அவளுக்கு எந்த உரிமையும் வழங்கப்படுவதில்லை.

வாழ்நாள் முழுவதும் பெண் 'மைனர்' ராகவே கருதப்படுகின்றாள். அதாவது முதிர்ச்சி யடையாதவளாக கருதப்படுகின்றாள்.

கணவன் நினைத்தால் எப்போது வேண்டு மானாலும் மனைவியை வேண்டாம் எனச் சொல்லலாம். இன்னொரு ஆணுக்கு வைப்பாட் டியாக அவன் தன் மனைவியை விற்றுவிடலாம்.

வாழ்க்கையில் எதிர்ப்படும் விபரீதங்களால் அவள் விதவையாகிவிட்டால், அவள் தன் கணவனின் குடும்பச் சொத்தாக ஆகிவிடுவாள். அவளுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை இல்லை.

இத்தனை அவலங்களோடும் சீனாவில் அடிமைத்தனம் ; – அடிமை முறையிருந்தது. குழந்தைகள் இறந்தவுடன் கொலை செய்யும் பழக்கமுமிருந்தது. 1937–இல் 20 லட்சம் அடிமைப் பெண்கள் சீனாவில் வாழ்ந்ததாக ஆவணங்களிருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளாக – இன்னும் சொன்னால் இரண்டாம் உலக மகா யுத்தம் வரை சீனாவின் மக்கள் நிலங்களை மொத்தமாக, சொந்தமாக வைத்திருந்த ஜமீன்களின் பிடியில் தான் இருந்தார்கள்.

கான்பூசியல் தத்துவங்கள் அந்த மக்களை நிலக்கிழார்களுக்கு ஒட்டுமொத்தமாக அடிமையாக வைத்திருந்தது.

அது முற்போக்கு சிந்தனைகளுக்கு முட்டுக் கட்டையாக இருந்தது. அடுத்தவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு வக்காலாத்து வாங்கியது. சீனாவில் என்ன வழக்கிலிருந் ததோ, அதுவே நீடிக்க வேண்டும் என அந்தத் தத்துவம் சொன்னது.

# சீனாவின் பண்பாடும் பெண்களும்



இந்த சிந்தனை ஓட்டத்தைப் பெற்ற ஒரு சமுதாயத்தில் பெண்களில் உரிமைகள் என்ற பேச்சே இல்லை.

## இந்து இசம்

இந்து மதத்திலும் பெண்கள் ஏறத்தாழ இப்படியே நடத்தப்படுகிறார்கள்.

"நியோக் "Niyoq" என்ற தத்துவம் பெண்ணி னத்தின் இழிவு. ஒழுக்கக்கேட்டின் உச்சம்.

இந்த நியோக் – என்ற தத்துவத்தின் கீழ் ஒரு பெண்ணால், ஆண் குழந்தையைப் பெற்றிட இயலவில்லையென்றால், அவள் தன் கணவனை விடுத்து வோறொரு ஆணுடன் உறவு வைத்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றிட வேண்டும்.

நேர்மையாக சிந்திக்கும் இந்து ஆண்களே, இந்த ஒழுக்கக்கேட்டை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

நல்ல ஒழுக்கத்தை உயிராகக் கருதும் அனை வரும் இதனை எதிர்த்தாக வேண்டும் என்றொரு நிலையைத்தான் எடுக்க முடியும், எடுக்க வேண்டும்.

எந்தப் பெண்ணாலும் இப்படியொரு அவமா னத்தைத் தாங்கிட இயலாது.

இந்துக்களிடையே 'அஷிறா' என அழைக்கப் படும் மணமுறை, தந்தை, மகளை ஒரு விலைக்கு விற்று விடுவதேயாகும். அவளை வாங்குபவன் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம். அவளுக்குத் தந்தையின் சொத்துக்களிலோ, தன்னை வாங்குபவனின் சொத்திலோ எந்த பாத்யதையுமில்லை.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொட்டுக் கட்டும் முறை. அதாவது பெண்களை கடவுளுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் முறை இன்றும் வழக்கத்திலிருக்கின்றது.

இந்தத் தொட்டுக்கட்டும் முறையின் மூலம் அவள் ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் மனைவி யாக்கப்படுகின்றாள். அதனால் யார் வேண்டு மானாலும் அவளைத் தன் மனைவியைப்போல் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உண்மையைச் சொன்னால் அவள் கோயில் அறங்காவலர்கள், பூசாரிகள், தர்மகர்த்தாக்கள் இவர்களின் போகப் பொருளாகப் பயன்



பட்டாள்.

கோயிலுக்கு வரும் உயர்ந்த மனிதர்கள் என அழைக்கப்படும் ஒழுக்கக்கேடர்களுக்கும் அவளே விருந்து.

வேதகாலங்கள், புராணகாலங்கள் இவற்றில் பெண்கள் போரில் கொடுக்கப்படும் வெற்றிப் பொருளாக கருதப்பட்டாள்.

வெற்றி பெற்றவர்கள் பெண்களைத் தங்களுக்குப் போரில் கிடைத்தப் பொருளாக அந்தப் பெண்களைக் கவர்ந்து சென்றார்கள்.

இந்தத் திருமணங்கள் உடைக்கவியலாதவை. விபச்சாரம், கணவனுக்குத் துரோகம் இவை போன்றவை நிகழ்ந்தாலும் கணவனிடமிருந்து மனைவிகள் பிரிந்திட இயலாது.

அதேபோல்கணவன்இறந்துபோய்விட்டால் கூட மனைவி அவனிடமிருந்து விடுதலையைக் கோரிட இயலாது.

கணவன் இறந்துவிட்டால் மனைவியை அதே உடன் கட்டையில் வைத்து எரித்திடும் "சதி" வழக்கம் கோரமானது. கொடுமையானது.

விதவைப் பெண்கள் இன்றைக்கும் அவமானத்தின் அடையாளமாகவும், அவமானச் சின்னமாகவும், அறுவறுகத்தக்கப் பொருளா கவும் பார்க்கப்படுகின்றார்கள். உடன் கட்டை ஏறாத பெண்கள் காலமெல்லாம் சமுதாயத்தின் வெறுப்புப் பார்வையால் வெறுப்பான நடவடிக் கைகளால் எரிக்கப்படுகின்றாள். இந்த நித்திய வெப்பத்தைவிட ஒரே நாளில் உடன் கட்டையில் எரிந்துவிடுவதே மேல் எனக் கருதுகின்றாள். அந்த அளவுக்கு அவளது வாழ்க்கை அலைக்கழிக்கப் படுகின்றது.

மகா பாரதத்தில் பெண்களின் நிலை என்ற

நூலில் பேராசிரியை இந்திரா அவர்கள் இப்படி எழுதுகின்றார்கள்.

1) ''பெண்களைவிடப் பாவமான படைப்புகள் எதுவுமில்லை. பெண் எரியும் நெருப்பு கத்தியின் கூரிய முனை. அவளது உடல் இவை அனைத்தும் சேர்ந்ததுதான். அதனால் ஆண்கள் அவளை நேசிக்கக்கூடாது. காரணம் அவள்தான் அழிவு.''

2) மனுவின் விதிப்படி ஒரு பெண் தன் விருப்பப்படி எதையும் செய்திடக்கூடாது. அவள் தன் விருப்பப்படி இயங்கும் உரிமை இல்லாதவள்.

3) அவள் தன் சொந்த வீட்டில்கூட எதையும் தன் விருப்பப்படி செய்திடக் கூடாது.

4) குழந்தைப் பருவத்தில் ஒரு பெண் தன் தந்தையைச் சார்ந்து இருந்திட வேண்டும். இளமையில் அவள் தன் கணவனைச் சார்ந்து இருந்திட வேண்டும். அதன்பின் – கணவனுக்குப் பின் தன் மகன்களைச் சார்ந்து இருந்திட வேண்டும். இப்படி அல்லாமல் அவள் ஒருபோதும் தன் இஷ்டப்படி அல்லது விருப்பப்படி செயல்பட்டிடக் கூடாது.

Sir, பண்டாரக்கர் என்பவர் ''பாவம் செய்த ஆத்மாதான் பெண்ணாகப் பிறக்கும். இப்படியொரு எண்ணத்தைத்தான் பகவத்கீதை ஏற்படுத்துகின்றது.''

## புத்த மதம்

5) புத்த மதத்தின் அடிப்படைப் பார்வையே தவறானது. பெண்களுடனிருந்தால் முக்தி அடைய முடியாது, என்பது புத்த மதத்தின் அடிப்படைகளுள் ஒன்றானது.

இதுவே புத்தமதம் பெண்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை பறைசாற்றிடப் போதுமானது.

திருமணமுறை என்பதும், அதோடு தொடர்புடைய மண வாழ்க்கை என்பதும் புத்த மதத்திற்கு அறுவெறுப்பானவை. உலக இன்பங்களை அழிக்க வேண்டும் என்பது அவர்களின் இலக்கு. அதற்காக உழைத்திட வேண்டும், அதற்கான அடிப்படைத் தகுதி திருமணம் செய்யாமருப்பதாகும்.

வரலாற்று ஆய்வாளர் : வெஸ்ட்டான் மார்க், ஆண்களைக் கெடுக்கும் அத்தனை கவர்ச்சியும் பெண்களிடம் உண்டு. உலகில் மிகவும் ஆபத்தானவர்கள். பெண்கள் ஆண்களின் மனதை எல்லா நிலைகளிலிருந்தும் திருப்பிடும் தனித் தன்மைக் கொண்டவர்கள்.

புத்தமதம் பெண்களைகப் பற்றி என்ன சொல்லுகின்றது என்பதை 'பெற்றானி' என்ற புத்தமத அறிஞர் 'World's Religion என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

''அவள் அளவிட இயலாத ஆழம். நீரில் அலையும் மீனைப் போன்றவர்கள். எந்த இலக்கும் இல்லாதவர்கள். அவளிடம் உண்மை தான் பொய். பொய்தான் உண்மை.''

## கிருஸ்தவம்

கிருஸ்தவத்தின் மொத்தக் கோட்பாடும் ஆதி பாவம் அதாவது Original Sin என்ற கொள்கையைச்சுற்றியே வருகின்றது. இந்த ஆதி பாவத்திற்கு பெண்களே முழுமையான காரணம் என்கின்றது.

பைப்பிள் இப்படிக் கூறுகின்றது :

''அதற்கு ஆதாம், என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரியானவள் அவ்விருட்டத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நான் புசித்தேன், என்றார்.'' ஆதியாகமம் : அதிகாரம் 3 :12 Genisus : III : 12

ஏவாள்முதலில்அந்தப்பாவத்தைச்செய்தாள். ஆதாமிற்கு வீழ்ச்சியை ஏற்படுத்தினாள். ஆகவே மனித இனத்தின் பாவங்களுக்கெல்லாம் அவளே பொறுப்பு. அதனால் கடவுள் அவரது ஒரே மகனை, ஜீசஸ் கிரைஸட்–ஐ சிலுவையில் அறையச் செய்தார். அதுவும் மனித இனத்தின் பாவங்களைக் கழுவுவதற்காகத்தான், அவளால் மனித குலத்தின்பாவத்தை அவர் இரத்தத்தால் கழுவிட வேண்டியதாயிற்று. இது கிறிஸ்தவ நம்பிக்கைகளின் சுருக்கம்.

இங்கே நான் புதிய ஏற்பாட்டின் சில வசனங்களை என்னுடைய விளக்கங்கள் எதுவுமின்றி எடுத்து வைக்கின்றேன். அவற்றின் வழி, கிருஸ்தவத்தில் பெண்களில் நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவளை பரலோகத்திற்குச் சொந்தமானவர்கள் ஏன் புறக்கணிக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

"இதோ மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும் பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவை என்றும் சொல் லப்படும் நாட்கள் வரும்" லூக்கா – 23:29

"நீங்கள் எனக்கு எழுதிய காரியங்கள் குறித்து நான் எழுதுவது என்னதென்றால், ஸ்தீரியைத் தொடாமலிருப்பது மனிதனுக்கு நல்லது." கொரித்தியர் – 7:1

(ஆனால் பிந்தைய வசனங்கள் மண வாழ்க் கைக்கு யோசகைள் சொல்லுகின்றன)

"விவாகமில்லாதவர்களையும் கைம் பெண் களையும் குறித்து நான் சொல்கிறதென்ன வென்றால் அவர்கள் என்னைப்போல் இருந்து விட்டால், அவர்களுக்கு நலமாயிருக்கும்.

"எல்லா மனுஷரும், என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். அதிலும், அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு. அது ஒருவனுக்கு ஒருவிதமாகவும், மற்றொருவனுக்கு வேறு விதமாகவுமிருக்கிறது." – கொரித்திரியர் – 7:7

"ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடா திருந்தால் விவாகம் பண்ண கடவர்கள். வேகிற தைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்." கொரித்திரியர் – 7:8,

"நீ மனைவியோட கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட்ட வகைதேடாதே! நீ மனைவி இல்லாதிருந்தால் மனைவியதைத் தேடாதே!" கொரித்திரியர் – 7:27

"நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்பு கிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்கு உரியவைகளுக்காகக் கவலைப்படுகின்றான்."

"விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாய் இருக்கலாமென்று உலகத் திலுள்ள வைகளுக்காகக் கவலைப்படுகின்றான்" கொரித்திரியர் – 7:32, 33

"இப்படியிருக்க அவளை விவாகம் பண்ணிக் கொடுக்கிறவனும், நன்மை செய்கின்றான், கொடாதிருக்கிறவனும் அதிக நன்மை செய் கின்றான்." கொரித்திரியர் – 7:38

இதுபோன்ற வழிகாட்டுதல்கள் பெண்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும், ஆவேசப்படுத்தும்.

புனித பால், அவர்தான் கிருஸ்தவத்தின் முன்னணி சந்நியாசிகளில் ஒருவர். அவர் கூறுகின்றார்.

"பெண்கள் அமைதியாக எல்லா அடிமைத் தனத்தையும் கற்கட்டும்" எந்தப் பெண்ணும், எனக்குப் பாடம் கற்பிக்க வேண்டாம். அதே போல் ஆண்களின் அதிகாரத்தை, உரிமைகளை அவள் பறித்திட வேண்டாம். அவள் மௌன மாகவே இருந்திட வேண்டும். ஏனெனில் ஆதாமே முதலில் சிருஷ்டிக்கப்பட்டார். அதன் பின்னர்தான், ஏவாள் படைக்கப்பட்டாள். ஆதாமை (சைத்தான்) ஏமாற்றிட இயலவில்லை. ஆனால், ஏவாள்தான் ஏமாற்றப்பட்டார். பெண்ணே எல்லையை மீறினாள்."

புனித டெர்டியுரியன் 'St. Tertullian' கூறுகின்றார் :

பெண்களைப் பார்த்து, "நீங்கள் ஒவ்வொரு வரும் ஏவாள். கடவுள் உங்களுக்கு (பெண் களுக்கு) வழங்கியதண்டனைஇன்றும்தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அன்றைய குற்றம் இன்ற ளவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பெண் களாகிய நீங்கள்தாம் சாத்தானின் நுழைவாயில், நீங்கள்தாம் அந்த மரத்தைத் தீண்டியவர்கள்.

நீங்கள்தாம் முதன்முதலில் தெய்வக் கட்ட ளையை மீறியவர்கள். சாத்தான் ஆதாமை தாக்குவதற்கான சக்தியைப் பெற்றிருக்காத போது, நீங்கள்தான், அவரை– ஆதாமை தெய்வத் தின் கட்டளையை மீறிடச் செய்தீர்கள். தேவன் மனிதன் மீது கொண்டிருந்த கீர்த்திமிக்க நல் லெண்ணத்தை அழித்ததும் ஏவாள்தான். நீங்கள் தெய்வத்தின் கட்டளையை மீறியதால் தேவனின் மகனே இறந்திட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

ஆண் மக்களிடம் நான் கற்புடையவர்கதைத் தேடினேன். நான் யாரிடமும் காணவில்லை. காலப்போக்கில் நான் அதை சில ஆண்களிடம் கண்டேன். ஓர் ஆண் பல ஆண்களைக் கற்புடை யவனாக ஆக்குவதையும் கண்டேன். ஆனால், பெண்கள் எவரிடமும் அதைக் காணவில்லை என்கின்றார் புனித கிரிகோரி தௌம் மேட்டூர்கள் : St. Gregory Thaumaturgus. பெண்களின் நிலை ஓர் ஒப்பாய்வு. By நுஸ்ரத் அஃஸர்,

– தமிழில் MGM

– இன்ஷாஅல்லாஹ் தொடரும்

# சமையலறையில் கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்தி!



## மருத்துவர் கு.சிவராமன்

கொரோனா நோய் தொற்றும் ஆபத்திலிருந்து நம்மைக் காக்க சில வழிகளை அரசு சொல்கிறது. முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், கைகளை அடிக்கடி முறையாகக் கழுவுதல் ஆகிய மூன்றே அவற்றில் முக்கியமானவை. இந்த மூன்றைப் போலவே வலிமையான நோய் எதிர்ப்பு சக்தியும் அவசியம்!

மற்ற மூன்று விஷயங்களையும் நாம் அறிவோம். வலிமையான நோய் எதிர்ப்பு சக்தியை எப்படிப் பெறுவது?

கொரோனா வைரஸை எதிர்கொள்ளும் அளவுக்கு நம் உடலின் நோய் எதிர்ப்பாற்றலுக்கு என்ன தேவை என்றால் ஜிங்க், புரதம், வைட்டமின் சி மற்றும் வைட்டமின் டி ஆகிய நான்கும்தான்! உலக நாடுகள் அனைத்திலும் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெறும் எல்லோருக்கும் இந்த நான்கு சத்துக்கள் அடங்கியுள்ள மாத்திரைகளைத்தான் கொடுக்கின்றனர். உடலில் இவை சீராக இருந்தால், வைரஸை சமாளிக்கும் பணியை நம் உடலே பார்த்துக்கொள்ளும்.

இப்படி மார்த்திரைகளால்தான் இந்த சத்துக்களைப் பெற வேண்டும் என்பதில்லை! நம் சமையலறையிலே இவை எல்லாம் கிடைக்கின்றன.

காலையில் காபி, டீ குடிப்பதற்கு பதிலாக இஞ்சி – எலுமிச்சை சாறு பருகவும், ஐந்து மில்லி எலுமிச்சை சாறு, ஐந்து மில்லி இஞ்சி அத்துடன் 150 மில்லி வெது வெதுப்பான தண்ணீர் கலந்து குடிக்க வேண்டும். இரவு சுக்கு மல்லிக் காபி எடுத்துக் கொள்ளலாம். காலை உணவிற்கும் மதிய உணவிற்கும் இடையில் 11 மணியளவில் ஏதாவது குடிக்க வேண்டும் என்று தோன்றினால் நெல்லிக்காய் ஜூஸ் குடிக்கலாம். இரண்டு நெல்லிக்காய்களைத் துண்டாக்கி சாறு எடுத்தால், நெல்லிக்காய் ஜூஸ் ரெடி.

வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வேர்க்கடலை வேக வைத்து சாப்பிடுங்கள். இல்லையெனில் கொண்டைக்கடலை சுண்டல் சாப்பிடலாம்.

எலுமிச்சை சாறில் நம் உடலுக்குத் தேவையான வைட்டமின் சி நிறைய உள்ளது. ‘கொத்த மல்லி விதையான தனியாவில் இருக்கக்கூடிய தைமோன்கள் என்கிற மணம் தரக்கூடிய ஒரு பொருள் கொரோனா வைரஸின் ஸ்பைக் புரோட்டினை எதிர்கொள்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதுபோல இஞ்சி சுவாச மண்டலத்தில் தொற்றுகிற வைரஸ்களைக் கட்டுப்படுத்தும் சக்தி, பிரச்சகைளை ஏற்படுத்தும் வைரஸை இஞ்சியுடன் எதிர்கொள்ளலாம்.

அதேபோல் நெல்லிக்காய், ஒரு நெல்லிக் காய். இரண்டு ஆரஞ்சு பழங்களுக்கு சமம். நம் உடலுக்கு ஒரு நாளில் தேவையான வைட்டமின் – சி சத்தை, ஒரே நெல்லிக்காயில் பெற முடியும். இன்றைய ஔவையார் இருந்தால், அவருக்கு நெல்லிக்கனியையே அதியான் தருவார். “தமிழ் மூதாட்டியே! பிரமாதமான பணிகளை நீங்கள் செய்கிறீர்கள். ஆனால், கொரோனா கிருமிக்கு முதியோர்களையே அதிகம் பிடிக்கிறது. அதனால், நீங்கள் நலமாக இருக்க இந்த நெல்லியை சாப்பிடுங்கள்” என்று சொல்லியிருப்பார்.

நெல்லிக்காயை நேரடியாக சாப்பிடலாம். அல்லது ஜூஸாக குடிக்கலாம். ஆனால், வேக வைத்து மிளகாய்த் தூள், எண்ணெய் போட்டு தாளித்து சிவக்க சிவக்க சாப்பிடக்கூடாது.

நெல்லிக்காயிலிருந்து முழுப்பலை கிடைக்க விடாமல் இது செய்துவிடும்.

மாதுளை, சிவப்புக் கொய்யா, வாழை ஆகிய வையும் நோய் எதிர்ப்பாற்றலைத் தரக்கூடியவை தான்.

நிலக்கடலையில் புரம் நியை இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி வலுவாக இருக்க, புரதம் அவசியம். கூடவே இதில் ஜிங்க் சத்தும் செலி னியமும் இருக்கின்றன. இவை கூடுதல் பாது காப்பு கவசத்தை நமக்கு வழங்குகின்றன.

சுக்கு அரைத்து நெற்றியில் பற்று போடுவது, இஞ்சி இடித்து சாறு எடுத்துக் குடிப்பது, சுக்கு மல்லி கஷாயம் குடிப்பது இவை அனைத்தும் வைரஸை எதிர்கொள்ளும் செயல்கள்தான்.

முன்பெல்லாம், ‘இப்படிக் குடித்தால் வாயுக்கோளாறு நீங்கும், செரிமானம் நன்றாக இருக்கும், மலச்சிக்கல் இருக்காது’ என்பார்கள். ஆனால் வயிறை இதமாக்குவதுடன், எத்த னையோ கொடிய வைரஸ்களிடமிருந்து இவை நம்மைக் காப்பாற்றுகின்றன.

சுவாச மண்டல நோய் எதிர்ப்பாற்றலை உருவாக்குவதில்லை மிளகின் பங்கு முக்கிய மானது. உணவில் எங்கெல்லாம் காரம் தேவைப் படுகிறதோ, அங்கெல்லாம் மிளகு சேர்த்துக் கொள்ளலாம். நம் உணவான ரசம், நமக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்க உதவுகிறது. அதில் அதிக காரணத்தன்மை கொண்ட மிளகாய் வற்றலைத் தவிர இஞ்சி, பூண்டு, பெருங்காயம், சீரகம், மிளகு, கொத்தமல்லி என்று நிறைய மணமூட்டிகளைச் சேர்க்கிறோம். இவையெல் லாம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகமாக்கும் உணவுகள், அன்னாசிப் பூ என்று சொல்லக்கூடிய நட்சத்திரப் பூவும் நல்லது. இதை தேநீர் போலவோ, குருமாவில் கலந்தோ சாப்பிடலாம்.

ஜிங்க் சத்து நட்ஸ் வகைகளான முந்திரி, பாதாம் பருப்புகளில் உள்ளது. கீரை வகைகளி லும், கோவைக் காயிலும் அதிகம் உள்ளது. இவற்றை சாப்பிடலாம்.

இவையெல்லாம் பொதுவான பரிந்துரைகள். டாக்டர்களின் பரிந்துரைப்படி உணவுக் கட்டுப் பாட்டில் இருப்பவர்கள், தங்கள் டாக்டரிடம் ஆலோசனை பெறுவது அவசியம்.


வைட்டமின் டி நமக்கு இயற்கையாகவே



சூரிய ஒளியில் கிடைக்கிறது. வெளியில் செல்வ தைத் தவிர்க்க வேண்டும் என்றாலும், சூரிய வெளிச்சத்தைத் தவிர்க்கக்கூடாது. தினமும் இருபது, முப்பது நிமிடங்கள் சூரிய ஒளி படும்படி தோட்டத்தில் அல்லது மொட்டை மாடியில் வாக்கிங் போவது நல்லது.

நன்மை செய்யக்கூடிய பாக்டீரியாக்கள் ஏற்கனவே நம் உடலில் கோடிக்கணக்கில் உள்ளன. இந்த கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டாலும், நம் நோய் எதிர்ப்பு சக்தி நன்றாக இருந்தால், அது வந்த வேகத்தில் சென்று விடும். அப்படி நோய் எதிர்ப்பாற்றலை நம் உடலில் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று.



தலையங்கம்

# பிறர் நலம் நாடுதல்

முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு கூட்டம் தொடர்ச்சியாக பல அவதூறுகளை பரப்பி வருகிறது. முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்புணர்வைத் தூண்டி தனிமைப்படுத்தி இனப்படுகொலைகளை நிகழ்த்த திட்டம் இட்டு பல பொய்ச் செய்திகளைப் பரப்பி வருகிறது. முஸ்லிம்கள் தீவிரவாதிகள், தேச பக்தி இல்லாதவர்கள், இரக்கம் அற்றவர்கள். மனித குலத்திற்கு தீங்கு விளைவிப்பவர்கள் என பல அவதூறுகள் இப்படிப்பட்ட பொய்ச் செய்திகள் மூலமாக பல இடங்களில் முஸ்லிம்கள் பாதிப்புக்கு ஆளானார்கள். அதிலும் கொரோனா காலகட்டத்தில் முஸ்லிம்களால்தான் கொரோனா பரவியது என்று பரப்பினர். இப்படி பல வகையிலும் முஸ்லிம்களை துன்புறுத்தியும் கூட முஸ்லிம்கள் பிற மக்களுக்கு உதவக்கூடியவராக இருந்தார்கள்.

இந்தியாவின் சுனாமி, மழை, புயல், பூகம்பம் எனப் பல பேரிடர்கள் வந்தபோது முஸ்லிம்கள்அந்தஇடத்திற்குச்சென்றுதங்கள் சொந்த செலவில் அங்குள்ள மக்களுக்கு சாதி, மதம் பாராமல் உதவி செய்தார்கள். இந்த கொரோனா காலக்கட்டத்தில் மக்கள் வெளியே வர பயந்த காலக்கட்டத்திலும் கூட முஸ்லிம்கள் தங்கள் பொருளாதாரத்தை வாரி இரைத்தார்கள். பசித்தவர்களுக்கு தேடிச் சென்று உணவு கொடுத்தார்கள். அரசாங்கத்திற்கும் தங்கள் நிதிகளை கொடுத்தார்கள். புனித யாத்திரைக்காக வைத்திருந்த பணம், திருமணத்திற்காகவைத்திருந்தபணம், தங்கள் சொத்துக்களை விற்ற பணம், தாங்கள் சேமித்து வைத்திருந்த பணம் இவை அனைத்தையும் எந்தவித வெறுப்புணர்வும் இல்லாமல் சாதி, மத பேதமில்லாமலும் மக்களுக்கு உதவி செய்து மகிழ்ந்தார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக கொரோனா வால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடல் களை அவர்களின் உறவினர்கள் கூட அடக்கம்செய்யத்தயங்கியபோதுதங்களைப் பற்றி கூட கவலைப்படாமல் முஸ்லிம்கள் அவர்களின் உடல்களை எடுத்துச் சென்று அவரவர்களின் மத அடிப்படையில் அடக்கம் செய்தார்கள். தங்களை பழித்தவர்களின் உடல்களையும் கூட எந்த ஒரு சலனமும், வெறுப்பும் இல்லாமல் நல்ல முறையில் அடக்கம் செய்தார்கள். எந்தவித எதிர் பார்ப்பும் இல்லாமல் மகிழ்ச்சியோடு தங்கள் சொந்த பொருளாதாரத்தையும், உடல் உழைப்பையும் பிற மக்களின் நலனுக்காக செலவிடுவதில் முஸ்லிம்கள் முதன்மையான வர்கள். இப்படிப்பட்ட தியாக உணர்வு முஸ்லிம்களுக்கு எப்படி ஏற்பட்டது?

முஸ்லிம்கள் மனித குலத்தைப் படைத்த இறைவனை அஞ்சுகிறார்கள். அவனுடைய வழிகாட்டுதல்களை பின்பற்றுகிறார்கள். மரணத்திற்கு பின் உள்ள வாழ்க்கையை நம்புகிறார்கள். சுவனத்திற்கு செல்ல வேண்டும் என்கின்ற ஆசை அவர்களை இவ்வுலகத்தில் தங்கள் உயிர், உடல், உடைமை அனைத்தையும் தியாகம் செய்யத் தூண்டுகிறது.

முஹம்மத் நபி (ஸல்) மார்க்கம் (தீன்) என்பதே “நலம் நாடுதல்” தான் என்றார்கள்.

“எவரிடமிருந்து தங்கள் உயிர் மற்றும் பொருட்கள் பற்றி அச்சமற்று மக்கள் இருக்கிறார்களோ அவர் தான் உண்மையான இறை நம்பிக்கை உடையவர்” என்றார்கள். தன் பக்கத்திலிருக்கும் அண்டை வீட்டார் பசித்திருக்க, தான் மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறை நம்பிக்கையாளராய் இருப்பதில்லை என்றார்கள்”


"அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்" எதை (யாருக்கு)ச் செலவு செய்ய வேண்டும்? என்று நீர் கூறும் ''நல்லவற்றிலிருந்து (நன்மையை நாடி) எதனை நீங்கள் செலவு செய்தாலும் அதை தாய், தந்தையருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப் போக்கர்களுக்கும் (கொடுங்கள்) மேலும் நீங்கள் நன்மையிலிருந்து எதனைச் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை அறிந்து (தக்கக் கூலி) தருபவனாக இருக்கின்றான்.'' (அல்பகரா : 215)

"மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுடன் எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் தாய், தந்தையருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகில் உள்ள அண்டை வீட்டாருக்கும் (பிராயணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்பவர்க்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கு உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக கர்வமுடையவனாக, பெருமைஉடையவனாகஇருப்பவனை நேசிப்பதில்லை." (அன்னிஸா : 36)

"முகம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

'மனிதகுலம் முழுவதும் அல்லாஹ்வின் குடும்பமாகும். அல்லாஹ்வின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும், (அதாவது பலவீனமானவர்கள் மற்றும் ஆதரவற்றவர்களுடன்) எவர் நல்ல முறையில் நடந்து கொள்கிறாரோ அவர்தான் மனிதர்களிலேயே அல்லாஹ்வின் நேசத்துக்குரியவர்கள். (நூல் : பைஹகீ, மிஷ்காத்)

**சாந்தியும், சாமாதானமும் நிறைந்த மார்கமான இஸ்லாத்தை ஏற்று இவ்வுலகில் சாந்தியையும், சாமாதானத்தையும் நிலை நாட்டுவோம்.**






# தாருஸ் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பில் அன்பகம் – இஸ்லாமியக் கல்விக்கூடம் வழி இலவச உணவு விநியோகம்












கொரோனா இரண்டாவது அலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர், சாலையோரங்களில் யாசித்து வாழ்ந்த ஏதுமற்றவர்கள்தாம். இவர்கள் தங்கள் சொந்தங்களால் மட்டுமல்ல, அனைவராலும் கைவிடப்பட்டவர்கள். அரசாங்கங்களின் பார்வையும் இவர்கள் மேல் மிகவும் அரிதாகவே வீழ்ந்தது.

நம்மைப் போன்ற சமுதாய அமைப்புகள்தாம் இந்த மக்களின் காய்ந்த வயிற்றுக்கு பிரியாணியும், குஷ்காவும், நெய்ச் சோறும் வார்த்தது. அந்த வகையில் தாருல் இஸ்லாம் சார்பில் மொத்த ஊரடங்கு காலத்திலும் 1005 பேருக்கு முட்டையுடன் கூடிய நெய்ச் சோறு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.














*தினமும் 65 முதல் 70 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சுற்று வட்டாரத்திலிருக்கும் காய்ந்த வயிற்றுக்கு உணவளித்த அமைப்புகளுக்கும், சமூக ஆர்வலர்களும் அல்லாஹ் நிரம்ப நற்கூலி களை வழங்கிடுவானாக!*



# பிரெஞ்சை அதிர வைத்த கடிகாரம்

கலீஃபா ஹாருன் ரஷீத் (ரஹ்) அவர்கள் பிரெஞ்சு நாட்டு மன்னர் ஷார்லிமன் அவர்களுக்கு சுமார் நான்கு மீட்டர் உயரத்துடன் கூடிய பித்தளையால் செய்யப்பட்ட நீரால் இயங்கக்கூடிய கடிகாரத்தை பரிசளித்தார்.

அந்த கடிகாரக் கட்டமைப்பானது. ஒவ்வொரு மணிநேரத்தின் அடிப்படையில் அந்த நேரத்தின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உலோக பந்துகள் ஒன்றன் பின் ஒன்றாக செம்பு உலோகத்தின் மீது விழும் அந்த விழும் சப்தம் அரண்மனை முழுவதும் ஒரு அழகான ஓசையை உருவாக்கும்.

அதேபோல கடிகாரத்தின் உள்ளே பன்னிரண்டு வாயில்கள் இருக்கும் ஒவ்வொரு மணி நேரத்தின் அடிப்படையில் அந்த நேரத்தின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வாயில்கள் திறக்கும், அந்த வாயிலிலிருந்து குதிரை வீர பொம்மைகள் வெளியே வந்து கடிகாரத்தை சுற்றி வளம் வந்து பின்பு மீண்டும் வந்த இடத்திற்கே திரும்பச் சென்று விடும், பன்னிரண்டு மணிக்கு, பன்னிரண்டு மாவீரர்கள் ஒரே நேரத்தில் வெளியே வந்து, கடிகாரத்தை சுற்றி வளம் வந்து பின்பு மீண்டும் வந்த இடத்திற்கே திரும்பச் சென்று விடும் பிறகு வாயில்கள் மூடப்படும்.

அப்போதைய மடைய மதக்குருமார்கள் இந்த கடிக்காரத்திற்குள் ஏதோ சாத்தான் உள்ளது அதுவே உள்ளிருந்து இந்தக் கடிகாரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது.

எனவே ஒர் இரவில் கோடாரிகளை எடுத்து வந்து கடிகாரத்தை உடைத்தார்கள். கடிகாரத்தின் உபகரணங்களை தவிர வேறொன்றும் உள் இல்லை.

மன்னர் ஷார்லிமன் உடைக்கப்பட்ட கடிகாரத்தை நினைத்து மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தார்.

பல திறமையான கலைஞர்களை அழைத்து பழுதுபார்த்து சரிசெய்ய நினைத்தால் முயற்சி தோல்வியில் முடிந்தது .

கடைசியில் இதனை சரிசெய்ய மன்னர் ஹாருன் ரஷீதிடமே உதவிக் கோரலாமே என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

அப்போது மன்னர் ஷார்லிமன் கூறினார்:

‘அறியாமையின் காரணமாக முழு பிரான்ஸே பக்தாதின் மன்னர் ஹாருன் ரஷீதை அவமானப் படுத்தியதை மன்னர் ஹாருன் ரஷீத் தெரிய வருவதை நினைத்து வெட்கப்படுகிறேன்‘.

இந்த சம்பவம் அரங்கேறியது ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் இந்த சம்பவத்தின் மூலம் அப்பாஸிய பேரரசின் கலீஃபா ஹாரூன் ரஷீத் (ரஹ்)அவர்களது காலத்தில் முஸ்லிம்கள் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து எந்தளவிற்கு அறிவு வளர்ச்சியின் உச்சத்தை அடைந்தார்கள்.

ஆனால் அதே நேரத்தில் ஐரோப்பியர்கள் எந்த அளவிற்கு அறியாமையின் அடிப்பாதாளத்தில் வீழ்ந்துக் கிடந்தார்கள் என்பதற்கு சரியான உதாரணம்...

இதுவே தவ்ஹீதிய அறிவின் வளர்ச்சிக்கும் ஜாஹிலிய்யாவின் அறியாமை வீழ்ச்சிக்குமான வித்தியாசம்.

– தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.